ஆனந்த போதினி

செப்டம்பர், 1926

JL
m211, N15AB
N26·12·3
169842

"ஆனந்தபோதினி" 12-வது வருஷக் கொண்டாட்டத்திற்காக ஷை சந்தாதாரர்களுக்கு 31-10-1926-வரையில்

**இதன் விலை அணா 12.** தபாற்கூலி வேறு.

மற்றவர்களுக்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.

இத்தேதிக்குப் பிறகு எல்லோருக்கும் விலை ரூபா 1-8-0. தபாற்கூலி வேறு.

---

## இரண்டாம்பதிப்பு! இனியமதிப்பு!!

அழகிற்சிறந்த 16 ஆப்டோன் படங்களுடன் கூடியது.

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

# ANANDA ENGLISH INSTRUCTOR

## 700-பக்கங்களுக்குமேல்

திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

## ஆர்டருக்கு முந்துங்கள்! பின்பு கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள்!!

இரண்டாம்பதிப்பின் பிரதிகள் பல்லாயிரக் கணக்கில் பிரசுரித்[illegible], இருப்பில் கொஞ்சம் பிரதிகளே யிருக்கின்றன. [illegible] சீக்கிரத்தில் செலவாய்விடும். வேண்டுவோர் [illegible]குப் பெற்றுக்கொள்ளலாம். தவறின் மூன் [illegible]கபிறகே கிடைக்கும்.

[illegible]ப்பற்றிய நல்லபிப்பிராயங்கள் பல அறிஞரிடத் [illegible]கொண்டே யிருக்கின்றன. அவற்றை எமது [illegible]ி சஞ்சிகையில் வெளியிட்டுவருவோம்.

N15AB
N26·12·3

**தமிழ் கற்றறிந்த சகோதரர்களே !**

| | | |
|---|---|---|
| ஆ | ங்கிலந்தெரிய விரும்புகிறீர்களா? | ஆ |
| ன | ந்தமடைய வேண்டுமா? அளவற்ற த | ன |
| ந் | தேட ஆவலுண்டா ? அறிவு மிகு | ந் |
| த | அரசர் நேயம் பெற வேண்டுமா? அளவிலா | த |
| ஆ | தாயம் அடைய வேண்டுமா? ஆச்சரியமாக | ஆ |
| ங் | காங்கே கௌரவம் பெறவேண்டுமா? ஓ | ங் |
| கி | ய சுகம்பெற விருப்பமா? உத்தமராய் அ | கி |
| ல | த்தில் உலாவ வேண்டுமா? உயர்கு | ல |
| பா | லராக வேண்டுமா? ஆனந்த ஆங்கில | பா |
| ஷா | போதினியைப் படியுங்கள்; வேறு பா | ஷா |
| போ | தினிகளை நம்பாதீர்கள்; இப் | போ |
| தி | னியே எல்லா நன்மையும் தரும். மே | தி |
| னி | யில் தமிழர் எவர்க்கும் இ | னி |

மையாக

**எளிதில் ஆங்கிலம் போதிக்கத்தக்கது எது?**

உயர்ந்த இங்கிலீஷ் போதனுமுறையில் முதன்மை பெற்றுத்
தோன்றிய பெறுதற்கரிய பெரும்பயன் வாய்ந்த

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி

## ஒன்றே.

**இரண்டாம் பதிப்பு! இரண்டாம் பதிப்பு!! இரண்டாம் பதிப்பு!!!**

முற்பதிப்பைக்காட்டினும் இப்பதிப்பில், பாட முறைகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன; பற்பல கதைகளும் பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சரித்திர சுருக்கமும் சேர்க்கப்பட்டு அவற்றிற்குப் பொருத்தமான மிக்க அழகிய 16 ஆப்டோன் படங்களும் பளபளப்பான கடிதத்தில் மனதைக் கவரும் விதமாக அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

● எமது புத்தக விளம்பரங்களைப்போலவே வெளிவரும் போலி விளம்பரங்களுள்ள பல புத்தகங்களை நம்பி மோசம் போகாதீர்கள். இக்காலத்தில், இல்லாததை உள்ளதாகக் காட்டி விளம்பரங்களில் எழுதுவதே எங்கும் பலரிடத்திலும் வழக்கமாகிவிட்டது. ஆதலின், அத்தகைய போலி விளம்பரங்களிலுள்ள பகட்டுரைகளைப் படித்து மயங்கிவிடாதீர்கள்; ஆங்கிலத்தை உண்மையாகவே எளிதில் போதிக்கும் அரிய நூல் எதுவென்று ஆராய்ந்து பாருங்கள்; அவ்வாறு பார்த்தால் எமது புத்தகமே அதற்குத் தகுதியானதென்பது விளங்கும். இதற்குமுன் பல புத்தகங்கள் வெளிவந்திருப்பினும், சரியான பாட முறைகளுடன் வெளிவந்திருக்கும் எமது போதினியே முதன்மை பெற்றதாகும். ஒரு விஷயத்தைப்பற்றியே பலர்பல நூல்களை வெளிப்படுத்துவது இயற்கை. அப்படி வெளிப்படும் நூல்களில் ஒன்றின்பின் ஒன்றாகப் பின்னர் வெளிவருவன வெல்லாம் ஒன்றிலும் மற்றொன்று விசேஷமாக, 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினனே' என்ற முறைப்படி பழைய முறைகளைத் தள்ளிப் புதிய முறைகளைச் சேர்த்து உயர்ந்த அமைப்புக்களுடன் வெளிவருதல்கூடும். இருபது வருடங்கட்கு முன்னும் ஆங்கிலம்போதிக்கும் நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. இப்போது வெளிவந்தவை அவற்றிலிருந்து சிலமாறுதல்கள் அடைந்திருக்கின்றன; அவற்றுளெல்லாம் எமது புத்தகம் திருத்தமும், தெளிவும் பொருந்தியது. அதனாலேயே இதன் முதற்பதிப்பு, வெளியான சில தினங்களுக்குள்ளாகவே செலவாகி இரண்டாம்பதிப்பு வெளிவந்திருக்கிறது. ஆதலின், முன் வந்தவை உயர்ந்தவையென்றும், பின் வந்தவை தாழ்ந்தவை யென்றும் கருதாமல், இக்காலத்தில் எளிதாகவும் விரைவாகவும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுப்பது எதுவென்று பார்த்து, அத்தகைய முறையில் அமைந்து ஆங்கிலஞானப் பிரகாசத்தை எங்கும் எவரிடத்தும் பரப்பிவரும் எமது **"ஆனந்த ஆங்கில பாஷா போதினி"**யை வாங்கிப் படியுங்கள்.

எமது இந்திய லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.




**"ஆனந்த ஆங்கில பாஷா போதினி"** கண்ணைக் கவரும் சீமை காலிகோ பைண்டும், உயர்ந்த மதிப்பும், சிறந்த அமைப்பும் பொருந்தியது.

**"ஆனந்த ஆங்கில பாஷா போதினி"** பல்லாயிரக்கணக்கான தமிழர்க்கு ஆங்கிலம் போதித்து புகழ்பெற்றது; தமிழ்நாடெங்கும் பிரசித்தியடைந்தது.

**"ஆனந்த ஆங்கில பாஷா போதினி"** இங்கிலீஷ் தெரியாத தமிழ் மக்களின் உள்ளத்தில் நுழைந்து ஆங்கிலஞான வொளிபரப்பி அழகுடன் விளங்கும்.

**"ஆனந்த ஆங்கில பாஷா போதினி"** மற்ற புத்தகங்களைப்போல் மயக்கத்தைக் கொடாமல் எவர்க்கும் இலகுவான முறையில் இங்கிலீஷ்ஞானத்தை உண்டாக்கும்.

**"ஆனந்த ஆங்கில பாஷா போதினி"** தமிழ் நாட்டினர்க்கு ஆங்கிலம் போதிப்பதற்கென்றே நூதன அமைப்புடன் இணையற்றெழுந்ததாகும். தமிழில் இதைப்போன்ற ஒழுங்கான போதனுமுறை அமைந்த நூல் வேறு இல்லை,

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" பற்பல அறிஞரின் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று எப்போதும் நிலவுவது.

"**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**" எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை முதலியவைகள் இல்லாதது; பயனுள்ள விஷயங்களை நிரம்பியது; பொருட் பொருத்தங்கள் நிறைந்தது; தெளிவுள்ளது; சகலருக்கும் பயன்தருவது; நூதனம் நூதனமாகிய பாடமுறைகளிலும், அழகிய அமைப்புக்களிலும் இதுவே எல்லாவற்றினும் சிறந்ததென்பதை, இதனை வாங்கிப் படிப்போர், ஒருவர் எடுத்துச் சொல்லாமலே உணர்ந்துகொள்ளலாம்.

## "ஆனந்த ஆங்கில பாஷா போதினி" வெளியானதற்குக் காரணமென்ன?

நெடுங்காலமாக நம் நாட்டில் ஆங்கில துரைத்தனம் நிலைபெற்றிருப்ப
தால் சகல விஷயங்களிலும் இங்கிலீஷ் பாஷையே ஏற்றமடைந்து நிற்கின்
கிறது; எப்பேர்ப்பட்டவருக்கும் எந்நிலையிலும் எக்காரியத்திலும் எவ்விடத்தி
லும் அது மிக உபயோகமாகக்கூடியதா யிருக்கிறது; முடிவாகக் கூறுமிடத்
துத் தற்கால இயற்கையை அனுசரித்துத் தோட்டிவேலை செய்பவனுக்குங்
கூட அது அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய பாஷையா யிருக்கிறது.
அது தெரியாதவர்களுக்கு எவ்விடத்திலும் கௌரவமில்லை. எக்காரியத்தி
லும் பலவித இடையூறுகள் உண்டாகும்; நம் சுதேசிகளும்கூட ஒருவரோ
டொருவர் பேசிக்கொள்ளும்போது ஆங்கிலத்திற் பேச அதிக உற்சாகமுடை
யவர்களா யிருக்கிறார்கள். ஆனதால் ஆங்கிலந் தெரியாதவர்கள் நம் சுதேசிக
ளோடும் பேசமுடியாமல் நம்மவர்களாலேயே அவமதித்து ஒதுக்கித் தள்ளப்
படுகிறார்கள். சுதேசிகளுக்குள்ளேயே இங்கிலீஷ் தெரியாதவர்கள் கதி இப்
படியாகும்போது ஐரோப்பியர் முதலிய மேல்நாட்டாரோடு காரியத்தொடர்பு
வைத்துக்கொள்வோர்க்கு இங்கிலீஷ் தெரியாமலிருந்தால் அவர்களுக்கு
மிகுந்த சங்கட முண்டாகுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.
இன்னும் ஆங்கிலமானது தற்காலத்தில் எல்லா நாட்டிலும் பரவிய ஒரு பொ
துப் பாஷையாயிருப்பதால், தமிழ்தெரியாத மற்ற எந்த நாட்டினரோடும்
பேசி விஷயங்கள் தெரிந்துகொள்வதற்கும் அனுகூலமா யிருக்கின்றது. இத்
தகைய பெரும் பயன்களைத் தரும் இந்த ஆங்கில பாஷையைத் தெரிந்து
கொண்டவர்க்கு எண்ணற்ற நன்மைகளுண்டாகின்றபடியால் எல்லோருமே
இதனைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகின்றது. அங்ஙனம் தெரிந்
துகொள்வதற்காகவே இந்த அரும்பெரும "**ஆனந்த ஆங்கில பாஷா போதி
னி**"யை இப்பொழுது நாம் வெளிப்படுத்தி யிருக்கின்றோம்.

இதனைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்ளத் தொடங்குவோர் பணச்செல
வில்லாமலும், உபாத்தியாயர் உதவியில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமுமில்
லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்
ளலாம். சில ஆயிரக்கணக்கான பணச்செலவு செய்து 10-வருஷம் படிப்பத
னால் எவ்வளவு ஆங்கிலத்தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு
மாதம் அல்லது 40 நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து,
ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம்; இப்புத்தகமொன்று
வாங்கிக்கொண்டால் இங்கிலீஷ் கற்றுக்கொள்வதற்காக உபாத்தியாயருக்கு
அதிகச் சம்பளங் கொடுத்து அவரிடம் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டுபோய்
அலையவேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் இருக்குமிடத்திலேயே
அதனைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கி
லீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்
கப்பெற்றிருக்கின்றன. அவை வெகு சுலபமாக ஆங்கில ஞானத்தை உண்
டாக்கிவிடும்.



முக்கியமாக ஒவ்வொரு இங்கிலீஷ் எழுத்தின் உச்சரிப்பையும் தமிழ் எழுத்தில் காட்டி இங்கிலீஷ் உச்சரிப்பின் சப்தம் சரியாய்த் தொனிக்கும்படி அத்தமிழ் எழுத்துக்களுக்கு அடையாளங்கள் இடப்பட்டிருக்கின்றன. இந்தக் கிரமத்தின்படியே, ஒவ்வொரு இங்கிலீஷ் பதமும் இங்கிலீஷ் எழுத்துக்களிலும், தமிழ் எழுத்துக்களிலும் அமைக்கப்பட்டு அதன் அர்த்தம் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது:—

**B.P.F.** இந்த மூன்றெழுத்துக்களுக்கும் தமிழில் ப-எழுத்து ஒன்றே இருப்பதால் அவை அவைகளுக்கு ஸப்தம் தெரியும்படி (B—·பி) (P—பி) (F—எப்· என B·பி சப்தத்திற்திகு தமிழ் எழுத்து B-க்கு ·பி-க்கு முற்பக்கமும், F-க்கு எப்·-க்குப் பின்பக்கமும் ஓர் புள்ளி கொடுக்கப்பட்டிருக்கும். இம்மாதிரியாக (D.T.) இவை இரண்டிலும் (D-·டி) (T- டி) என D-·டி-க்கு முன்பக்கம் புள்ளியிருக்கும். (Come-கம்) (Gone-·கான்) என்னும் C எழுத்துப் பதத்திற்கும் G எழுத்துப் பதத்திற்கும் க-ஒன்றேயாகையால் G எழுத்துப் பதத்திற்கு முன் ஓர் புள்ளி கொடுத்திருக்கும்.

·பே ·டை ·தெட் ·கால் பா·ல்
Bay=குலை. Die=இற,சா. That=அது. Gall=பித்தம்.Fall=விழு

·கோவின்·ட் வென்ட் டு ·தி ·பெஜார் டு ·பை பி··க்ஸ்
**Govind went to the bazaar to buy Figs**=கோவிந்தன் அத்திப் பழம் வாங்கக் கடைக்குப் போனான்.

எனப் பதங்களும், வாக்கியத் தொடர்களும் அமைக்கப்பட்டிருக்கும். இங்கிலீஷ் எழுத்துக்களைமாத்திரம் சரியான சப்த உச்சரிப்போடு சிறிது நேரத்திற்குள் ஒருவரிடம் தெரிந்துகொள்ளலாம். அதன்மேல் இந்தத் தமிழ்ப் பாட முறையைப் படிக்கத் தொடங்கினால், தமிழிலேயே சரியான உச்சரிப்போடு இங்கிலீஷ் எழுத்துக்களையும், அவ்வெழுத்துக்களாலாகும் பதங்களையும், பதங்களாலாகும் தொடர்களையும், தொடர்களால் முடியும் பற்பல விஷயங்களையும் இலேசாகச் சில தினங்களில் கற்றுக்கொள்ளலாம். இங்கிலீஷ் எழுத்துக்களைச் சப்த தோஷமின்றி உச்சரிக்கும் விதங்களும், எழுத்துக் கூட்டும் முறைகளும், பதங்களைச் சேர்த்துப்படிக்கும் விதங்களும், இலக்கண விஷயங்களும் இப்புத்தகத்தில் மட்டுந்தான் சரியான முறையில் அமைந்திருக்கின்றன. இப்புத்தகத்தால் ஆங்கிலம் கற்றுக்கொண்டவர்கள் முறைப்படி பத்து வருஷங்கள் இங்கிலீஷ் படித்துத் தேர்ந்தவர்களைப்போலவே விளங்குவார்கள். இவ்வளவு அருமையான முறைகளுடன் இப்புத்தகம் அமைக்கப்பட்டிருப்பதோடு இதில் மனிதர் சம்பாஷணைக்கு முக்கியமாக இன்றியமையாதனவாகிய மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன முதலிய பிராணி வர்க்கங்களைப்பற்றிய விஷயங்கள், மரங்கள், செடிகள், கொடிகள், புற்பூண்டுகள், மலை, கல் முதலிய தாவர வர்க்கங்களைப்பற்றிய சாமான்கள், மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள், அவற்றின் சம்பந்தமான ஐம்புலன்கள் முதலியவை சம்பந்தமான விஷயங்களும், நாள், கிழமை,மாதம், வருடம், கிரகங்கள். நக்ஷத்திரங்கள் முதலிய பற்பல விஷயங்களும், மனிதரின் செய்கை, பண்பு, ஆகாராதிகள் முதலியவைகளைப்பற்றிய செய்திகளும், கோர்ட் நடவடிக்கைகள், வியாபாரம், கைத்தொழில், பயிர்த்தொழில் முதலியவற்றைப்பற்றிய விஷயங்களும், உத்தியோக முறைகளையும், இராஜாங்க நீதிகளையும் பற்றிய செய்கைகளும், கடிதம், பத்திரம், விண்ணப்பம் உத்தரவு முதலியன எழுதும் விவரங்களும், சிறு வியாசங்களும், பழமொழிகளும், சிறு கதைகளும், பாரத கதைகளும், இன்னும் பற்பலவிதமான கதைகளும், விவரமான ஆங்கில இலக்கணமும் இன்னும் அளவில்லாத அநேகம் செயல்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன,

அவற்றையெல்லாம் இதன் கீழ்வரும் விஷய அட்டவணையால் தெரிந்துகொள்ளலாம். அவற்றினாலேயே இப்புத்தகம் சில தினங்களில் ஆங்கிலஞானம் உண்டுபண்ணுமென்பது நன்கு விளங்கும்.

இது, தமிழ்மாத்திரம் தெரிந்து ஆங்கிலம் தெரியாமலிருக்கும் சகலருக்கும் பயன்படக் கூடியதாயினும், முக்கியமாக மணியகாரர், கர்ணம், வில்லேஜ் முன்சீப் முதலிய கிராம வேலைக்காரருக்கும், சிலோன் தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்கட்கும், மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களிலுள்ள மேஸ்திரிமார்களுக்கும், துரைமார்களிடம் வேலைசெய்யும் பட்லர், மேட்டி, கூக். ஆயான், பாய், தோட்டமேஸ்திரி, கோச்மேன் முதலியவர்களுக்கும் மிக்க உதவிசெய்யக்கூடியது. இன்னும் இங்கிலீஷ் தெரியாத கிராமவாசிகள் பலரும் இதனைப் படித்தால் இங்கிலீஷ் பேசவும், எழுதவும் தெரிந்துகொள்வார்கள். முடிவாகக் கூறுமிடத்துத் தமிழர்கள் எல்லோருமே இதனை வாங்கிப்படிக்கத் தொடங்குவார்களாயின் இங்கிலீஷ் தெரியாதவர் எவருமே யிராரென்று திண்ணமாகச் சொல்லலாம்.

## இப்புத்தகத்திலடங்கியிருக்கும் விஷயங்கள்:—

கடவுள் வணக்கம், இங்கிலீஷ் எழுத்துக்களின் நெடுங்கணக்கு, ஷை அச்செழுத்து, கையெழுத்து, பெரிய எழுத்து, சின்ன எழுத்து, உயிரெழுத்து, மெய்யெழுத்து, எழுத்துக்களின் ஓசை, உச்சரிப்பு, வார்த்தைக்குறிகள்—கமா, ஸெமிகோலன் முதலியவை, ஓரெழுத்துமொழிகள், ஈரெழுத்து வார்த்தைகள், வாக்கியங்கள், மூன்றெழுத்துச் சொற்கள், நான்கெழுத்துச் சொற்கள், அவற்றின் வாக்கியங்கள், ஆறெழுத்துக்களுக்கு மேற்படாத சுலபமான சொற்கள், நீண்ட உயிரெழுத்துச் சப்தமொழிகள், அவற்றின் வாக்கியங்கள், காலம், சிறிய வாக்கியங்கள், சம்பாஷணைகள்—நமது சக்கரவர்த்தி, சந்தை, இரண்டு சிநேகிதர் சம்பாஷணை, இரண்டு சிநேகிதர் வீதியில் சந்தித்தல், தகப்பனும் குமாரனும், உபாத்தியாயரும் மாணாக்கரும், கிண்டிப் பந்தயம், கையெழுத்தின் மாதிரி, மனுவாளர் துரையைப் பார்ப்பது, பட்லர், பாய், கடியாரத்தைப்பற்றிய சம்பாஷணை, கோகிலாவுக்கும் ஜகதாவுக்கும் சம்பாஷணை, மேட்டி, கங்காணி, கூலிகளுக்காகக் கங்காணியின் அச்சாரம், மருந்து கொடுப்பது, அரிசி கொடுப்பது, குசினிக்காரன், விளக்கைக் கவனிக்கிற மேட்டி, தண்ணீர்க்காரன், ஆயாள் — பிரபஞ்சத்தின் சாதாரண விஷயங்களின் சொற்கள், பூமி விஷயமான சொற்கள், ஜலசம்பந்த சொற்கள், நெருப்பின் விஷய சொற்கள், வாயுவைச்சேர்ந்த சொற்கள், வாரத்தின் நாட்கள், வருஷத்தின் மாதங்கள், வருஷ ருதுக்கள், மனிதஜாதியைப் பற்றிய சொற்கள், மனிதரின் வெவ்வேறான தசையின் சொற்கள், மனிதர் அவயவங்களின் சொற்கள், மனித சரீரத்தின் உட்புற ஸ்தானங்கள், அவைகள் வெளிப்படுதல் சம்பந்தமான சொற்கள், சரீரத்தின் ஊனங்களைப்பற்றிய சொற்கள், குண விசேஷங்களைச் சார்ந்த சொற்கள், இந்திரியங்களுடன் சேர்ந்த மொழிகள், வியாதிகளின் சம்பந்தமான வார்த்தைகள், ஔஷதங்களைச் சேர்ந்த மொழிகள், ஔஷதமுறை, ஆத்மாவினுடையவும் அந்தக்கரணங்களினுடையவுமானசொற்கள், போஜனத்தையும் பானத்தையும்குறித்த வார்த்தைகள், ஆடை முதலியவற்றைப்பற்றிய சொற்கள், கட்டிடத்தின் சாமான்களைச் சேர்ந்த சொற்கள், வீட்டையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் பற்றியவை, தொழில் ஆயுதங்கள் சம்பந்தமானவை, பயிர்த்தொழிலைச் சேர்ந்தவை, வர்த்தகத்தைச் சேர்ந்த வார்த்தைகள், நியாய ஸ்தலத்தைச்சார்ந்தவை, இராஜ்ஜியம் நகரம் முதலியவற்றைச் சேர்ந்த சொற்கள், வித்தை சாஸ்திர சம்பந்தமானவை, மாதாகோவில் விஷயமானவை, வாகனங்களையும் அவற்றின் சாமான்களையும் சேர்ந்த வார்த்தைகள், காய்கறிகளைப்பற்றியவை, விருக்ஷம்



பழம் புஷ்பம் முதலியவைகளைச் சேர்ந்தவை, மிருகங்களைச் சேர்ந்த சொற்கள், ஊர்வனவற்றைப் பற்றியவை, மச்சங்களைச் சேர்ந்த மொழிகள், உலோகங்களைச் சேர்ந்த சொற்கள், இரத்தினங்கள் முதலியவற்றைச் சேர்ந்த சொற்கள், யுத்தத்தையும் சேனையையும் சேர்ந்த மொழிகள், சேனைகளின் ஆயுதங்களையும் சாமான்களையும் சேர்ந்த சொற்கள், கிரகங்களையும் ராசிகளையும் சேர்ந்த மொழிகள், ஆடல்களையும் உல்லாசங்களையும் குறித்தவை, ஜந்துக்களின் தொனிகளைக் குறித்தவை, முக்கியமான இந்துக்கள் பண்டிகைகள், கிறிஸ்தவர் பண்டிகைகள், பூரணாங்ககணித எண்கள், எண்ணின்பாகம், இந்திய நாணயமதிப்பு, இந்திய இங்கிலீஷ் நாணய மதிப்பு, பண்டங்கள் நிறுக்குமளவை, சதுர அளவை, சாராயம் பீர் முதலியவற்றின் அளவை, ஔஷதம் நிறுக்கும் அளவை, ஷில்லிங் பென்ஸில் இங்கிலீஷ் நாணயமதிப்பு, நீட்டல் அளவை, பென்ஸுக்குச் சரியான பவுண்டுகள், இங்கிலீஷ் தானிய அளவை, இலக்கணம், சம்பாஷணை சம்பந்தமான பாடங்கள்—பருந்தையும் தவளையையும் பற்றிய கதை, பூனையையும் பன்றியையும் பற்றிய கதை, தைரிய வாலிபனும் எருதும், ஒரு நல்ல வாலிபன், வேடனும் பெண்புலியின் குட்டியும்—பாங்கியும் வியாபாரமும், புஸ்தகங்களைப்பற்றிய சம்பாஷணை, பிள்ளைகள் கடமை, நானாவித சம்பாஷணைகள், தொடர்மொழிகள், பழமொழிகள், இங்கிலீஷ் மொழிகள், சுருக்கச் சொற்கள், கச்சேரிகளிலும், ரெவினியூ இலாகாவிலும் வழங்கும் சொற்கள், அனேக சிறு கதைகள், பாரதத்தில் 16 கதைகள், ஸ்ரீ கிருஷ்ணன் சரிதையின் சுருக்கம், பலவிதமான கடிதங்கள் எழுதும் முறை, விற்கிரய பத்திரம், உயில்பாகபத்திரம் எழுதும் முறைகள், சந்திமுறை, முகூர்த்தப்பத்திரிகை எழுதும் விதம் முதலியவை.

## எமது புஸ்தகத்தைப்பற்றி
## பிறர் சொல்வதைக் கவனியுங்கள்.

நீர் 22-3-26-ல் அனுப்பிய புஸ்தகப் பார்சல் என் கைவசம் சேர்ந்து எனக்கு அளவற்ற திருப்திகொடுத்தது. நான் கொடுத்த சொற்ப விலைக்கு இவ்வளவு விலையுயர்ந்த நல்ல பயிண்டுசெய்த புஸ்தகம் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் அநேகமுறை ஒன்றுக்கும் உதவாத ஆங்கில புஸ்தகங்களுக்காக அதிகப்பணம் செலவுபண்ணி அவைகளை ஒருமுறை படித்து எறியும்படி நேரிட்டது. ஆனால் உங்கள் **ஆனந்த ஆங்கில பாஷா போதினி** ஒருவனுடைய ஆயுள் முழுமையும் அவனுக்கு கல்வி கற்பிக்க உதவும் என்பது திண்ணம்.

நீங்கள் இப்படிப்பட்ட அபூர்வமான எல்லோராலும் வாங்கி வாசிக்கக் கூடிய புஸ்தகத்தை வெளிப்படுத்தியதற்கு தமிழ் அறிந்த ஜனங்கள் உமக்குக் கடமைப்படவேண்டும்.

தெலுங்கு கன்னட பாஷைகளில் வெளியாகும் **ஆனந்த ஆங்கில பாஷா போதினி** புஸ்தகங்களுக்கு என் பெயரைப் பதிவு செய்துகொண்டு அவை வெளியானதும் ஒவ்வொன்றிலும் ஒரு காபி அனுப்பக் கோருகிறேன்.

**டாக்டர்-N. சிவப்பிரகாசம், L.M.P. 4-3-26.—ஊரா.**

தாங்கள் முன் அனுப்பிய '**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**'யை எனது நண்பர்கள் அனைவரும் எனக்கு வேண்டும் எனக்கு வேண்டும் என்கிறார்கள். இதைத் தீர்க்க என்னால் முடியவில்லை. ஆதலால் நீர் என் விலாசத்திற்கு முன் அனுப்பிய மாதிரியே இன்னும் 2 ஆனந்த ஆங்கில பாஷா போதினியை இந்த லெட்டர் கண்டஉடனே தந்திபோல் அனுப்பவேண்டும்.

**சி. பி. பி. கந்தசாமி செட்டி, சந்தா நெ. 987, குகை, சேலம்.**

தங்கள் ஆனந்தபோதினிச் சந்தாதாராகிய சித்திரைக்கண்ணு பிள்ளை யெழுதியது:—தாங்கள் வெளியிட்டிருக்கிற **ஆனந்த ஆங்கில பாஷா போதினி** என்னும் புஸ்தகம் இதற்குமுன் ஒன்று வருத்திப்பார்த்ததில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள மிகப் பிரயோஜனமா யிருப்பதால் என்னிஷ்டர்கள் 2 புஸ்தகம் வருத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதால் இன்னும் 2 புஸ்தகம் அடியிற் கண்ட என் விலாசத்திற்கு வி-பி-யிலனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**A. சித்திரைக்கண்ணு பிள்ளை.**

தற்சமயம் தாங்கள் அனுப்பிய '**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**'யைப் பார்வையிட்டேன். அதில் அனேக விஷயங்கள் போடப்பட்டு இருக்கின்றன. அதைப்பற்றி மிகவும் ஆனந்தத்துடன் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். மேலும் இதர புஸ்தகங்களைப் பார்க்கிலும் இது மேலானது என்று நானும் என் நண்பர்களும் உறுதியாகக் கூற முயல்கிறோம். தங்களுக்கு மேன்மேலும் ஆர்டர் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன். கடவுள் கிருபை செய்வாராக.

சே. வெ. ஷண்முகதாஸ், சந்தா நெ. 1791, கொழும்பு.

'**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**' என் கைக்குக் கிடைத்தது; கவனமாய் முதலிலிருந்து கடைசிவரைக்கும் பார்த்ததில் இது வெகு அருமையாகவும் கோர்வையாகவும் மாணிக்க ஆரம்போல் இருப்பதை அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். தாங்கள் அநிகநாள் முயன்று கவனமாய் இதில் விஷயங்களைச் சேர்த்து, அச்சிட்டு இதைச் சொற்ப விலைக்குக் கொடுத்துவருவது மெத்தவும் உபகாரமே. இதே புஸ்தகம் தெலுங்கிலிருந்தால் உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளும்,

**M. I. Joseph, Kodaikanal.**

தாங்கள் எனக்கு 19௳ வி. பி. போஸ்டில் அனுப்பிய '**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**' கிடைக்கப்பெற்றேன். ஆங்கிலம் கற்றுக்கொள்ள அவா உள்ளவர்களுக்கு அது ஒரு நல்ல புஸ்தகம். உங்கள் புஸ்தகத்தை என் சிநேகிதர் சிலருக்குக் காண்பித்தேன். அவர்களும் அதை நன்கு மதிக்கிறார்கள். தயவுசெய்து எனக்கு இன்னும் ஒரு காபி கூடியசீக்கிரம், வி. பி. போஸ்டில் அனுப்புவீராக.

N. ரங்கசாமி நாயுடு, கோயம்புத்தூர்—21-4-26.

அன்பார்ந்த ஐயா,

உங்களது நெ. 1151, 8-5-26-தேதி உள்ள லெட்டரும், வி. பி-யும் கிடைத்து, கவனித்துக்கொண்டேன். என்னுடைய நேயர்கள் தங்களது '**ஆனந்த ஆங்கில பாஷா போதினி**'யைப் படித்து ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் அவாவுற்றிருக்கிறார்கள். ஆகையினால் நான் தங்களை அடியில்கண்ட விலாசத்திற்கு வி-பி-மூலமாய் 3 காபிகள் 'ஆனந்த ஆங்கில பாஷாபோதினி' அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தங்களது அன்பார்ந்த பார்சலை எதிர்பார்க்கிறேன். நீங்கள் எனக்கு முந்தி அனுப்புவித்தமாதிரியே அனுப்பிவைக்கவேண்டும்.

**மு. ஒய்யூருபாகம் பிள்ளை, இராஜசிங்கமங்கலம்.**

---

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESEKVED.)

தொகுதி 12 } அக்ஷய௵ புரட்டாசிமீ ௧௨ { பகுதி 3
1926௵ செப்டம்பர்மீ 17௳

## கடவுள் வணக்கம்.

நில்லாது தேகமெனு நினைவுண்டு தேகநிலை
நின்றிடவு மௌனியாகி
நேரே யுபாயமொன் றருளினையை யோவிதனை
நின்றனுட் டிக்கவென்றால்
கல்லாத மனமோ வொடுங்கியுப ரதிபெறக்
காணவிலை யாகையாலே
கையேற் றுணும்புசிப் பொல்வாதே நாளுமுன்
காட்சியி லிருந்துகொண்டு
வல்லான ராயியம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல்செய்து
மனதின் படிக்கெலாஞ் சித்திபெற லாஞானம்
வாய்க்குமொரு மனுவெனக்கிங்
கில்லாமை யொன்றினையு மில்லாமை யாக்கவே
யிப்போ திரங்குகண்டாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (1)

என்னைத் தானின்ன வண்ணமென் றறிகிலா வேழை
தன்னைத் தானறிந் திடவருள் புரிதியேற் றக்கோய்
பின்னைத் தானின்ற னருள்பெற்ற மாதவப் பெரியோர்
தின்னைத் தானிக ராரென வாழ்த்துவர் நெறியால். (2)

ஏத மின்றித்தன் னடியிணைக் கன்புதா னீட்டும்
காத லன்பர்க்குக் கதிநிலை யீதெனக் காட்டும்
போத நித்திய புண்ணிய வெண்ணரும் பு[illegible]
காத தற்பா ரெனெவ்வா றுய்குவே னவி[illegible]. (3)

# அரும்பொருள் விளக்கம்.

1. “நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும், பெருமை யுடைத் திவ் வுலகு” என்று தேவாருளியபடி இந்த நிலவுலகத்தில் ஜெனனமெடுத்த வுயிர்களின் தேகம் நிலையற்ற தென்பதை நாம் பிரத்தியட்சமாய்க் கண்டுவருதலின் ஆசிரியரும் ‘நில்லாது தேகமெனு நினைவுண்டு’ என்றனர். அத்தன்மையான தேகம் காயசித்தியால் நிலைபெறச் செய்யுமாறு இறைவனே தேவரீர் மௌன தேசிகனாகவந்து நேரான உபாயமொன்றை அருள்செய்தீர். செய்துமென்ன? என் மூட மனமோ ஒடுக்கமுற்று உபரதியடையும் உபாயத்தை நாடவில்லை என்கிறார்.

‘நில்லாது தேகம்’ என்பதனை,

“ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிடப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தாரே”

என்று திருமந்திரமும் வற்புறுத்துதல் காண்க.

சரீரசித்தி வேண்டுமென்பதை அத் திருமந்திரமே,

“உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே”

என்று கூறுகின்றது.

காயசித்திக்குரிய உபாயத்தைக் காண்பது கல்விநலம் இல்லார்க்கு கைகூடாது. இதனையும் திருமந்திரம்,

“வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லாத வர்கள் அறிவு பலவென்பார்
எல்லா விடத்தும் உளனெங்கள் தம்மிறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே”

என்று கூறுகின்றது.

“[illegible]ாது வந்தீயுங் கண்ணனார்கண்ணும்
இ[illegible]ம கோடி யுறும்” என்று நாயனாரும்,

“எற்ப [illegible]ச்சி” என்று ஔவையாரும்,

ஆவணக் காப்பக
169842



“பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவால் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்”

என்று குசேலோபாக்கியானமும் கூறுகிறபடி, கையேற் றுண்ணும் புசிப்பும் ஒவ்வா தென்கிறார்.

ஆதலால், “அன்பர் பணிக்கென்னை யாளாக்கி விட்டக்கால், இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே” என்று இவரே மற்றோரிடத்தில் சொல்லியிருக்கின்றபடி இங்கும் ‘எந்நாளுமுன் காட்சியி.........ஞானம் வாய்க்கும்’ என்றுரைத்தனர்.

ஆகவே, இவ்விடத்தில் இறைவனை நோக்கி, உன் திருவருள் பெருமையாகிய வறுமையொன்றுமாத்திரம் என்னை யணுகாதபடி என்மீதிரக்கங் கொண்டு அருள்புரிய வேண்டுமென்பார் ‘ஒரு மனுவெனக்கிங்......இப்போதிரங்குகண்டாய்’ என்றனர்.

உபரதி = வெறுத்துத் தள்ளுதல்.

இயம நியமாதி = இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என அங்கயோகம் எட்டு.

இல்லாமை ஒன்றினையும் = உன் திருவருள் பெருமையாகிய வறுமையொன்றைமாத்திரம்.

இல்லாமையாக்க = ஒழிக்க.

2. “உன்னை நீ யுணர்வாயாகில் உனக்கொரு கேடுமில்லை” என்கிறபடி என்னை நானறியும் உபாயத்தை யருளவேண்டுமென்று இப்பாடலில் விண்ணப்பித்துக்கொள்கின்றார். “அறிவித்தா லன்றி யறியாவுளங்கள்” என்றதற்கேற்ப இறைவன் தெரிவித்தாலல்லாமல் தன்னைத்தானே யறிந்துகொள்ளுந் தன்மை ஆன்மாவிற்கில்லை.

3. தன்பா லன்புள்ளவர்கட்கே இறைவன் கிருபை புரிவானென்பார் ‘அன்புதா னீட்டும் காதலன்பர்க்குக் கதிநிலை யேதைக் காட்டும் போத’ என்றார்.

“அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற விசைந்தன
துன்புறு கண்ணியைந் தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமி னீரே”

என்று திருமந்திரங் கூறுவது காண்க.

ஏதம் = குற்றம்.

ஈட்டும் = செய்கின்ற.

கதிநிலை = முத்திநிலை.

போதா = அறிஞனே.

# ஆனந்தபோதினி

அக்ஷய ௵ புரட்டாசி ௴ ௧௨

## தேவாலய பரிபாலனம்.

உலக அமைப்பின் விசித்திரங்களை யுற்று நோக்கிய அறிவாளர் இத்தகைய அதிசய சிருஷ்டிக்குத் தலைவனொருவன் இருந்தே தீரவேண்டுமென்கிற துணிபுகொண்டு, சுருதி யுக்தியனுபவ வாயிலாய் அம் முதல்வனை வணங்கி வரவேண்டிய முறையில் நின்று வணங்கி, இன்புற்று வருகின்றனர். தங்களைப்போலவே ஆண் பெண் உள்ளிட்டார் எல்லோரும் தெய்வ நம்பகத்தில் ஸ்திரபுத்தி யுடையவர்களாய் விதிவிலக்குகளை யனுசரித்தொழுகி நலனடைய வேண்டுமென்னும் உத்தமநோக்கத்தை முன்னிட்டு வேதாகம ரீதியில் நாட்டின் பல பாகங்களிலும் தேவாலயங்களை ஸ்தாபித்தனர். ஆலயத்திருப்பணிகள் ஒழுங்காக நடைபெற்று வரவும் தக்க ஏற்பாடுகள் செய்துவைத்தனர்.

உலகம் சமாதான நிலையிலிருப்பதற்கு அரசன் நீதிவழாது செங்கோலாட்சி புரிந்துவரவேண்டும். அவ்வாட்சிக்குத் தெய்வசகாயம் அத்தியாவசியம். அதன்பொருட்டு அரசன் தேவாலய பரிபாலனத்தைக் கவனிக்கக் கடமைபூண்டவனாதல் வேண்டும். இப்படி அரசன் விளங்குவதற்குக் குடிவிளங்கவேண்டும். குடிவளத்திற்கு முக்கிய காரணம் கோயில் வளமே. ஆகையினாற்றான் "கோயில் விளங்கக் குடி விளங்கும்; குடி விளங்கக் கோன்விளங்கும்; கோன் விளங்க உலகம் சமாதான நிலைமையை யடையும்" என்று பெரியோர் கூறுகின்றனர். ஆலய வழிபாடு அன்பு வளருவதற்கும், அறிவு பெருகுவதற்கும், அருள் தழைத்தோங்குவதற்கும் ஹேதுவாகின்றது.



கோயில் சொத்திலிருந்தே நித்திய நைமித்திய பூசைகள், தீபம், திருமஞ்சனம், குருக்கள் முதலிய பரிவார சம்பளம், பிராகாரங்களில் முளைத்துவரும் புல் பூண்டுகளையும், தரையிற் கிடக்கும் கல் முள் முதலியவற்றையும் உடனுக்குடன் நிவர்த்திசெய்து ஆலயத்தை ஒழுங்குபடுத்திவைக்கும் ஆட்களின் கூலி ஆகிய இவற்றைக் குறைவின்றி நடத்திவரலாம். கோயில்சொத்தை வைத்தியசாலை, கல்விச்சாலை முதலிய இதரவிஷயங்களில் செலவிடுதல் உசிதமாகாது. பிரயாணிகளின் சுகாதாரத்துக்குரிய வசதிகளும் அச்சொத்தின் செலவிலிருந்தே ஏற்படுத்தவேண்டும். யாத்திரைக்காரர்கள் காணிக்கை செலுத்தவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் கூடாது. தெய்வ தரிசனத்துக்கு வருபவர் திருப்திகரமாய்க் கடவுளைச் சேவித்துத் தீர்த்தப் பிரசாதம் பெற்றுப்போவதில் கோயில் சிப்பந்திகள் அக்கிரமஞ் செய்தலுதவாது. அனாதரிக்கப்பட்ட கோயில்களையும் அனுகூலமான கோயில்சொத்தைக்கொண்டே கவனிக்கவேண்டும்.

தமிழரசர்கள் காலத்தில் கோயிற்பணிகள் செவ்வனே நடைபெற்று வந்தன. அவ்வாறே இப்போதும் நடந்துவரத் தெய்வாபிமானமும், பொதுநல நோக்கமும், போதிய அறிவும், நல்லொழுக்கமும் வாய்ந்தவரைத் தருமகர்த்தாக நியமித்தல்வேண்டும். கோயில் விவகாரங்கள் இப்படிப்பட்டவை யென்று நன்கறியாதவர்கள் நம்மவர்களி லனேகரிருக்கின்றனர். இந்த அறியாமைக்கு அடிப்படை மேனாட்டுக் கல்வியும், அதன் போக்கைப் பின்பற்றுதலும், சுதேசபாஷையின் அனாதரவும், அவைதீகரின் கூட்டுறவுமேயாம். இன்னவர் கோயில் பரிபாலனத்துக் கருகரல்லர். இதனை நாம் பெரிதும் கவனித்தல்வேண்டும்.

நாமரூபமின்றி ஒலிவடிவாயுள்ள எழுத்தை வரிவடிவாக்கி நாம் பயனடைந்து வருவதுபோல, நாமரூபமற்ற தெய்வத்திற்கும் "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந் தானே, தமருகந்த தெப்பேர்மற் றப்பேர்—தமருகந், தெவ்வண்ணஞ் சிந்தித் திமையா திருப்பரேல், அவ்வண்ணம் ஆழியானும்" என்றும், "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க் காயிரம், திருநாமம் பாடி நாம் [illegible]ள்ளேணங் கொட்டாமோ" என்றும் ஆன்றோர் கூறுகிறபடி நாமரூபம் ஏற்படுத்தி, தெய்வநினைவை நினைப் பூட்டுவதற்கு அதிமுக்கியமான ஆலயங்களைத் தாபித்து ஆங்கு அக்கடவுள் மூர்த்தத்தைப் பிரதிட்டை செய்து நாம் வழிபட்டுய்ந்து வருகிறோம். ஏனெனில் "ஆலயங்

"தொழுவது சாலவும் நன்று", "தெய்வமிகழேல்", "தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்" என்று முதியோர் மொழிந் துண்மையாலும், தெய்வபலமே மற்றெல்லாப் பலத்தினும் சிறந்ததாம்.

நமது இந்துதேசமானது தொன்றுதொட்டு சமயஞானத்தில் பிரக்யாதி பெற்று வருகிறதென்பது யாவரும் அறிந்ததொன்றே. ஆத்மார்த்தமான சமயஞானத்தை வளர்த்து முதல்முதல் அதை உலகிலுள்ள ஏனைய நாடுகளுக்குப் போதித்து வந்ததும் நம் இந்திய தேசமேயாகும். "கோயிலில்லாவூரிற் குடியிருக்க வேண்டாம்" என்பதன்றோ, நம்மவர்களுடைய முடிவான உபதேசம். மெய்ஞ்ஞானமும், ஈசுவரபக்தியும், ஆன்ம ஈடேற்றத்துக் குரியவைராக்கியமும் தழைத்துள்ள நாடே எந்நாளும் செழித்தோங்கும்.

நமது நாட்டின் உண்மையான நிலைமையை நம்மிற் பலர் உள்ளபடி முற்றும் அறிந்து கொள்ளாமலே தேசவாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஜனங்களுக்குள் அன்பு நெறி பாவுவதற்குத் தெய்வபக்தியே சிறந்த சாதனம். இதை முன்னிட்டே நமது முன்னோர்களால் தேவாலயங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டன. பலவாலயங்கள் தற்காலம் எந்நிலைமையி லிருந்து வருகின்றன என்பதை நாம் கவனியாமலே பாராமுகமா யிருந்து வருகிறோம். அவை எல்லாம் இப்போது மிகவும் சீர்கேடான நிலைமையி லிருக்கின்றன. அவைகளுடைய பரிசுத்தத் தன்மையும் பெருமையும் நமது கவனக்குறைவால் கீழ்நிலை யடையலாயின. மற்றும் அவை சுயநல நோக்குள்ள போலிவேடதாரிகள் வாழுங் குகைகளாகவும் மாறிவிட்டன. சில ஆலயங்கள் இருந்தவிடம் தெரியாமல் அடியோடு அழிந்துபோயுமிருக்கின்றன. நம் நாட்டுத் தேவாலயங்களை நாம் ஆழ்ந்துநோக்கின் நமது முன்னோர்கள் கொண்டுள்ள தெய்வப்பற்றும் சாஸ்திரோக்தமாகத் தேவாலயங்களை நிருமிப்பதிலுள்ள சிரத்தையும் என்ன அருமையானவை என்பது புலப்படவில்லையா? ஆ! ஆ! சிற்பவேலைகளின் பெருமைதான் என்னே? அவைகளைப் பார்த்து வியப்படையாத வெளிநாட்டாரும் உண்டோ? தேவாலயங்களைப் பார்க்கும்பொழுதே நமக்கு நமது நாட்டின் பூர்வீக சிற்பத்தொழிலின் விமரிசை நன்கு விளங்குகின்றதே. நமது பெரியோர்கள் நமக்குள் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்க ஏராளமான தேவாலயங்களை ஏற்படுத்தி அவைகளுக்குப் போதுமான நிலங்களையும் பொருள்களையும் உதவி



வந்தனர். தேவாலய தருமங்கள் தவறாமல் செவ்வையாக நடைபெறும்படி ஆங்காங்கே பல மடங்களையும் ஏற்படுத்தினார்கள்.

தேவாலயங்களில் சமயவளர்ச்சியைக் கருதி ஏற்படுத்தப்பட்ட பல மண்டபங்களெல்லாம் இப்போது பாழடைந்து கிடக்கின்றன. அந்த மண்டபங்களில் ஆலயத்தை நாடிச் சுவாமி தரிசனத்திற்காக வருகின்ற ஜனங்களுக்குச் சமய தத்துவம், ஒழுக்கம், அறம், அன்பு, நீதி முதலிய பல அரிய விஷயங்களைத் தக்கோர் உபங்யசிப்பது வழக்கம். அவ்விடங்களில் இப்பொழுது அம்மாதிரியான உபந்யாசங்கள் ஒன்றும் நடைபெறுவதே யில்லை.

ஆலயங்களின் சீர்கேட்டை உற்று நோக்கினால் மனம் பதறுகின்றது. பல ஆபாசமான காரியங்களுக்கு அவை நிலைகளாக விளங்குகின்றன. அறிஞர்களும், ஞானிகளும், அறவோர்களும் வெறுக்கக்கூடிய பல தீஞ்செயல்கள் ஆலயங்களில் நடைபெற்று வருகின்றன. உத்ஸவ காலங்களில் ஜனங்கள் கடவுளைச் சுலபமாகச் சென்று வணங்கமுடியாதபடி ஆலய சிப்பந்திகள் கொடுமைப்படுத்தி வருகின்றனர். சிதம்பரம், திருப்பதி, ஸ்ரீரங்கம்போன்ற பல பெரிய க்ஷேத்திரங்களிலுள்ள ஆலயங்களெல்லாம் உத்ஸவகாலங்களில் சுங்கச்சாவடிகளாய் மாறிவிடுகின்றன. நீண்டதூரம் பிரயாணம் செய்து கடவுளைத் தரிசிக்க வருகின்ற ஜனங்கள் பணக்குறைவால், தேவதரிசனஞ் செய்ய முடியாமல் வருத்தத்துடன் திரும்பிச்செல்லுகின்றனர். அவர்கள்எவ்வளவு கெஞ்சிக்கேட்டபோதிலும் ஆலயத்திலுள்ள ஊழியர்களும் அதிகாரிகளும் அவர்களுக்குச் சிறிதும் இரங்குவதில்லை. ஆலயங்களில் நடைபெறும் அக்கிரமங்களையெல்லாம் விரிக்கிற்பெருகும். அதிகாரிகளோ, பெரிய உத்தியோகஸ்தர்களோ சுவாமி தரிசனத்திற்காக வந்துவிட்டால் அப்போது ஆலய ஊழியர்களால் பொதுஜனங்கள் படுங் கஷ்டங்கள் அளவிடற்பாலனவல்ல.

நிற்க, ஜனங்களில் பலர் சங்கீதங்கேட்கவும், களிப் பாடல்களைக் கண்டு மகிழவுமே ஆலயங்களுக்குச் சென்று வருகிறார்களேயன்றி வேறில்லை. உண்மையாகக் கடவுளைக்கண்டு ஆலயத்தில் வழிபடச் செல்லுகின்றவர்கள் சிலரே. மடாதிபதிகளின் ஆதிக்கத்தில் இருக்கின்ற தேவாலயங்களின் நிலைமையைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? வைத்தீஸ்வரன் கோயில், திருவிடைமருதூர் போன்ற பல

தென்னாட்டுத் திவ்ய க்ஷேத்திரங்களில் பொது ஜனங்கள் படுங் கஷ்டங்கள் எண்ணில.

தேச நன்மையைக் கருதிக் கட்டப்பட்டுள்ள தேவாலயங்களைச் சீர்திருத்தவேண்டுவது நமது கடமை. அவைகள் அழிந்து போகும்படி நாம் பார்த்துக்கொண்டிருப்பது தர்மமாகாது. உண்மை வழி நின்று உழைத்து வந்தவர்களே ஆலய தர்மகர்த்தர்களாக இருந்து ஆலயங்களையும் அவைகளின் தரும சொத்துக்களையும் பாதுகாத்து அவைகளை அபிவிருத்தியடையும்படி செய்துவந்தனர். இப்பொழுது தருமசொத்துக்கள் சரியான வழியில் செலவாகி வருகின்றனவா என்பதைக் கவனியாதவர்களே தேவாலயங்களில் தருமகர்த்தர்களாக இருந்து வருகின்றனர். அவர்களுடைய கவனக்குறைவின் பயனாக ஆலய வழக்குகள் அடிக்கடி நியாயஸ்தலங்களில் நடைபெற்று வருகின்றன. தேவாலய சம்பந்தமான வழக்குகள் நியாயஸ்தலங்களுக்குச் செல்லுவதனால் அவைகளுக்கு ஏற்படுகின்ற செலவுகள் எல்லாம் தரும சொத்துக்களிலிருந்தே செலவு செய்யப்படுகின்றன. நல்ல காரியத்திற்கு நம் முன்னோர்கள் சேமித்துவைத்த பொருள் இப்படி வீணான வழிகளில் விரயமாவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கலாமா? நிற்க,

சமயத்தைப்பற்றியும் சமயக் கொள்கைகளைப்பற்றியும் போதிப்பதற்காகவும், தேவாலய தருமங்களை வளர்ப்பதற்காகவும், ஏற்படுத்தப்பட்ட மடங்களின் நிலைமையைச் சிறிது கவனிப்போம். அவற்றில் அறச்சாலைகளாக இருந்தவை பல இப்பொழுது அவச்சாலைகளாக மாறிவிட்டன. தருமத்தை வளர்ப்பதற்காக ஏற்பட்ட அவை அதர்மத்தை வளர்க்கும் சாலைகளாக இருந்துவருகின்றன. நீதி மன்றங்களாய்த் திகழ்ந்துவந்த அவை அநீதி மன்றங்களாக விளங்கிவருகின்றன. துறவிகளுக்கும், அறவோர்களுக்கும், ஞானிகளுக்கும் இருப்பிடங்களாக இருந்த அவை தற்காலம், இழிதொழிலாளர்களுக்கும், புரட்டர்களுக்கும் இருப்பிடங்களாக இருந்துவருகின்றன. நம் தமிழ்நாட்டில் சேரசோழ பாண்டியமன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட மடங்கள் எண்ணில. மடங்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்கள் மடாதிபதிகளெனப்படுவர். மடங்களில் இருந்த பெரியோர்கள் கல்வி, அறிவு, ஞானம் இவைகளில் சிறந்தவர்களாய் இருந்து வந்ததுமன்றி, நாட்டின் சமயத்தையும், அறத்தையும், தேவாலயப் பணிகளையும் ஒழுங்காக நடத்திவந்தனர். சமய வளர்ச்சியைக் கருதிப் பல



அருமையான சாஸ்திரங்களையும் அவர்கள் அடிக்கடி வெளியிட்டு வந்தனர். தற்கால பண்டார சந்நிதிகளைப்போல் அவர்கள் ஆர்பாட்டமாகத் தர்மசொத்துக்களை வீண்செலவு செய்து வாழாமல் சாதாரண அவசியமான வாழ்க்கையையே நடத்திவந்தார்கள். அதன் பயனாகவே நமது சமயமும் ஆலயங்களும் அக்காலத்தில் மிகவும் சிறப்புற்றோங்கி யிருந்தன.

கீழ் நிலைமையில் இருந்துவரும் தேவாலயங்களையும், மடங்களையும் சீர்திருத்தி அமைக்கவேண்டிய கடமை நம்முடையதல்லவா? இதுவரையில் நாம் அவைகளைப்பற்றிக் கவனிக்காமல் இருந்துவந்தோம். அவைகளெல்லாம் இப்பொழுது சுயநலக்காரர்கள் பிழைப்பதற்கு உரியனவாய், நாட்டு மக்களுக்குச் சிறிதும் பயனற்றவைகளாய் மாறிவருகின்றன. அவற்றை நாம் சீர்திருத்தமுடியாத நிலைமையில் இருந்துவருகிறோம். நமது சமய உரிமையில் அரசாங்கத்தார் தலையிடவேண்டுமென்று நாம் விரும்பவில்லை. ஆனால் எவ்விதத்திலாவது நாம் நமது தேவாலயங்களையும், மடங்களையும் சீர்திருத்தி அமைக்கவேண்டுமென்றே விரும்புகின்றோம். ஹிந்து சமயத்தைப் பின்பற்றிவரும் நாம் இதுவரையில் அவைகளைச் சீர்திருத்தியமைக்க யாதொரு முயற்சியும் செய்யாமல் இருந்துவந்ததனால் அரசாங்கத்தார் தேவஸ்தான பரிபாலன சட்டத்தைச் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றி யிருக்கின்றனர். இந்தச் சட்டம் எப்பொழுதும் அமுலில் இருக்கவேண்டுமென்று நாம் விரும்பவில்லை. இந்தச் சட்டத்தை உண்மைச் சமயாபிமானிகளும் மற்றவர்களும் ஒருவாறு ஆதரிப்பார்களேயன்றி எதிர்க்க முற்படமாட்டார்களென்பது நிச்சயம். தற்காலம் இருக்கும் நிலைமையில் இச்சட்டம் நமது தேவாலயங்களையும் மடங்களையும் சிறிது சீர்திருத்த இன்றியமையாததென்றே நாம் கருதுகின்றோம். ஆனால் இச்சட்டம் சமய வுணர்ச்சி முற்றும்பெற்ற மேதாவியரைக்கொண்டு செய்யப்படின் மெத்தவும் அனுகூலமாகும். அந்த உணர்ச்சியில் சிரத்தை மிகுதியும் இல்லாத அரசாங்கத்தார் தாங்களே தலையிட்டு அச்சட்டத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தது சமயாபிமானமுள்ள பலர்க்கு அதிருப்தியைக் கொடுக்கின்றது. ஆலயங்களையும், மடங்களையும் சீர்திருத்தி அமைக்கும் விஷயத்தில் நம்மவர்கள் அரசாங்கத்திற்குப் பெரிதும் ஆதரவு அளித்தல்வேண்டும். மடங்களும், ஆலயங்களும் சீர்திருத்தப்பட்டால் அவற்றால் நம் நாட்டுக்குப் பலவித நன்மைகள் ஏற்படக்கூடும். ஆகவே உண்மைச் சமயப்பற்றுடைய தமிழர்கள் இந்தச் சட்டத்தை ஆதரிக்கும் விஷயத்தில் கவனஞ் செலுத்துவது அவசியம் என்பதை நாம் பெரிதும் வற்புறுத்துகின்றோம். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

ஓம் தத் ஸத்.

---

# தேசநலப் பகுதி.

## லோகமான்ய பாலகங்காதர திலகர்.

**ப**ண்டைப் பெருமைவாய்ந்த நம் பாரதநாட்டில் தோன்றிய தலைவர்களில லோகமான்ய பாலகங்காதர திலகரும் ஒருவராவர். நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பல கஷ்டங்களை அனுபவித்து இந்தியர்களுக்குத் தேசபக்தியும், சுதேச உணர்ச்சியும் ஏற்படும்படிசெய்த உத்தமர் லோகமான்ய திலகரேயாவர். அப்பெரியவர், நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகச் செய்திருக்கின்ற அரிய ஊழியங்களை நாம் என்றும் மறக்கவே முடியாது. இந்தியப் பொதுமக்களின் அரசியல் அறிவை வளர்க்க அப்பெரியார்செய்த முயற்சிகள் எண்ணில. சுய நலங்கருதாமல் பொதுநலங்கருதிப் பலவித கஷ்டங்களை அனுபவித்த அப் பெரியாரின் தூயவாழ்க்கையை நாம் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். பெரியவர்களைப்பற்றியும், அவர்கள் நடத்திவந்த சிறந்த வாழ்க்கையைப்பற்றியும், அவர்களது அரிய ஊழியங்களைப்பற்றியும் படிப்பதனால் நம் தமிழ்மக்கள் திருந்தித் தங்களது வாழ்க்கையைத் தூய்மையடையும்படி செய்துகொள்ளலாம்.

### பிறப்பு.

இந்தியர்களுக்குப் புத்துயிரளித்த லோகமான்ய பால கங்காதர திலகர் 1856-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ந் தேதி யன்று மகாராஷ்டிரதேசத்தில் உள்ள இரத்தினகிரி என்ற நகரில் கௌரவம்வாய்ந்த ஒரு சித்பாவன் பிராமண குடும்பத்திலே பிறந்தார். அவரது தந்தையான இராமச்சந்திர திலகர் முதலில் கொஞ்சகாலம் இரத்தினகிரியிலுள்ள பாடசாலையில் உதவி உபாத்தியாயராக இருந்து பிறகு தானாநகரிலும், புனாநகரிலும் கல்வி இலாக்கா உதவி இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வந்தார். இலக்கணத்திலும் திரிகோண மிதி என்கிற கணிதசாஸ்திரத்திலும் அவர் ஒரு சிறந்த அறிஞராக விளங்கிவந்தார். இலக்கணசம்பந்தமாகவும், திரிகோண மிதி என்ற கணிதசாஸ்திர சம்பந்தமாகவும் அவர் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்றார். இளமையிலிருந்தே திலகர், மிகுந்த அறிவுடையவராகவும், சாமர்த்தியமுள்ளவராகவும், தைரியமுள்ளவராகவும் இருந்துவந்தார். அக்காலத்தில் அவரது ஞானத்தையும், அறிவையும் கண்டு பலர் வியந்தனர். அவருக்குப் பதினாறுவயது ஆவதற்கு முன்பே அவரது தந்தையார் ஈசன் திருவடி நிழலை யடைந்தார். திலகரின் பால்யத்திலேயே அவரது அன்னையும் இறந்து போய்விட்டார். தந்தை இறந்ததும் லோகமான்யதிலகர் தாய் தந்தையற்ற பிள்ளையாய்விட்டார்.

### கல்வி.

தந்தையை இழந்த நான்கு மாதங்களுக்குப்பிறகு அவர் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினர். பின்னர் அவர் தமது சுற்றத்தார்களின் ஆதரவுபெற்று



டெக்கான் உயர்தரக் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று வந்தார். 1876-ம் ஆண்டில் அவர் பி. ஏ. பரீட்சையில் கீர்த்தியுடன் தேறினர். பிறகு அவர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து அங்கு சட்டங்களைப்பற்றிப் படித்து வந்தார். 1879-ம் வருஷத்தில் அவர் எல். எல். பி. என்ற சட்டபரீட்சையில் சிறப்புடன் தேறினர். கலாசாலையில் படித்துவந்த காலத்திலேயே அவருக்குப் பல அறிஞர்களின் நட்பு கிடைத்தது. அவர் அந்த அறிஞர்களுடன் பல பெரிய விஷயங்களைப்பற்றி அடிக்கடி வாதிப்பது வழக்கம். கல்லூரியில் படித்துவந்த நாட்களிலிருந்தே அவருடைய மனதில் பெரிய எண்ணங்களும், காரியங்களும் உதிக்க ஆரம்பித்தன. அந்தப் பெரும் எண்ணங்கள் நாளடைவில் வளர்ந்து அவரது மனதில் வேரூன்றிவிட்டன. பூனாநகரிலுள்ள பர்கூஸன் கலாசாலைக்குத் தலைவராக இருந்த ஸ்ரீமான் அகர்கார் 1877-ம் ஆண்டு முதல் திலகருக்குச் சிறந்த நண்பராக இருந்தார்.

### தேசசேவை.

லோகமான்ய திலகரும் அகர்காரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்த காலத்தில் அவர்கள் இருவரும் அடிக்கடி "தாங்கள் நாட்டிற்கு எவ்விதத் தொண்டாற்றலாம்" என்று யோசித்து வந்தனர். தூக்கம் என்பதுகூட இல்லாமல் பலநாட்கள் இவ்விஷயமாக அவர்கள் யோசித்து வந்தார்களென்று பலர் கூறுவதுண்டு. அரசாங்கத்தின்கீழ் யாதொரு உத்தியோகமும் ஏற்றுக்கொள்ளுவதில்லையென்று அவர்கள் இருவரும் தங்களுக்குள் ஒரு தீர்மானம் செய்துகொண்டனர். மகாராஷ்டிரதேசத்திலுள்ள இளைஞர்களுக்குச் சிறந்த முறையில் கல்விபோதிக்க ஒரு பாடசாலையை ஏற்படுத்தவேண்டுமென்று அவ்விருவரும் பெரிதும் விரும்பினர்கள். இவர்களது யோசனைகளையும், தீர்மானங்களையும் கேட்டுப் பலர் இவர்களை எள்ளி நகையாடினர். பெரிய காரியங்களைச் செய்வதற்கு இந்த இளைஞர்களால் முடியுமோ என்று பலர் பரிகசித்தனர். ஆனால் லோகமான்யரும், அகர்கரும் அவைகளைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. சீக்கிரத்தில் இவ்விருவருக்கும் ஸ்ரீமான் விஷ்ணு கிருஷ்ண சிப்ளங்கர் என்ற பெரியாரின் நட்பு கிடைத்தது. சிப்ளங்கர் பல காலம் வரையில் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து வேலை பார்த்துவந்தவர். பிறகு அவருக்கு அரசாங்க உத்தியோகத்தில் வெறுப்பேற்பட்டுவிட்டது. எனவே அவர் தமது உத்தியோகத்தை வெறுத்துத் தள்ளி, ஒரு பாடசாலையைச் சிறந்த முறையில் அமைத்து அதைத் தனியாக நடத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் பூனா நகருக்கு வந்து சேர்ந்தார். பிறகுதான் சிப்ளங்கரின் நட்பு லோகமான்ய திலகருக்கும், அகர்கருக்கும் கிடைத்தது. இம்மூவரும் சேர்ந்து புதிதாக ஒரு பாடசாலையை ஏற்படுத்தும் விஷயமாக யோசித்தனர். அப்பொழுது இவர்களுக்கு சிறந்த அறிஞரும், அஞ்சாத நெஞ்சப் படைத்தவருமான ஸ்ரீமான் எம். பி. நாம் ஜோஷி என்ற பெரியாரின் நட்பும் உதவியும் கிடைத்தன.

1880-ம் வருஷம் ஜனவரிமாதம் இரண்டாந் தேதியன்று லோகமான்ய

திலகர், விஷ்ணுசாஸ்திரி, நாம் ஜோஷி ஆகிய இம்மூவரும் சேர்ந்து பூனா நகரில் "புதிய ஆங்கில பாடசாலை" என்ற பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்கள். அவ்வருஷம் ஜூன் மாதத்திலேயே சம்ஸ்கிருதத்தில் சிறந்த பாண்டித்தியம் பெற்றுவிளங்கிய ஸ்ரீமான் ஆப்ட் என்ற பெரியாரும் அவர்களுடைய முயற்சியில் கலந்துகொண்டார். 1880-ம் ஆண்டில் ஸ்ரீமான் அகர்கார் எம். ஏ. பரீட்சையில் தேறினார். பின்பு அவரும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார். இவ்வைந்துபேர்களும் தேசநன்மையைக்கருதித் தங்களது வாழ்நாட்கள் முழுவதும் உழைக்க உறுதிசெய்துகொண்டனர். பிறகு "மராட்டா" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையையும் "கேஸரி" என்ற மகாராஷ்டிர வாராந்தப்பத்திரிகையையும் இவர்கள் நடத்த ஆரம்பித்தனர். இவ்விரண்டு பத்திரிகைகளும் தழைத்தோங்கிப் பிரபலமாயின. இன்றும் அவ்விரு பத்திரிகைகளும் மகாராஷ்டிரதேசத்தில் செல்வாக்குடன் நிலவி வருகின்றன.

பின்பு ஸ்ரீமான் விஷ்ணுசாஸ்திரி அந்தப் பத்திரிகைகளை அச்சிடுவதற்காக "ஆரிய பூஷணம்" என்ற ஒருபெரிய அச்சுக்கூடம் ஏற்படுத்தினார். சித்திரத்தொழிலில் நாட்டிலுள்ளவர்களுக்குத் தகுந்த பயிற்சியைக் கொடுக்க ஒரு சித்திரகலாசாலையையும் ஏற்படுத்தினார். இந்த ஐந்துபேர்களும் அந்த ஸ்தாபனங்களைப்பற்றிய காரியங்களைச் செய்துகொண்டே கொஞ்சகாலம் கழித்தனர். லோகமான்ய பாலகங்காதர திலகர் "மராட்டா" பத்திரிகைக்கு ஆசிரியராகவும், ஸ்ரீமான் அகர்கார் "கேசரி" பத்திரிகைக்கு ஆசிரியராகவும் அமர்ந்து உழைத்து வந்தனர். அவர்கள் இருவரும், பொதுஜனங்களுக்குள் தேசபக்தியும், சுதேச உணர்ச்சியும் ஏற்படும்படி அடிக்கடி அரிய பல விஷயங்களைப்பற்றிக் கட்டுரைகள் எழுதி வந்தனர். "மராட்டா" "கேசரி" பத்திரிகைகள் பரவப்பரவ ஜனங்களுக்குள் நாளுக்குநாள் சுதந்திர உணர்ச்சி வலுத்து வந்தது.

(தொடரும்) திரு. கே. சுப்பிரமண்யம்.

---

## இந்தியாவின் மிடிமைக்குக் காரணங்கள்

மூச்சங்கங்கட்கிடனாய், தமிழ்நிலனாய், இலக்கண இலக்கியங்கட்குக் களனாய் விளங்கிய நம் தாய்நாடே இந்தியா. இது ஓரிலட்சத்து ஐம்பதினாயிரம் சதுரமைல் விஸ்தாரமும் ஏறக்குறைய முப்பத்து மூக்கோடி சனங்களையு முடைய பெரியதேசமாகும். விண்டோய்டுக்கல்களையும், நீர்ப்பிரவாக முள்ள ஆறுகளையும், பாரிய விருட்சங்களையு மடக்கிய பாரதமாதா சகல தேசங்கட்கும் மாதாவாய் நின்றுணவூட்டியும், முன்மாதிரியாய் நின்று ஒளி போலிருப்பதுமே முறைமை. இவ்வாறே இற்றைக்குச் சில்லாண்டுகட்கு முன் நம் மாதா யாவர்க்கும் தாயாகவே விளங்கினாள். இப்படியிருக்க உலகில் சகல வளப்பங்களிலும் இணையற்றதான புண்ணியபூமியைத் தாய்நாடாகப் பெற்ற நாம் இவ்வாறு தரித்திரதசை யடைந்திருப்பதேன்? இதற்குத்தக்க



ஏது இல்லாமலில்லை. எல்லாச் சௌகரியங்க ளிருந்தும் நம் நாடு ஏனித்தகைய க்ஷீணநிலை யடைந்த தென்பதைக் கவனிப்போம்.

நம்நாடு விவசாய நாடாகவே யிருந்தும் ஊக்கமின்மை காரணமாக மிடிமையடைய வேண்டிவந்தது. முயற்சியுடைய மேனாட்டார் தங்கள் பூமி கடினமாயினும் அவர்கள் அதிக உழைப்பெடுத்துக் கொள்வதோடு கிருஷிக சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், தாவரசாஸ்திரம் முதலியவற்றைக் கற்றுப் பூமியைத் தக்கவிதமாய்த் திருத்தி அந்தந்தப் பயிருக்குத்தகுதியான எருவிட்டுப் பண்படுத்துகிறார்கள். இதனா லவர்கள் பூமிகளில் பலன் வரவர அதிகரிக்கிறது. இங்ஙனமே மனுஷர் சீவிக்கமுடியாத சகாராவில் அதிக ஊக்கமுடைமை காரணமாக அது அதிகலாபம் பெறக்கூடியதா யிருக்கின்றது. தற்காலத்தில் வரவரக்குறையும் பூமியின் சத்திற்குப் பதிலாகப் போதுமான ஊட்டமளிக்கப் படுவதில்லை. இதனால் வரவர விளைவு குறைந்துகொண்டே வந்துவிட்டது. அன்றித் தென்னிந்தியாவில் ஆறுகள் மூலமாய் ஒருமுறை அல்லது இருமுறை வேளாண்மை செய்யக்கூடியதா யிருக்கின்றது. கோடை காலத்தில் ஆறுகள் வற்றிப்போகின்றன. அதனால் கோடை வேளாண்மை மிகவும் குறைவு. ஆற்றின் பக்கல்களில் பாரிய குளங்கள் வெட்டி ஆற்றை அதனுட் பாயவிட்டு வேண்டியபோது நீர்ப்பாய்ச்சி வேளாண்மை செய்தல் மிடிமை நீக்க ஒரு சிறிது வழியாகும்.

பூர்வத்தில் நம் நாட்டிற்குத் தேவையான கைத்தொழிற் பொருட்கள் யாவும் இங்கேயே யாக்கப்பெற்றன. தற்போது அவை கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்து அடியோடு கைத்தொழில் அற்றுப்போயிற்று. ஏனெனில், அந்நியநாட்டாரிங்கு கால்வைத்ததும் தங்கள் நாட்டுக் கைத்தொழில் விருத்தியடையவும் வர்த்தகம் பெருகவுங்கருதி நம் நாட்டுக் கைத்தொழில்களை நசுக்கிவிட்டார்கள். நாமணியுந்துணிகள் முதற்கொண்டு மேல் நாட்டிலிருந்து வரத்தொடங்கின. சற்றுக்கண்ணுக்கு அழகாயும் விலைசரசமாயு மிருக்கவே நமது நாட்டார் அவற்றையே வாங்கத் தொடங்கினார்கள். இதனால் நம் நாட்டுக் கைத்தொழில்களில் முதன்மையான தாகிய நெசவுத்தொழில் ஒழிந்துபோயிற்று. அத்துடன் மற்றைய சாமான்களும் மேல்நாட்டி லிருந்து வரத்தொடங்கின. கண்ணைக் கவரத்தக்க வெளித்தோற்ற முடையவையாதலால் நம்மவர் அவற்றையே வாங்கத்தலைப்பட்டனர். இதனால் நம்நாட்டுக் கைத்தொழில்கள் ஒழியவும் அத்தொழில்களாற் சீவித்து வந்தோர் தரித்திரதசையடையவும் நேர்ந்தது. அன்றி ஒன்று பெறுமதியான நம் நாட்டுப்பஞ்சு மூன்று பெறுமதியான ஆடையாக வருகின்றதெனில் கைத்தொழிலின்மையால் நம் நாடடையும் மிடிமையைச் சொல்லவும் வேண்டுமா ?

நந்தாய்நாட்டில் ஏறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறாண்டுகட்கு முன்னே தாய்மொழி பல்கிப் பரவியிருந்தது. அதனால் நம்பண்டை இந்தியர் சாதாரண சீவியஞ் செய்பவர்களா யிருந்தனர். அதற்கு அவர்களுடைய தாய்மொழிக்கல்வியே ஏற்றகாரணமென்பது கரதலாமலகம்போற் றெள்ளிதிற் புலப்

படும். தற்போது நந்தமிழ்மொழி வயோதிகமடைய அந்நியமொழியா மாங்கிலம் கலைதோறும் வளர்வதாயிற்று. ஆங்கிலத்தில் **B.A., M.A.,** முதலிய பட்டம் பெற்றோர் பலர் உத்தியோக மின்றி உலைந்து திரிகின்றனர். வேறே ஏதாவதுதொழில் பார்த்தல் அகௌரவமாகு மென்றஞ்சி வீட்டிற்குப்பாரமாய் மற்றவர்களைக் கொண்டுழைத் துண்கின்றனர். உண்பதும் சாதாரணமாயிராது. தமது கல்விக்கேற்றவாறு வித்தியாசமானதும் அதிக செலவுள்ளதுமான ஊண்களையே அவாவுகின்றனர். அன்றித் தற்காலம் ஆங்கிலத்தில் **B.A.,** முதலிய பட்டங்கட்குப்பயில ஏறக்குறைய ஈராயிரம் ரூபாய் வரையில் செலவாகின்றது. அத்துடன் வேலையுமின்றி யிருந்தால் மிடிமை தலை காட்டாதென் செய்யும்?

இவற்றோடு கெட்டகர்லத்திற்குத் தக்கவாறு நம்மவர்க்கு மேல்நாட்டு நாகரிகப் பித்தேறவே எதுவாயினுஞ்சரி மேல்நாட்டுப்பொருளை வாங்கவும் நடை உடைபாவனைகளில் மேனாட்டு ஆசாரத்தையே கைக்கொள்ளவுந் தொடங்கி விட்டார்கள். இதனால் குறைந்த வருமானமுடைய நம் நாட்டார்க்கு அதிகசெலவு ஏற்பட்டதும் தரித்திர மதிகரிக்கத் தொடங்கியது.

இந்தியாவிலுள்ள சிலர் பாரியதனவந்தர்களா யிருக்கிறார்கள். ஒருவற்கு பதினையாயிரம் ஏக்கர் நிலம்வரையி லிருப்பதனால் ஏனையோர் தஞ்சீவனத்திற் கேற்ற நிலங்களற்று அல்லற்படுகின்றனர். அதிக நிலங்களையுடைய தனவந்தர்க்குக் கூலிக்குச் சென்றாலும் அவர்கள் கொடுக்கும்பணம் சீவியத்திற்குப் போதாது துயருறுவதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கின்றோம். செல்வர் தம்முடைய தானியங்களில் தமக்குத் தேவையானதுபோக எஞ்சியதைப்பிற தேசங்கட்கனுப்பிப் பணந்தேடிக் கொள்கின்றனரேயன்றி, தந்தேசத்தார்க்கு வேண்டுமென்று சேகரித்து வையாதொழிகின்றனர். அதனால் பிச்சையெடுப்போரதிகமாக சனங்கள் சோம்பேறிகளாகி, மிடிமைப்பட வேண்டியவர்களாயினர். இதுவும் மிடிமைக்குக் காரணமாகு மென்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

கிராமம் நகரமென்னு மிருதிறத்த சனசமூகவாழ்க்கையில் கிராமம் சனங்கட்குச் சுகத்திற்கேற்றது மன்றி சாதாரண சீவியஞ்செய்வதற் கேற்றதுமாயிருக்கின்றது. நகரமோ அசௌகரிய முள்ளதும் ஆடம்பரசீவியத்திற் கேற்றதும் உத்தியோகஸ்தர் சீவிக்குமிடமுமா யிருக்கின்றது. அப்படியிருக்க கிராமங்களிலே வாழும் வேளாளர் நகரங்களிலே உல்லாசத்துடன் மாடமாளிகைகள் கட்டி பட்டினத்திற் கேற்ப சகல காரியங்களிலும் நடந்தால் மிடிமை தலைகாட்டா தென்செய்யும்? பீர் பிராந்தி சோடா முதலிய செயற்கைப் பானங்களை நாகரிகத்திற்கேற்ப அருந்தினால் ஓர் நாடு கேடுறுவது திண்ணம்.

பலசமயங்களும் பல்கிப்பெருகிய விடம் ஐந்தனுட்பெரியதான ஆசியாக் கண்டமாகும். அதனொருபாகமா மிந்தியாவில் சைவமதஸ்தினரும் அருகருமே பெரும்பாலார். சைவமதஸ்தினர்க்கு தைப்பொங்கல், வருஷப்பிறப்பு தீபாவளி முதலிய அநேக பண்டிகைகளுள. அவற்றில் நம் சைவநண்பர்கள்



அழிக்கும் பொருள்கட் களவில்லை. அன்றி மரணவிவாக கொண்டாட்டங்களிலும் அநேகர் செல்வத்தை வீணே செலவழிப்பதும் நம்மவர்கள் அறிந்த விஷயமே. மேற்கூறிய கொண்டாட்ட செலவுகட்காக அவர்கள் எப்படிக் கொடுப்பதென முன்பின் யோசியாது ஏற்றமான வட்டிக்குக் கடன்வாங்குகின்றனர். தம் உழைப்பு சீவனத்திற்கே போதியதாயிராதோர் கடனைத் தீர்ப்பதெங்ஙனம். கடனுக்குப் பிணையாகக் கொடுக்கப்பட்ட ஆதனத்தின் பெறுமதியளவு வட்டியும் முதலும் வந்ததும் கடன்கொடுத்தோன் ஆதனத்தைத் தனக்காக்கிக் கொள்கின்றனன். ஆகவே கடன்வாங்குபவர்களின் சந்ததிகட்குப் பொருளின்றிப் போகின்றது. இப்படியே வரவர நம்மவர் வறுமையாகிய கொடிய நோய்க்கு வசப்படுகின்றனர்.

நம்மவர்க்குள்ளே ஜாதிவித்தியாசம் பார்த்தல் அதிகமாகத் தலைகாட்டி நிற்கின்றது. மாட்சிமைதங்கிய காந்திமகானும் தீண்டாமையை ஒழித்தற்கே அதிக முயற்சி யெடுக்கின்றனர். ஜாதிவித்தியாச மேற்படும்போது தேசப் பிரிவினை யேற்படுகின்றது. அப்போது இந்தியாவிலுள்ளார் தேசாபிமான மற்றவராக, தேசத்திற் குரிய பொதுவிஷயங்க ளெல்லாம் குன்றித் தேசம் அடிமைப் பிணிக்குட்பட வேண்டி யிருக்கின்றது. அடிமை வாழ்க்கையினால் சுயாதீனம்கெட்டு மற்றையோர் சொற்படி நடக்கவேண்டியதாய் வரும். அரசாட்சியி லடிமைப்படின் அவர்கள் நாகரிகம் ஒழுக்கம் நடை உடை முதலியவற்றிற்கும் கீழ்ப்பட்டு நாம் பொருளழிந்து வறுமையுறுவது திண்ணம். ஜாதி மத வித்தியாசத்தைச் சற்றுங்கவனிக்காது நாமனைவரும் பாரதமாதாவின் மக்களே என்றதிடங்கொண்டு யாவரும் ஓரேமனதாயிருந்து வேலைசெய்ய வேண்டும். இத்தகைய ஒற்றுமை நம்மிடம் மிகக்குறைவு. இதற்குமாறாக மதஜாதி விஷயங்களில் பிரிவினையை யுண்டாக்கி அப்பிரிவினையால் ஒருவருக்கொருவர் துவேஷங்கொண்டு பொதுநலத்திற் கிடையூறு செய்கின்றோம்.

நம்மவரில் பெரும்பாலார் சுயநலத்தில் நாட்டம்வைத்துத் தாய்நாட்டின் முன்னேற்றத்திற் கிடையூறு செய்கிறார்கள். நான் நாட்டிற்காக உழைக்கப் போகிறேனென்று முன்வருவோரே நகரசங்கம் சட்டசபை முதலியவற்றில் அங்கத்தவராய்ச் சென்றபின், அற்பசுயநலத்திற் காசைகொண்டு தம் நாட்டார்க்களித்த வாக்குத்தத்தத்தை யலட்சியஞ்செய்து எதிரிகள் பக்கஞ் சேர்ந்துகொண்டு தாய்நாட்டிற் கிடையூறே செய்யத்துணிந்து விடுகிறார்கள். இதனால் தாய்நாட்டின்சிறப்பு இத்துணைத்தென்பது பெறப்படக் கிடக்கின்றது.

உலகில் ஆதிகாலந்தொட்டு அடிமையாக இருந்தவர்க ளெல்லாம் சுயாதீனம் பெறமுயற்சிசெய்யும் இக்காலத்தில் ஆதிமுதலுன்னத நிலையிலிருந்த நம்மவர் சுயமதிப்பையும் கௌரவத்தையும் மறந்து அடிமைத்தனத்தில் மகிழ்ச்சியடையத் தொடங்கினார்கள். இது கலியின் மகிமைபோலும்.

இத்தகைய காரணங்களால் ஈசுவர பக்திக்கும் மெய்ஞ்ஞானத்திற்கும்

பிறப்பிடமாகிய நம்தெய்வத்திருநாடு அகௌரவத்திற்கும் இகழ்ச்சிக்கும் தரித்திரத்திற்கு முறைவிடமாகி விட்டது.

இதிலிருந்து நாம்மீளும் வழியில்லையோ? தக்கவழியில் முயற்சிசெய்தாலெக்காரியமுங் கைகூடும். நெடுநாட்களாகத் தூக்கத்திலிருந்த நம்மவரில் பெரும்பாலார் இப்போது கடவுள் தயவால் விழிப்பிற்கு வந்துவிட்டார்கள். பூர்வீக உன்னத நிலையையும் தற்கால இழிவான நிலையையு முணர்ந்து பழைய நிலையையடைய முயற்சிசெய்து வருவது யாவருமறிந்த விஷயமே.

நம்மிடமிருக்கும் தீமைகளும் குறைகளும் நீக்கப்பட்டாலன்றி நாம் க்ஷேமமடைவது கூடாதகாரியம். ஒருதேசத்தில் சிலர்மட்டும் சரியான வழியில் நடந்துவர ஏனையோர் அந்த அறிவாளிகளின் புத்தியின்படி நடவாமலும் விஷயங்களைச் சரியாயுணராமலும் நமது முன்னேற்றத்திற் குரிய தடைகளிவை யென்றுணர்ந்து அவற்றை யொழிக்காமலும் இருந்தால் அத்தேசம் ஒருபோதும் முன்னேற்ற மடையாது.

ஆகையால் நாம் மிடிமையை நீத்து சேமமுறும்பொருட்டு நீக்கவேண்டியவற்றை நீக்க அனாதிகாலந் தொட்டு நம்புண்ணிய பூமிக்குப் பெருமையும் புகழும் அளித்துவரும் சச்சிதானந்தப் பொருள் உதவிபுரிவாராக.

[இஃது தெல்லிப்பழை ஆண்விடுதிப் பாடசாலை மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் எழுதி வாசிக்கப்பட்டது.]

ச. **சபாபதி**, பிரவேசமாணவன், தெல்லிப்பழை.

# அறநெறிப்பகுதி.

## நற்குண முடைமை

குணம் நற்குணமெனவும், தீக்குணம் எனவும் இருபிரிவினை யுடைத்து. இவற்றுள் முன்னது எல்லோராலுங் கொள்ளத்தக்கது, பின்னது ஒருவராலுங் கொள்ளத்தகாதது மாகும். ஆகலின், இங்ஙன் நற்குணத்தையே விளக்க நினைந்து அதனையே இவ்வியாசத்திற்குத் தலைபங்கமாக வெடுத்துக் கொண்டேம்.

இறைவனால் சிருட்டிக்கப்பெற்ற இவ்வுலகம் பலவிதம்? இவ்வுலகத்து மக்கள் எல்லாரும் ஒருதன்மை யுடையராயிரார். சிலர் நன்மையாற் பயன் பெறுவோராயும், சிலர் தீமையால் கெடுபவராயும் இருக்கின்றனர். எவர் எத்தகைய குணத்தை யுடையராயினும் அவர் விரும்புவது நன்மையையே என்பது எல்லாராலும் அறியத்தக்க தொன்றாம். ஒருவன் தீங்கையே செய்து செல்லினும், அவன் அடைய விரும்புவது நன்மைதான். ஆனால், உலகநீதி அவ்வாறிருத்தற் கிடங்கொடாது. ஒவ்வொருவரும் தாம்தாம் நன்மைசெய்தாலொழிய நன்மையடையார். நற்குணத்தையுடைய ரல்லாதவர்கள் எஞ்ஞான்



றும் நன்மை செய்தலும் இயலாததே. ஆதலால், மனத்திற்கொப்ப நன்மையடைய விரும்புவோ ரெல்லாரும் தடையின்றி நற்குணத்தையே அருமருந்தன்ன அணியாகக்கொள்ளுதல் வேண்டும். குணனுடை மாந்தர்க்கன்றோ குறைவராதொழியும்? குணமுடையாரே நலமுடையார். குணமென்னும் குன்றேறி நின்றார்க்கே எல்லா நன்மையும் இடையூறின்றி உண்டாம்.

இவ்வங்கண்மா ஞாலத்து ஒருவன் பிறனொருவனிடம் அழியாத சினேகம்கொள்ளவேண்டுமாயின், பின்னவனுக்கு நற்குணங்கள் உண்டாயிருத்தல் வேண்டும். எவனிடத்து நலந்தருங்குணங்கள் இல்லையாமோ அவனிடத்து உலகம் யாதொருபற்றும் வையாது. அவனைப் பலவாற்றானும் புறக்கணித்துவிடும். ஒருவன் எத்துணைச் சிறியதோர் நலம் பெறல்வேண்டு மெனினும், நற்குணமே முதற்கண் வேண்டற்பாலது. அஃதிலார் ஒருவராலும் எப்பொழுதும் நன்மைபெறுதல் இன்று.

ஒருவனது ஒழுக்கம் அவனது குணத்தை அடியொற்றியதாக விருக்கின்றது. நற்குணமில்லானிடம் நல்லொழுக்கம் துன்னுதல் இல்லை. நல்லொழுக்க மில்லாதவர்களை மேலோரெல்லாம் கைவிடுவர். ஒருவனை மேன்மைப்படுத்துவதும் கீழ்மைப்படுத்துவதும் அவனது குணமே. நல்லவன் நற்குணத்தைக்கொண்டு மேன்மை யடைகின்றான்; மற்றையோன் தீக்குணத்தினால் கீழ்மையடைகின்றான். ஆதலால், மேன்மையடைய விரும்புவோ ரெல்லாரும் நற்குணத்தைக் கைக்கொள்ளுதல் முறைமை.

இவ்வுலகத்தில் மேன்மையடையாத ஒருவன் எவ்வுலகத்தும் மேன்மையடையான் என்பது மறுக்கொணா உண்மை. இவ்வுலகில் நற்குணத்தைக் கொண்டு மேன்மையடையாதவன் மறுவுலகிலும் துன்பத்திற் குள்ளாவன். இவ்வாற்றால் அத்தகையோனுக்கு எவ்விடத்தும் துன்பமே உடைமை யாகின்றது. சுகம்பெற வேண்டுவார் நற்குணத்தையே கைக்கொண் டொழுகத் தகுந்தவர்கள்.

இவ்வுலகத்தா ரெல்லாம் வணங்கத்தகுந்த செல்வத்தை ஒருவன் உடைத்தாயிருப்பினும், நற்குணமொன்று மின்றேல், அவன் என்ன பயனையடைவன்? செல்வமிருந்த காலத்து அஃது இருந்து அவனை உண்பிக்குமே யல்லாது யாதேனும் நன்மைசெய்யுமோ? குணமன்றோ தனம். ஒருவனுக்குக் குன்றாத குணமிருப்பின் அவன் ஒருபோதும் வறுமையாற்றுன்பம் அடையான். அவனுக்கு அக்குணமே யழியாத செல்வமாம். செல்வத்தினா லுண்டாம் புகழும், செல்வாக்கும் உடனே மாயுந்தன்மையனவே. குணத்தால் உண்டாகும் மேன்மை எக்காலும் குன்றுதலில்லை. அன்றியும், செல்வத்தால் எவ்வெந் நன்மைகள் உண்டாமோ, அவ்வந் நன்மைகளனைத்தும் நற்குணத்தாலும் உண்டாமென்பது ஒருதலையே. ஆதலால், எவ்வாற்றானும் செல்வத்தைவிட நற்குணமுடைமை மிக்க மேன்மைக்குரித்தாம் என்க. குணத்தோடு செல்வமுடைமையும் ஒருவனுக்கிருக்குமாயின், அஃது பயன்மிகக்

கொடுக்கும் என்பதில் ஐயமின்று. குணமில்லாதவனுடைய செல்வம் ஈகைக்குரித்தன்று; ஈகைக்குரித்தல்லாத செல்வம் மண்ணுக்குச் சமானமேயன்றோ ?

"மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு" பட்ட துட்டரிடத்தை மேலோர் சேரார். எனெனில், நினைப்பதொன்றும் சொல்வதொன்றும், செய்வதொன்றுமாகக் காலங்கழிப்பவர் நற்குணமுடையரல்லராகலின். எனவேமேலோர் நறகுணமுடையாரிடத்தையேநண்ணுவர் என்பதுபோதரும். குணமில்லாரிடத்து அத்தகையார்க் காவதொன்று மிலது. மேலோர் மேலோரையே யடைவதும் கீழோர் கீழோரையே யடைவதும் இயல்பு. மாணின்மையுடையார் யாவரே யாயினும் மேலோரால் பழித்தற்குரியரே யாவர்.

ஆதலால், நற்குணத்தையே கொண்டு நயமுற நானிலத்தில் வாழ்ந்து நன்மை நண்ணுதலே நல்லார் தொழில். நற்குணமுடைமையால் வரும் நன்மைகளையும் அஃதில்லாமையினுல் வரும் தீமைகளையும் நன்குணர்ந்தார், நற்குணத்தையே நாடுவர் என்பதில் யாதோர் ஐயப்பாடு மின்று.

ராம. சுப்பிரமணிய நாவலர், பத்மநாபபுரம்.

---

## ஆரிய சித்தாந்தம்

### பிதிர்யக்ஞம்—சஞ்சயனம்.

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு பிரேத சரீரத்தைத் திவ்யசரீரமாக்கிப் பிதிர்லோகம் அனுப்ப வேண்டும். அதற்கு முன்னுலேயே அஸ்தி சஞ்சயனம் செய்யவேண்டும். அஸ்தி சஞ்சயனமென்பது இறந்தவர்களுடைய எலும்புகளை யெடுத்து ஸம்ஸ்காரம் செய்வது. வெகு புண்ணியமான இந்தக் கிருத்தியம் தகனம் செய்யப்பட்டவர்களுக்கே பிரதானம்: இதனுல் பிதிர்க்கள் சொர்க்க முதலிய புண்ணிய உலகங்களை அடைவார்கள். புதைக்கப்பட்டவர்களுக்கு மிது உண்டு.

இவ்விஷயத்தில் பாரஸ்கர் பிராமணர்கள் இறந்தவனைத் தகனம் செய்த நாலாம் நாளிலும், ஆரும்நாளில் க்ஷத்திரியர்களும், எட்டாம்நாளில் வைசியர்களும், பத்தாம்நாளில் சூத்திரர்களும் செய்யவேண்டுமென்ருர். விஷ்ணுபுராணத்தில் நான்காம்நாளில் அஸ்திகளைச் சேர்த்தெடுத்துக் கங்கையிற் போடவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிரத்தினத்தில் ஒருநாள் உபவாசமிருந்து அல்லது யாசிக்காமல் வந்ததைப் புசித்து அஸ்திகளை எடுக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றது. அஸ்தி சஞ்சயனத்தை அபரான்னத்திலும் சந்தியாகாலத்திலும் இராத்திரியிலும் செய்யக்கூடாது. காலை ஆறுநாழிகைக்குமேல் பனிரண்டுநாழிகைக் குட்பட்டதாகிய பூர்வான்னத்திலேயே செய்ய வேண்டுமென்று வேறு ஸ்மிருதி கூறுகின்றது. பூர்வான்னத்தில் செய்யப்படும் அஸ்தி சஞ்சயனம் சுபபலனை அளிக்கும். மத்தியான்னத்திலானுல் மத்திமபலன். மற்றக்காலங்கள் அசுபபலனைத் தருமாதலால் அப்போது செய்யக்கூடாது என்று ஸ்மிருதி சங்கிரகம் கூறுகின்றது. இறந்த மறுதினமாகிய இரண்டாம்நாள் மூன்ரும்நாள் ஐந்தாம்நாள் இந்தத் தினங்களில் அஸ்தி சஞ்சயனம் செய்யவேண்டுமென்று ஆபஸ்தம்பர் கூறினுர். ஸ்மிருதிகள் நாள் விஷயத்தில் மாறுபடுகின்றமையால் நாலாம்நாள் செய்வது நலமென்று சிஷ்டர்கள் ஒப்புகின்ருர்கள். ஆயினும் இரண்டாம்நாளில் செய்வதே வழக்கமாயிருக்கிறது. தீ நன்ருய் அணைந்துபோனபிறகு செய்வதுதான் உத்தமம்.



பிரம்மபுராணத்தில் ஆஹிதாக்கினிக்குத் தஹனதினத்திலிருந்தும், மற்றவர்களுக்கு இறந்ததினத்திலிருந்தும் நாட்களைக் கணக்கிடவேண்டும். தன்னுடைய சாகையில் சொல்லியிருக்கிறபடியே ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். வேறுவகையாகச் செய்யக்கூடாது. இறந்ததினமே திதி எனப்படும். இந்தத் தின முறைப்படி நாட்களைக் கணக்கிட்டுச் சஞ்சயனம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. வேறு ஸ்மிருதியில் ஆஹிதாக்கினிகளுக்கு (அக்கினிஹோத்திராதி வைதிக கிருத்தியங்களைச் செய்கிற பிராமணன்) தகனதினத்திலிருந்தும், மற்றவர்களுக்கு இறந்ததினத்திலிருந்தும் தீட்டு காக்கவேண்டும். ஆயினும் இருவர்களுக்கும் சஞ்சயனமாத்திரம் தஹனதினத்திலிருந்துதான் நாட்களைக் கணக்கிடவேண்டும். திதி என்பது மரண தினமே.

இறந்த பத்துத்தினத்துக்குள் அமாவாசையாவது மாதப்பிறப்பாவது வந்தால் சஞ்சயனத்தையும் சமிண்டீகரணத்தையும் அவற்றுக்கு முன்னுலேயே செய்யவேண்டும். முதல்நாளிலாவது இரண்டாம் நாளிலாவது அமாவாசை மாதப்பிறப்பு வந்துவிட்டால் அப்போதே அஸ்திசஞ்சயனம் செய்துவிடவேண்டுமென்று விஷ்ணுபுராணம் கூறுகின்றது. எலும்புகளை நாயாவது, வேறு யாராவது தீட்டுள்ளவர்களாவது தொட்டுவிட்டால் அதைப் பாலால் அலம்பி மூன்று கிருச்சிரம் செய்யவேண்டியது. இதுவே பிராயச்சித்தமாம்.

அஸ்தி சஞ்சயனம், கனனம் தியாகம் என இருவகைப்படும். கனனமாவது பூமிக்குள் புதைத்தல், தியாகம் நீரில் விடுவது. கனனவிதியாவது ஒரு ஆள் ஆழமாகவாவது ஒருயானை அளவு ஆழமாகவாவது ஒரு குழியை வெட்டவேண்டும். எலும்பை யெடுத்து அடைத்துவைத்திருக்கும் குடத்தை அதற்குள் இட்டு அர்ச்சனைசெய்து மேலே மண்ணைத்தள்ளி நன்ருய் மூடிவிடவேண்டும். அப்படிச்செய்தால் அந்தக் குழிக்குள் எலும்பு இருக்கும்வரைக்கும் அந்தப் பிரேதமும் சுவர்க்கத்தில் வசிக்கும் என்று போதாயனர் கூறினுர். சாம்பலிலிருந்து அஸ்தியை எடுத்து நெய்யில் நனைத்துப் பின் பாலிலும்,பிறகு சந்தனத்திலும் நனைத்து அதன்பின் ஒரு மண் பானையில் போட்டு அதன்மேலே ஒரு சட்டியால்மூடி அல்லது வஸ்திரத்தாலாவது மூடி, குசம் தர்ப்பைகளுள்ள இடத்தில் ஒரு குழிவெட்டித் தென்முகம் நோக்கி நின்று அந்தக் குழியில் அதை வைத்து மேல்மண்ணைத் தள்ளி மூடவேண்டுமென்று காத்தியாயனர் சொன்னுர்.

முழங்கால் ஆழமுள்ள ஒரு குழிவெட்டி அந்த ஜிதையின் வலதுபக்கத்தில் குழியில் எலும்புக் குடத்தைவைத்து மண்ணுல் மூடவேண்டுமென்று வைகானஸ சூத்திரத்தில் கூறியிருக்கின்றது.

தியாக (எறிந்துவிடுதல்) விதி—எலும்புகளைக் கம்பளம், மான்தோல், வஸ்திரம், பட்டு இவைகளில் வைத்துக் குசத்தால் திரித்த கயிற்றினுல் நன்ருய்க் கட்டிக் கங்கைநீரில் போட்டுவிடவேண்டும். அந்த எலும்புகள் முழுகும் வரையில் அகமர்ஷண ஜபம் செய்யவேண்டும். அந்த எலும்புகள் எத்தனைநாள் கங்கையில் இருக்கின்றனவோ அத்தனை ஆயிரவருஷம் இறந்தவன் சொர்க்கத்தில் சுகமாய் வாழ்வான் என்று வேறு ஸ்மிருதிகள் கூறுகின்றன. தாய், தகப்பன், அம்மான் முதலானவர்களுடைய எலும்புகளை யெடுத்துப் புரட்டாசி மாசம் கிருஷ்ணபட்ச அஷ்டமியில் அவைகளைப் பஞ்சகவ்வியத்தில் நனைத்து ஒரு மண்பாண்டத்தில் சொர்ணம், தேன், நெய், எள் இவைகளைப்போட்டு, அந்த எலும்புகளையிட்டு மேலே சட்டி மூடி "நமோஸ்து தர்மாய" என்ற மந்திரத்தை உச்சரித்து அதை ஜலத்தில் போட்டுவிடவேண்டியது. பின் பத்தியுடன் ஸ்நானம்செய்து, சூரியனைத் தரிசித்துப் பிறகு தன் சக்திக்குத் தக்கபடி தட்சிணை கொடுக்கவேண்டும். இப்படிச்செய்து பிதுருக்களைப் பிரம்மலோகத்துக்கு அனுப்பவேண்டுமென்று பிரம்மபுராணம் கூறுகின்றது. கங்கையிலாவது காவேரியிலாவது, யமுனை சித்துருசிநதிகளிலாவது, ஸரஸ்வதி நதியிலாவது அஸ்திகளைப் போடவேண்டுமென்று யோகயாக்ஞவல்கியர் கூறினுர். காவேரிதீரத்தில் வாசம்செய்தவனும், அங்கே மரித்தவனும், அங்கே தகனம் செய்யப்பட்டவனும், காவேரியில் போடப்பட்ட எலும்புகளையுடையவனும் பாவங்களெல்லாம் நீங்கிச் சுவர்க்கத்தை அடைகிருனென்று பிரம்மகைவர்த்தபுராணம் கூறுகின்றது.

அஸ்தி சஞ்சயனத்துக்குத் திதிவார நட்சத்திர தோஷங்கள் கூறப்படுகின்றன. செவ்வாய், ஞாயிறு, சனிவாரங்களிலும், துவிதியை முதலிய இரட்டைத் திதிகளிலும், கார்த்திகை, புனர்பூசம், மிருகசீர்ஷம் கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்திரத்திலும், அனுஜன்ம நக்ஷத்திரத்திலும் அஸ்தசஞ்சயனம் செய்யக்கூடாது என்று யமஸ்மிருதி கூறுகின்றது. ஷஷ்டி, சதுர்த்தசிதிதிகளிலும், ஞாயிறு வெள்ளிக்கிழமைகளிலும், ஜன்மம், ஜன்மானுஜன்மம், பிருகஸ்பதியைத் தேவதையாக உடைய நட்சத்திரம், கேட்டை, பூசம், ஹஸ்தம் முதலிய நட்சத்திரங்களிலும் அஸ்திசஞ்சயனம் செய்யக்கூடாது. பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி இவைகளிலும் செய்யக்கூடாது. செய்தால் குலத்துக்குக் கெடுதிநேரிடும். இவைகள் நீங்கின நாட்களில் செய்யலாமென்று ஸ்மிருதிரத்தினத்தில் கூறப்பட்டுள்ளது. கொஞ்சதோஷ முள்ள நாட்களில் செய்யலாமென்று ஆத்திரேயர் கூறினுர். அதிக தோஷமுள்ள காலத்தில் செய்யக்கூடாது என்ருர். ஜன்மானு ஜன்மநாள் நந்தை (பிரதமை ஷஷ்டி ஏகாதசிதிதிகள்) பூரணைதவிர மற்றைய நாட்களில் செய்யலாம். குண தோஷங்கள் இரண்டும் கலந்தேயிருக்கின்றன. குற்றமில்லாமல் குணமட்டு முள்ளநாள் தேவர்களுக்கும் அகப்படுவதரிது என்று ஸ்ரீதரீயம் கூறுகின்றது. சகலகர்மங்களையும் பிராமணர்களிடம் அனுக்ஞை பெற்றுக்கொண்டு செய்யலாம். இதனுல் எல்லாத் தோஷங்களும் நீங்கும் என்று ஹரீதர் கூறுகின்ருர். விலக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நாட்களில் மாதாபிதாக்களுக்கு அஸ்தி சஞ்ச



யனம் செய்யலாம். பிரத்தியட்ச மரணத்தில் எல்லாருக்கும் செய்யலாம். அதனுல் அதிக தோஷமில்லையென்று கார்க்கியர் கூறினுர். அஸ்திசஞ்சயனமானது மயானவாசிகளாகிய தேவதைகளுக்கு யாகமாகிறது. பிரேதத்தை உத்தேசித்துச் சுத்தனுயிருந்து கொண்டு இந்தத்தேவயாகம் செய்யாதவனை அந்தத்தேவதைகள் சபிக்கிருர்கள். மயானவாசிகளான தேவர்களாவது அந்த மயானத்தில் முன்னுலே தகிக்கப்பட்டவர்களாம். மசானத்தில் வசிப்பவர்கள் பிரேதங்களுக்குத் தேவர்களாகிருர்கள். அந்தத்தேவர்களையும் புதிய பிரேதத்தையும் உத்தேசித்து அப்பம் முதலியவைகளால் பூஜிக்கவேண்டும் என்று விஞ்ஞானேசுவரீயம் கூறுகின்றது.

பத்தாம்நாள் பிரேதத்துக்கு அதிக பசியுண்டாகும். பிரபூதபலிசெய்தால் அந்தப்பசிதீரும். அதன்பிறகு பிண்டம் திலோதகங்களைச் செய்வித்து முன் நட்டகல்லை எடுத்துவிட்டுப் பிரேதத்தன்மையை நீக்கவேண்டும். சனி, செவ்வாய், வியாழன் முதலிய வாரங்களில் பத்தாம்நாள் வந்தால் பிரபூதபலி கொடுக்கக்கூடாது. கொடுத்தால் அந்தக்குலம் நசிக்கும் என்று சிலஸ்மிருதிகள் கூறுகின்றன. இது மாதாபிதாக்கள் தவிர மற்றவர்கள் விஷயத்தில் அனுஷ்டிக்க வேண்டியதென்று சிஷ்டர்கள் அபிப்பிராயப் படுகிருர்கள். அதனுலே தான் பிரபூதபலிவிஷயத்தில் கிழமை நாள் முதலிய தோஷங்களைக் கவனிக்க வேண்டியதில்லை. பிரேதத்தின் பசியைத் தணிப்பதற்காகவே இந்தப் பிரபூத பலிசெய்யப் படுவதாலும், பத்தாம்நாளிலேயே செய்யவேண்டு மென்று விதிக்கப்பட் டிருப்பதாலும், வேறுதினங்களில் செய்வதனுல் பிரயோஜனமில்லாமையாலும், பிண்டோதக தானங்களைப்போல இதற்குத்தோஷமில்லாமையாலும், ஸ்மிருதிகளில் நிஷேதிக்கப் படாமையாலும் பத்தாம்நாளிலேயே பிரபூதபலிகொடுக்க வேண்டியது. பிரேதத்தின் பசியைத்தீர்த்தால் அந்தக்குலம் விருத்தியை அடையும். ஆகையால் மாதாபிதாக்கள் விஷயத்தில் வெள்ளி முதலிய வார தோஷங் கவனியாமல் பிண்டம் உதகம் இவைகளைக் கொடுப்பதுபோல மற்றவர்கள் விஷயத்தில் பிரபூதபலியை நாள்களைநோக்காமல் பத்தாம்நாளிலேயே செய்யவேண்டு மென்று வசிஷ்டர் கூறினுர். பத்தாம்நாளில் பிரபூத பலியைச்செய்து கல்லைப்பிடுங்கி நதியிலாவது குளத்திலாவது போட்டுவிட்டு பிரேதத்தன்மையை ஒழிக்கவேண்டும்.

பிறகு பதினேராம் நாளில் ஏகோதிஷ்ட சிராத்தத்தைச் செய்யவேண்டும். பிதிர்க்களோடு சேர்க்கப்படாம லிருக்கிற பிதாவைக்குறித்து ஒருவனை மாத்திரம் வைத்துப்போஜன மளிப்பதற்கு ஏகோதிஷ்ட மென்றுபேர். இது தான் முதலாவது சிராத்தம். அதன்பின் பனிரண்டாம் நாளில் சபிண்டீகரத்தைச்செய்து இறந்தவனை பிதிர்க்களோடு சேர்த்துவிட வேண்டியது. இதுவே பிதிர்யக்ஞமாம். அதன்பிறகு ஊனமாஸிகங்களைச் செய்யவேண்டும். நாலுமாஸிகங்களாம். ஒருமாதத்துக்குள் ஒன்றும், நாற்பத்தைந்து நாட்களுக்குள் ஒன்றும், ஆறுமாதத்துக்குள் ஒன்றும், ஆப்திகத்துக்குள் ஒன்றும் ஆகநாலுமாசிகங்கள் செய்யவேண்டும். இவற்றைச் சிஷ்டாசாரத்தை

அனுசரித்துக் குறைந்தநாட்களிலும், செய்யலாம். பிறகு ஆப்திகசிராத்தத்தைச் செய்யவேண்டும். இதற்குள் மாதந்தோறும் திதிமாஸிகத்தையும் சோதோகும்பத்தையும் செய்யவேண்டியது. வருஷம் முடிந்தபின் இறந்துபோனதிதியில் வருஷாப்திக சிராத்தத்தைச்செய்து முடித்தால் பிதிர்யக்ஞம் முடிவாகிறது. அதற்குமேல் மாதந்தோறும் அமாவாசை தர்ப்பணத்தையும் வருஷந்தோறும் திதிசிராத்தத்தையும் தவறாமல் செய்துவரவேண்டும்.

அமாவாசையில் செய்யப்படும் தர்ப்பணம் சிராத்தமுதலானவை உடனே பிதிர்க்களைச் சென்றடைந்து திருப்திசெய்விக்கும். இதற்குக்காரணம் முன்னாலே சில சந்தர்ப்பங்களில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இதுவும் பிரகரணமாதலால் சிறிது கூறிப் பிதிர்யக்ஞத்தை முடித்துவிடுவோம். சந்திரலோகமே பிதிர்லோகம் எனப்படும். அவ்விடத்தில் பிதிர்யக்ஞத்தால் பிரேதத்தன்மை நீங்கின பிதிர்த்தேவர்கள் வசிக்கிறார்கள். பிதிர்த்தேவதைகளுக்குள் சிரேஷ்டமான சந்திரனும் அவ்வுலகத்தில் வசிக்கிறார். இந்தச் சந்திரமண்டலம் சாந்திரமானமாத முடிவாகிய கிருஷ்ணபட்ச அமாவாசையில் சூரியனுக்கு நேரில்வந்து சூரியனில் மறைந்துநிற்கும். இப்படிச் சந்திரன் சூரியனில் மறைவதையே அமாவாசை யென்று கூறுகிறார்கள்.

பாரத யுத்த ஆரம்பத்தில் துரியோதனன் ஆயுதமெடுப்பதற்குத் தகுந்த முகூர்த்தம் வைத்துத் தரும்படி பீஷ்மரைக் கேட்டான். அவர் நாள் வைப்பதற்குச் சகாதேவனைத் தவிர வல்லவர்களில்லை. அவனைக் கேள் என்று கூறினார். துரியோதனன் ஆச்சரியமடைந்து, அப்படியே ஓர் இரவில் சூத்திர வாகனத்தில் ஆரோகணித்துக்கொண்டு சகாதேவனிடம் போனான். சகாதேவன் தமையனுக்கு மரியாதையுடன் வணங்கி வந்தகாரியம் யாது என்று கேட்டான். துரியோதனன், தொடங்கப்போகிற இந்தப் பாரதயுத்தத்தில் நான் தர்ம புத்திரனை வென்று ஜயம்பெற விரும்புகிறேன். அதற்காக ஆயுதமெடுப்பதற்குத் தகுந்த முகூர்த்தங் கேட்கவந்தேன் என்றான். சகாதேவன் களங்கமற்ற சித்தத்துடன் நாளையன்று அமாவாசை. அன்றுதினம் காளிக்குப் பலியிட்டு ஆயுதமெடுத்தால் சத்துருவை ஜயிப்பது நிச்சயம். இது தவறாதென்று உண்மையாக நாளிட்டுக் கொடுத்தான். இதையுணர்ந்த கண்ணன் மறுநாள் விடிந்ததும் இன்றுதினம் அமாவாசை எல்லாரும் பிதிர்த்தர்ப்பணம் செய்யவேண்டுமென்று கூறினார். எல்லாரும் கிருஷ்ணசாமியின் வார்த்தையை நம்பி அமாவாசை தர்ப்பணம் செய்தார்கள். சூரிய சந்திரர்கள் இந்திரனிடம் போய் நாங்களிருவரும் சேருகிற தினம் அல்லவா அமாவாசை. நாளைக்கல்லவோ நாங்களிருவரும் ஒன்றுகூடுவோம். பூலோகத்தில் இன்று அமாவாசைதர்ப்பணம் செய்கிறார்களே. இது என்னவென்று கேட்டார்கள். இந்திரன் ஆலோசித்து கண்ணன் செயலாகவே யிருக்கும். பூலோகம்போய்க் கண்ணனைக் கேட்போமென்று கருதி சூரிய சந்திரர்களை முன்னிட்டுக்கொண்டு கண்ணனிடம் சென்றான். அப்போது சூரியன் முதலிலும் அவனுக்குப் பின்னால் சந்திரனும் நின்றார்கள். மற்றவர்கள் அவனுக்குப் பின்னால் நின்றார்கள். சூரியன் கண்ணனை



நோக்கி இங்குள்ளவர்கள் அமாவாசை தர்ப்பணம் செய்கிறார்களே, இதற்குக் காரணம் யாது என்று கேட்டான். கண்ணன் அமாவாசை யென்பது என்ன என்றார். சூரியன், நானும் சந்திரனும் ஒன்றுசேர்வது என்றான். அப்படியானால் இப்போது நீங்கள் என்னமாய் நிற்கிறீர்கள் என்று கேட்டார். சூரியன்: நான் முன்னும் எனக்குப்பின் சந்திரனுமாக நிற்கிறோமென்றான். சூரியனில் சந்திரன் மறைவதே அமாவாசையானால், இப்போது நீயும் சந்திரனும் கூடியிருக்கிறீர்கள். சந்திரன் உன்னில் மறைந்து நிற்கிறான். ஆதலால் இன்று அமாவாசை யென்பதில் ஐயம் யாது? ஒரு ஆக்ஷேபனையும் இல்லாதபடியால் இன்று தான் அமாவாசை. நீங்கள் போகலாமென்றார். சூரியன், சுவாமி அப்படியானால், எங்களுக்கு ஒரு நாளைய கதி தவறிப்போகிறதே. நாங்கள் எப்படி அதைச் சரிப்படுத்திக்கொள்கிறது என்று கேட்டான். கண்ணன் இன்று முதல் திதிகள் ஏறியும் குறைந்தும் வருவதால், பிச்சதிதிகள் உண்டாகும். அந்தப் பிச்சத்தில் உங்கள் திதி சரிப்பட்டுப்போகும் என்று கூறினார். அது முதல் பிச்ச திதிகள் ஏற்பட்டனவென்று பாரதம் கூறுகின்றது. இதனால் சூரியனும் சந்திரனும் கூடுவதே அமாவாசை யென்பது விளங்கும்.

ஆதலால் அமாவாசையில் சூரியனுக்குக் கீழே சந்திரன் நிற்கிறான். அவனுக்குக் கீழாக நாம் இருக்கிறோம். ஆதலால் இன்று செய்யயப்படும் பிதிர்த்தர்ப்பணம் சிராத்தம் முதலியன சீக்கிரத்தில் பிதிர்லோகத்தை அடைந்து பிதிர்த்தேவதைகளைத் திருப்தி செய்விக்கும். எள்ளும் தர்ப்பையும் சீரசக்தியை வெகு சீக்கிரமாய் வெளிப்படுத்தும் வல்லமை யுள்ளவை. அவற்றுடன்கலந்த நீர் சூரியகிரணத்தில் ஆவிரூபமாய் மேல்நோக்கிச் செல்லும். சூரியகிரணம் வேகமாய் அந்த ஆவியை மேலேயிழுக்கும். ஆவியானது வெகு சீக்கிரத்தில் பிதிர்லோகத்தை அடையும். அது தத்தம் பிதிர்க்களையே அடையும். இறந்தவர்களுடைய சரீரமும் கர்த்தாவின் சரீரமும் ஒன்றாதலால் இருவர் சரீரகுணமும் ஒன்றாகவே யிருக்கும். இனம் இனத்தோடு சேரும் என்கிற நியாயத்தால் தர்ப்பணாதிகள் செய்பவனுடைய சரீரகுணமானது தன் பிதிர்குணத்துக்கு ஒத்த குணமுள்ள பிதிர்க்களை யடையும். சொர்க்க நரகங்களிலிருக்கிற ஆன்மாவின் சூட்சும சரீரத்தையும் சூரியகிரண வழிபற்றிச் சென்றடையும். அதனால் சொர்க்கத்தில் உள்ளவர்கள் அதிக புண்ணியத்தையும் நரகத்திலுள்ளவர்கள் விடுதலையையும் அடைவார்கள். இதனால் புத்திரர்கள் தம்மைப்பெற்று வளர்த்து அறிவையுண்டாக்கி மேன்மை பெறச்செய்த மாதா பிதாக்களுக்குப் பெரிய உபகாரம் செய்தவர்களாய், நன்றிமறவாமை என்னும் பெரிய தர்மத்தைச் செய்தவர்களாய்ச் சொர்க்காதி புண்ணிய உலகங்களை யடைவார்கள். தேவாராதனையும் பிதிராராதனையுமாகிய இரண்டுமே மனிதர்களை நற்கதிசேர்க்கும் சாதனங்களாம். தேவாராதனை செய்யாதவனாயிருந்தாலும் பிதிர் கர்மத்தைச் செய்தே தீரவேண்டும். அதனாலேயே எதைவிட்டவரும் பிதிர்க்கிருத்தியத்தைத் தவறாமல் செய்துவருகிறார்கள். தேவாராதனை செய்யாதவனைத் தூஷிப்பதில்லை. பிதிராராதனை செய்யாதவனைப் பாதகனென்று எல்லாரும் தூஷிப்பார்கள். ஆதலால் எப்பாடுபட்டாவது, எவ்வகையிலாவது பிதிர்க்கிருத்தியத்தைச் செய்து தீரவேண்டும். சுபம்.

பிதிர்யக்ஞம் முற்றும்.

(தொடரும்)

**சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

# ஆசாரப்பகுதி.

## காபி பானமும் அதனால் ஏற்படும் கெடுதல்களும்.

"குட்ஹெல்த்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பின்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன.

ஒரு நகர பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயினி சின்னாட்களுக்கு முன் தன்னுடைய பள்ளிக்கூட அனுபவத்தில் நிகழ்ந்தேறிய ஒரு நிகழ்ச்சியை "குட்ஹெல்த்" பத்திரிகையின் ஆசிரியரிடத்தில் கூறினாள். அதன் சாரம் வருமாறு:—தவறான முறைகளில் ஆகாரத்தை உட்கொள்ளுவதனால் நேரிடக் கூடிய சாதகபாதகங்களைப் பிள்ளைகள் நேரில் கண்டு தெளிவதற்காகச் சுகாதாரவளர்ச்சி சங்கத்திலிருந்து மூன்று எலிகள் எனது பள்ளிக்கூடத்திற்குக் கடனாக அனுப்பப்பட்டன. இந்த எலிகளில் ஒன்றுக்கு காபி, தேத்தண்ணீர் ஆகிய இவைகளைக் கொடுக்காமல் சுகாதாரத்துடன்கூடிய சிறந்த ஆகாரம் மாத்திரம் கொடுக்கப்பட்டு வந்தது. மற்றோர் எலிக்கு தேயிலைப்பானம், ரொட்டி, சர்க்கரை முதலியவைகள் மாத்திரம் உணவாகக் கொடுக்கப்பட்டது. மூன்றாவது எலிக்கு, காபி, ரொட்டி, சர்க்கரை ஆகிய இவைகள் ஆகாரமாகக் கொடுக்கப்பட்டது. சுகாதாரத்துடன்கூடிய சிறந்த ஆகாரத்தை உண்டுவந்த எலி மிகுந்த புஷ்டியும், பருமனும் உள்ளதாய், பார்ப்பதற்கு அழகாக இருந்தது. மற்ற எலிகளைவிட அது மிகுந்த பலமுடையதாக இருந்தது. காபியையும், தேயிலைப் பானத்தையும் ஆகாரமாகச் சாப்பிட்டுவந்த மற்ற இரண்டு எலிகளும் நாளுக்குநாள் பலஹீனமடைந்து உருவத்திலும் சிறியவையாகவே இருந்தன. அவைகள் வளரவேயில்லை. சுகாதாரத்துடன் கூடிய உணவை யுண்டுவந்த எலியானது மிகுந்த விளையாட்டுத்தனத்துடன் கூடியதாகவும், நல்ல குணமுடையதாகவும் இருந்தது. பள்ளிக்கூடத்திலுள்ள குழந்தைகள் தொட்டாலும் அது அவர்களை ஒன்றும் செய்வதில்லை. காப்பி, தேயிலைப்பானம் இவைகளை உணவாக உட்கொண்டிருந்த மற்ற இரண்டு எலிகளும், மிகுந்த கோபத்துடன் கூடியவைகளாகவும், கெட்ட குணத்துடன் கூடியவைகளாகவும் இருந்தன. இவ்விரண்டு எலிகளையும் பள்ளிக்கூடத்திலுள்ள குழந்தைகள் தொட்டுவிடக்கூடாது. தொட்டுவிட்டால் அவைகள் அவர்களைக் கடித்துவிடும். பிள்ளைகளில் யாராவது அவைகளிடத்தில் நெருங்கினால் அவைகள் கோபத்துடன் சீறும். அந்த இரண்டு எலிகளும் ஒன்றுக்கொன்று சதா சண்டை போட்டுக்கொண்டே யிருக்கும்.

பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் தினந்தோறும் தனது வகுப்பிலுள்ள மற்ற குழந்தைகளுடன் சச்சரவு செய்துகொண்டிருப்பது வழக்கம். அப்பையன் எலிகள் சம்பந்தமான விஷயங்களை



யெல்லாம் கவனித்து நன்கு அறிந்துகொண்டான். சிறந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுவந்த எலியின் நிலைமையையும், காபி, தேயிலைப்பானம் இவைகளைச் சாப்பிட்டுவந்த எலிகளின் நிலைமையையும் அவன் நேரில் பார்த்துத் தெரிந்துகொண்டதும், அவன் வீட்டில் காபி சாப்பிடும் வழக்கத்தை அறவே ஒழித்துவிட்டான். பின்பு சிலவாரங்களுக்குப் பிறகு அவன் பள்ளிக்கூடத்திற்குச் சென்று தனது உபாத்தியாயினியிடத்தில் "நான் வீட்டில் காபி சாப்பிடும் வழக்கத்தை நிறுத்தியதிலிருந்து எனது வகுப்பிலுள்ள மற்றவர்களுடன் சண்டை சச்சரவு செய்துகொள்வதேயில்லை. காபியை நிறுத்தியதும், அந்தக் கெட்ட வழக்கமும் என்னைவிட்டு நீங்கியது" என்றான்.

காபி, தேயிலை முதலிய பானங்களைப் பருகுவதனால் மனிதனது தேக சக்திகள் குறைவுபடுவதுடன், அவனது இயற்கையான நற்குணங்களும் மாறிவிடுகின்றன. விடாமல் சதா காபியையே குடித்துக்கொண்டிருக்கின்ற மனிதன் தனது தேகவலிமையை இழந்து பலவித வியாதிகளுக்கு உள்ளாகின்றான். அப்பானங்களை அருந்துகின்றவர்கள் மிகுந்த கோபமுடையவர்களாகவும், மன உறுதியற்றவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள் என்று பல சிறந்த வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். அப்பானங்களைப் பருகுவதனால் சிறுமைத்தனம், கோபம், தடுமாற்றம், சச்சரவு செய்தல் முதலிய துர்க்குணங்கள் மனிதர்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றன.

மனிதனது தேக ஆரோக்கியத்திற்கு நித்திரையே மிகவும் இன்றியமையாதது. நித்திரையில்லாதவன் தேக ஆரோக்கியமற்றவனாகவே யிருப்பான். காபி, தேயிலைப்பானம் முதலியவைகளைக் குடிப்பதனால் தேக ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகவுள்ள நித்திரை மனிதர்களுக்குக் கெட்டுவிடுகின்றது. நித்திரை கெடுவதனால் அவர்களுக்குப் பல வியாதிகள் ஏற்படுகின்றன. அவர்களது தேகவலிமையும் கெட்டுத் தேகத்திலுள்ள தசைநார்களும் பல ஹீனமடைகின்றன. பகலில் வேலைசெய்து களைத்துப்போன மனிதன் நல்ல நித்திரையின் பயனாகவே தனது பலத்தைத் திரும்பவும் அடைகின்றான். கடுமையாக வேலைசெய்வதனால் தேகத்திலுள்ள நரம்புகள் தளர்ச்சி யடைகின்றன. நல்ல நித்திரையினால் அந்த நரம்புகளின் தளர்ச்சி நீங்கி முன்போல் அவைகள் திரும்பவும் வலுவடைகின்றன. காபியையும், தேயிலையையும் பானம் செய்கின்றவன் நல்ல தூக்கமற்ற ஒரு நிலைமையை அடைந்துவிடுகின்றான். எனவே தேக ஆரோக்கியத்தைக் கெடுக்கக்கூடிய பானங்களை மனிதர்கள் அறவே ஒழித்துவிடவேண்டும்.

களைத்துப்போன ஒரு குழந்தையானது மிகுந்த கோபமுள்ளதாகவும், மற்றவர்களுக்குப் பல தொந்திரவுகளைக் கொடுக்கக்கூடியதாகவும், பிடிவாதமுள்ளதாகவும் இருக்கின்றது. இம்மாதிரி களைப்புற்ற மனிதர்களும், ஸ்திரீகளும், தீரமற்றவர்களாகவும், விவேகமில்லாதவர்களாகவும், பிறருடைய குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் தங்களது கவனத்தைச் செலுத்துகின்றவர்களாகவும் அதிருப்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே காபி பானமும்,

தேயிலைப்பானமும் ஏன் உலக மகாயுத்தத்திற்கு ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடாது? காபி குடிக்கும் வழக்கம் மிகவும் கொடியது. காபி என்பது ஒரு வகை மருந்து. காபியைக் குடிக்கின்ற மனிதன் அதை நிறுத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றான். இதனால் மனித சமூகத்திற்கு ஏற்படக்கூடிய தீமைகள் எண்ணில. ஆகவே இந்த உலகில் ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்த விரும்புகின்றவர்கள் இக்கொடிய வழக்கங்களை அறவே ஒழித்துவிடவேண்டியது மிகவும் அவசியம். பலவித நோய்களுக்குக் காரணமாக உள்ள இந்தக் கெட்ட பானங்களை ஒருவரும் அருந்தவே கூடாது. எனவே நாட்டவர் அப்பானங்களை அருந்துவதனால் ஏற்படுகின்ற தீமைகளை இனியாவது அறிந்து அதை அறவே ஒழிக்க முயல்வார்களாக.

K. பால சுப்பிரமணியம்.

**குறிப்பு:**—நமது முன்னோர்கள் அதிகாலையில் தந்த சுத்தி செய்துகொண்ட உடனே நீராகாரம் (நிசித்தண்ணீர்) அருந்திவந்தனர். பித்த சாந்திக்கு இது மெத்தவும் யோக்கியமானது. இவ்வழக்கத்தையே நாமும் பின்பற்றி வருவோமானால் சுகமுண்டு.

ப-ர்.

---

## செட்டு.

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை"—குறள்.

வருவாயினும் செலவு சுருங்கிச் சிறிது சேர்த்துவைக்கும் வழி வாழ்தலே 'செட்டு' எனப்படும். 'செட்டு' என்பதற்கு 'லோபத்தனம்' என்று சிலர் பொருள் கொள்ளுகின்றனர். அதுதவறு. வருவாயின் தன்மையுணர்ந்து, நன்மை பயப்பனவற்றைச் செய்தும் தீமை பயப்பனவற்றைக் கடிந்தும் வருதலே அது. செட்டாக வாழ்தல், தம் நயம் பிறர் நயம் என்னும் இரண்டினையும் கருதுவோர்களுடைய செய்கையாகும். ஆதலின், இது உத்தமமான நெறியேயாம்.

"ஓத னத்துக் (கு) உரிய தொரு பொருள்
யாதுண் (டு) அன்னதை இத்துணை நாளைக்குப்
போதும் என்ன அளந்து பொருத்துக
தீதில் நற்பொருள் ஓம்புக சீர்பெற"

நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை வீண் செலவு செய்தல் நேரிதன்று. வரவினும் செலவு குறைந்தே யிருத்தல் வேண்டும். நமக்குச் செலவு நேரும்போது பொருளை எத்துணைக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தோமோ, அதை மனதிற் பதித்து, "இச்செலவு நியாயமா? ஏற்றதா? இன்றியமையாததா?" என்பனவற்றைச் சிந்தித்து, குறைக்கக்கூடியவற்றைக் குறைத்து, வேண்டியவற்றை மட்டும் நேரிய வழியில் செலவிடல் வேண்டும். பூசணிக்காய் போகுமிட மறியாது, கடுகு போகும் இடத்தையே ஆராய்தலும் தவறு.



"வளவனாயினும் அளவறிந் தழித்துண்" என்ற உபதேசமொழியைக் கடைப்பிடியாது வரவுக் கதிகமாகச் செலவிடுதல் கூடாது. அதனால் வரும் பொல்லாங்கு அளவிடற்பாலதன்று.

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் எழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு"

என்ற ஔவையாரின் உறுதியுரையை ஆராய்ந்தறிந்து, வருவாயினுஞ் செலவைச் சுருக்குதல் வேண்டும். "கடன்கொண்டு வாழாமை காண்டலினிதே" யன்றோ?

நம் நாட்டில் பெரும்பாலோர்க்குச் செட்டாகச் செலவிடும் வழக்கம் இல்லை. அவர்கள் வரவு செலவு கணக்கு வைத்துக்கொள்ளாமையே இதற்கு முதற்காரணம் ஆம்.

"ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு" என்பது பழமொழி யாதலின், நாம் செலவு செய்யும் எதற்கும் கணக்கு வைத்துக்கொள்ளுதல் வேண்டும். வருவாயினளவையும் செலவினளவையும் அப்போதைக்கப்போது கணக்கிட்டுப் பார்த்துக்கொண்டு வருவோமேயானால், ஆராதாரித்தனமாகச் செலவிடுதல்நீங்கி, வருவாயினும் செலவு குறைய வழியேற்படும்.

பண்டங்களைப் பாழாக்கலாகாது. "உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை; அப்பனில்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை" என்ற ஓர் பழமொழியுண்டு. ஒரு பொருள் இருக்கும்பொழுதே அதை மற்றும் வாங்குதல் கூடாது. அப்பொருள் செலவாகிக் கஷ்டப்படும்பொழுது வாங்கினால் தான் அதன் அருமை பெருமை தெரிந்து அதை நிதானமாகக் கையாளும் வழக்கம் உண்டாகும். நம் கையிற் பணம் உள்ளதென்று கண்ட கண்ட பொருள்களையெல்லாம் வாங்குதல் அடாது. செலவுநேர்ந்தகாலத்து வரவுக்குத்தக்க செலவு செய்யவேண்டுமேயன்றிக் கடன் வாங்கலாகாது. இடம்பவழிகளிலும், பிறர் போற்றலை எண்ணியும், வீண் செலவிடுதலை முற்றும் கடிதல் வேண்டும். தனக்குள்ள பொருளினின்றும், இன்றியமையாதவற்றைச் சில சமயங்களில் எடுத்துச் செலவிட நேர்ந்திருந்தால், செலவிட்ட அத்தொகையளவு சீக்கிரத்தில் ஈட்டி அதைச் சேமித்துவைத்துள்ள தொகையுடன் சேர்த்துவிடல்வேண்டும். அத்தொகை சேரும்வரை நமது தினமானச் செலவைச் சிறிது குறைத்துக் கொள்ளல் ஆவசிகம். செல்வராய் இருத்தல் என்பது, நம் வருவாயைப்பற்றிய விஷயம் அன்று. பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயினும் அதனாற் கேடில்லை. பொருள் போகின்ற நெறியளவு அதனிற் பெருகாதிருப்பின் போதுமானது. எனவே 'செல்வராதல்' மிதமாகச் 'செலவிடுதலையே பொறுத்தது' என்னும் உண்மையை உன்னி உணர்தல் வேண்டும்.

பிறரைப்போலத் தாமும் செலவழித்தல் வேண்டும் என்றுகொள்ளும் அவாவினாலும், மிக்க தாராள குணத்துடனிருத்தலினாலும், பெரும்போக

நுகர்ச்சியினுலும், தம் சக்திக்கு மீறின செலவுகளைச் செய்தலினுலும், அஜாக்கிரதையினுலுமே பெரும்பாலோர் **செட்டேன்பதின்றிக்** கஷ்டப்படுகின்றனர்.

> "மாரிநாளைக்கு வேண்டுவ மற்றெலாம்
> சீரிதாகிய வேனிலில் தேடியே
> மாரி நாளில் சுகத்தொடும் வைகுக
> ஓரும் உள்ளத் (து) உணர்வுடையோர்கள்தாம்"

என்று திருக்காளத்திப் புராணம் சாற்றுகின்றது. வருவாய்க்கு மேற்பட்ட செலவுசெய்யாமலும் வரவத்தனையும் செலவு செய்யாமலும் இருந்தாற்றான், ஏதாவது பொருள் சேர்த்துவைத்தல் கூடும். வாழ்வும் தாழ்வும் சகடக்கால் போல் மாறி மாறி வருவன.

> "குன்றத் தனை இரு நிதியைப் படைத்தோர்
> அன்றைப் பகலே அழியினும் அழிவர்."

> "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
> வைத்தூறுபோலக் கெடும்."

எறும்பானது மழைக்காலத்திற்கு வேண்டும் உணவுப் பொருள்களை வெயிற்காலத்திற்றனே தேடி வைத்துக்கொள்ளுதல்போல நாமும் முதுமைப் பருவத்திற்காவனவற்றை இளமைப் பருவத்திற்றனே ஈட்டிவைத்துக்கொள்ளுதல் வேண்டும். "ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்" காலமும் உண்டாதல் போல், நாம் பிணியினுலும் முதுமையினுலும் பல்வேறு இடையூறுகளினுலும் பொருள் வருவாயற்று இன்னலுறுங் காலமும் உண்டாகும். ஆதலின், இளமைப்பருவமும், தேகதிடனும், பொருள் வருவாயும் உள்ளகாலத்தே, பின்னர் வேண்டியவற்றைச் சேர்த்துவைக்காமற் போவோமாயின், பிற்காலத்தில் அரைக்காசும் கிடைப்பதரிதாகி இடருறநேரும். ஆதலின் 'பொருள்தனைப் போற்றிவாழ்' என்னும் ஔவையாரின் உபதேசத்தைச் செவ்வையுறத் தேர்ந்து, வருவாயில் நான்கில் ஒரு பங்காயினும், அதுவும் ஏலாதேல், பத்தில் ஒரு பங்காயினும், அதுவும் முடியாதேல், நம் சத்திக்கு இயன்ற அற்பத்தொகையையேனும் பிற்காலத்திற் கெனச் சேமித்துவைத்தல் நமக்கேற்பட்ட கடமைகளி லொன்றும்.

'செட்டு' ஆண் பெண் என்ற இருபாலாருக்கும் பொதுவேயாம். எனினும் இல்லிற்குத் தலைவி இல்லாளே யாதலின், பெண்பாலார் இவ்விஷயத்தை ஆடவரினும் சிறிது அதிகமாகக் கவனிக்கவேண்டும்:

> "செட்டுள்ள பெண்கையில் செல்வஞ் செழிக்குமே
> செந்திருவே! தன்வரவை மிஞ்சி
> மட்டில்லாமற் செலவிட்டு வரப்பணம்
> கெட்டோடிப் போமடித் தோழிப்பெண்ணே!"

என்ற 'மின்னர் நீதிக் கும்மிச்செய்யுள்' இங்கு உன்னுதற் குரித்தாம்.



செட்டைக் கைக்கொள்ளுவதினுல் அகங்காரம், சினம், ஒழுங்கீனம் முதலிய துர்க்குணங்கள் நம்மைவிட்டு நீங்கும். வாய்மை, நீதி, ஒழுங்கு, தன்னடக்கம், நல்லறிவு முதலிய உயரிய குணங்கள் நம்பால் எய்தும். தரித்திரம் தரித்திராது. கிழவயதில் அழவேண்டியதேயில்லை. மனதிற்குச் சாந்தியும், சந்தோஷமும், உற்சாகமும் உண்டாகும். உலகிற்கும் பல நலமான வழிகளில் உதவிசெய்தலும் இயலும். புகழும் மதிப்பும் உண்டாகும். அறத்தாற்றின் ஈட்டிய அப்பொருள் அறத்தையும், இன்பத்தையும் கொடுக்கும். துன்பத்தைத் தடுக்கும். பகையென்னு மிருளைக் கெடுக்கும். ஆதலின் தமக்கு நலம் தேட விரும்புவோர் வீண்செலவு செய்யாமலும் கடன்வாங்காமலும் **செட்டும் கட்டுமாகச் செலவு** செய்து பொருள்சேர்த்து இன்புறுவார்களாக.

> வருவா யினுஞ்செலவு மட்டுறவே செய்தல்
> பெருமைதரும் செட்டுநெறி பேண். சுபம் !!

**பண்டித-சே. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்,**
*தமிழாசிரியர்-போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.*

## தெய்வவணக்கப்பகுதி.

கல்வியறிவு ஒழுக்கம் நிறைந்த பத்திரிகாசிரிய ரவர்கட்கும் மற்றப்பெரியோர்கட்கும் சிற்றறிவுடையவனுகிய எனது தாழ்மையான விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்திரிகைகட்கு விஷயதானம் புரிவோர், சுருதி - யுக்தி - அநுபோகம், நிரம்பப்பெற்றவராயும் டம்பமின்மை யுடையவராயும் - தம்பெயர், விஷயத்தின் கீழ்ப்பொறித்திருப்பதை யாவருங்கண்டு கொள்ள வேண்டுமென்ற வீண் எண்ணமின்மை யுடையவராயும், கதைகளின் கலையே வியாசமாக எழுதாதவராயும், தமிழில் வசனநடைகளை சாஸ்திரவல்லமையினுல் தாமே எழுதுபவராயும், அறம்பொருள் இன்பம், வீடு அடைதல் நூற்பயனே, என்பதை விளக்கி எழுதுபவராயும் வன்மைவாய்ந்த இலக்ஷணங்க ளமைந்துள்ளவரே விஷயதானம்புரிய அதிகாரிகளாவார்கள். ஆயினும் இவ்வியல்பின்மையான யான் பின்னர்வரும் வியாசத்தை, அறிவுடையோர்கள் முன்னர் எழுதப்புகுவது எத்தகையதெனின்,

> அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
> தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
> இறையு ஞானமி லாதவென் புன்கவி
> முறையி னூலுணர்ந் தாரு முனிவரோ

என்ற திடத்தை யொக்கும். குற்றங் [illegible] குணங்களைக் கொள்ளுமாறு வேண்டுகின்[illegible]ன்.

169842

## கடவுள் வழிபாடு.

இக்காலத்தில் கடவுள் வழிபாட்டின் நிலைமையைப்பற்றி ஆராயின் மிக்க பரிதாபமாகவே யிருக்கிறது. முற்காலத்தில் "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்ற முதுமொழிக்கிணங்க, அரசர்கள் முதல் ஏழைகள் வரையில் உள்ளவரனைவரும் இந்து நீதிசாஸ்திரங்களிற் கூறப்பட்ட விதிகளை யநுசரித்து, திருக்கோவிலில் சுவாமி தரிசனஞ்செய்யப் புகுந்தால், கடவுள் இன்ன நிலைமையுடையவரென்றும் நாமின்ன நிலைமையுடையோமென்றும் அறிவினாலாராய்ந்து மனவாக்குக் காயமாகிய திரிகரண சுத்தியாய் ஏதாவது சில கையுறையோடு சென்று படைத்தளித்துத் துடைக்கவல்ல பழம்பொருளைக் கண்களினாலே கண்டுகளித்து, நாத்தழும்பேறப்பாடி, உரோமஞ் சிலிர்ப்ப வானந்த பரவசங்கொண்டு, நமஸ்காரஞ்செய்து மிக்க புண்யப்பேற்றினையடைந்தார்கள். எவ்வாறெனிற் கூறுதும்.

முற்காலத்தில் மகரிஷிகள் நிறைந்த, ஞானமணங்கமழ்ந்த, அதிகவிகள் மலிந்த இப்பரத கண்டமாகிய இவ்விந்திய க்ஷேத்திரத்தை முத்தமிழில்வல்ல உத்தமர்களாய், சித்த சீலர்களாய், அருளொழுகு மன்பையே யுடைமையாகப் பெற்ற இந்தியமன்னர்களே செங்கோல் வழுவாது ஆண்டு அரசியலை நடாத்தி வந்தனர்.

அம்மன்னர்க ளாலயதரிசனஞ் செய்யப்புகுந்தால் ஒரு ஏழ்மை நிலையுடையவராய் நானென்கின்ற வகங்காரத்தையும் எனதென்கின்ற மமகாரத்தையும் ஒழித்து, ஆண்டான் அடிமையென்ற சம்பந்தத்தோடு ஆடம்பரமற்ற செயலினராய் சுவாமி தரிசனஞ்செய்து வருவது வழக்கம். மேற்கோளாக சிறிது கூறுவாம்.

புண்யக்ஷேத்திரமாயு முத்தித்தலங்களி லொன்றாயும் விளங்குகின்ற மதுரையம்பதியிலே முன்காலத்திலே அரசியல்கள் நடாத்திவந்த, பாண்டிய இராஜாக்கள் நாடோறு மாலயத்திற்குச் சென்று சோமசுந்தரக் கடவுளை யபரிமிதமான அன்போடு வழிபாடுசெய்து மிக்கவுருக்கமாக நாக்களினாலே பகவானின் ஆடற்குணங்களைப் பாக்களினாற் பக்தியாகப்பாடி, கண்களிலிருந்து ஆனந்த நீர்த்தாரைகளைப் பொழிந்து பக்திப்பிரேமையுடன் மன்னர் முடி பணியும் பொன்னந் தாள்களால் வலப் பிரதக்ஷிணஞ் செய்து அறியவொண்ணா வானந்த நிலையடைந்துளார்க ளென்பதைப்பற்றி, நம்மினிய பாஷையாகிய தமிழில் பரஞ்சோதிமுனிவர் செய்தருளிய திருவிளையாடற் புராணத்திற் படித்துங்கேட்டு மிருக்கிறோம்.

ஆனதுபற்றித்தான் நம்முன்னோர்களும் அரசனெப்படி குடிகளப்படியென்று [illegible] முதுமொழிக்கேற்ப அனைவருமவ்வாறே ஆத்ம [illegible] வந்தனர். சுதேசமன்னர்களின் செல்வாக் [illegible]வாதிக்கமில்லாத [illegible]கரீகப் பேய்பிடித்தலைக்கு மிக்காலத்தில் போதிய தாய்ப்பாஷைக் கல்வி[illegible]ன்மையும், பேரறி வின்மையம், பேச்



சுரிமை யின்மையும், பக்தியின்மையுமுள்ள சில இந்திய பிரபு முதல் ஏழைகள் காறுமுள்ள ஜனங்கட்குப் பிரதிநிதிகளாகப் பேரறிவுள்ளவர்களே, இந்தியர்கள் எந்தவித நிலைமைகளினின்றுந் தவறாது நடந்துகொள்வதற்கு வழிகாட்டியாக விருக்கவேண்டும். அஃதின்றி ஜனப்பொறுப் பாட்சிபெற்ற அவர்களே முன்னிருந்த சைவசமயகுரவர் முதலாகச் சொல்லப்பட்ட மகான்கள் நடந்து காட்டிய ஒழுக்கவழிகளை யெல்லாம் "புதியனபுகுதல் பழையனகழிதல் வழுவலகால வகையினானே" என்று தப்பர்த்தம் செய்துகொண்டு காலத்துக்குத் தகுந்த கோலமாக ஆலயத்தினுட் புகும்போது ஆண்டான் அடிமையென்னு மறிவாற்ற லில்லாதவர்களாய் தோன்றிமறையுஞ் சிற்றின்பப் பட்டத்தைப் பெரிதெனமதித்து, மேனாட்டு வழக்கவுடை தரித்தவர்களாய் ஆடம்பரத்துடன் செல்கின்றார்கள். அதுகண்ட ஏனைய சுதேச சமஸ்தான ராஜாக்களும், தேவஸ்தான கர்த்தாக்களும் டிரஸ்டி யாபீஸர்களும் மற்ற ஏனையசிப்பந்திகளும், அவ்வாறே கற்றுக்கொள்கின்றனர். அறிவாளிகளுற்றுணருங்கள். உலகத்திலொருவர் எவ்விதகாரண முடைமையாலோ அல்லதுஇன்மையாலோ ஒரு கொள்கையை நடந்து காட்டினா லாறறிவுபெற்ற நாமதை (எப்பொருளெத்தன்மைத் தாயினுமப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு) என்பதற்கிணங்க அவைகளினுண்மைப்பாகு பாட்டையறிந்து நடக்கவேண்டும். மேனாட்டு விதிக்கும் நம்நாட்டுவிதிக்கும் யாதொருசம்பந்தங் கிடையாது. ஏனெனில் அந்நாட்டில் எப்பொழுதும் பனியுமழையு மிகுதியானதினாலே மிகவும் குளிருண்டாகும். அதனாலவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாதத்திற்கு பூட்சும், காலுக்கு உரத்தசட்டையும் மேலுக்கு கடினமும் வெப்பமுமுள்ள பெரிய பிளானல்கோட்டும் தலைக்கு இடமகன்ற நவீன தொப்பியுமவர்கள் சதாகாலமு மணிந்துகொள்வார்கள். அவர்கள் சபைக்குச் சென்றாலும் இயேசு ஆலயங்களுக்குச் சென்றாலும் அவ்வாடம்பர வுடைகளுடன்சென்று தரைமிகவும் குளிராயிருப்பதனால் அங்குபோடப்பட் டிருக்கும் நாற்காலிமுதலிய வாசனங்களிலமர்ந்து அப்படியே அவர்கள் கடவுள்வழிபாடு முதலான காரியங்களைச் செய்வார்கள். தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்தபடி அநுஷ்டானங்களுள்ளன. நம்தேசமோ உஷ்ணமிகுந்தது. திருக்கோவிலுள்ளும் இரதோற்சவத்தினும் சனநெருக்க மிகுதியினால் வெப்பம் மிகுதியே. அப்படியிருந்தும் தெய்வப்பிரீதி யில்லாததாயும் ஆடம்பரமுதலிய குணங்களைக் கொடுப்பதாயும் சரீரத்திற்கு வியர்வையினால் நாற்றத்தையும், கஷ்டத்தையுங் கொடுக்கக்கூடிய சட்டை டைமுதலியவைகளை அணிந்து, ஈஸ்வர சிந்தனையற்று டாம்பீகத்துடன் செல்வது ஒருநன்மையும் கொடாது.

மற்றும் ஜீவப்பிரம வைக்கியத்தை யடையுமருமையான அறிவாளிகள் வம்சத்திலே தோன்றியுள்ள பிராமணர் முதலாகவுள்ள வைதீக ஹிந்துக்கள் சிரசிலே பசுவின்குளம்படி சிகைவைத்துக் கொள்ளவேண்டு மென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. அவற்றையெல்லாம் அநாகரீகமென்று புறக்கணித்து அம்பட்டனைக்கொண்டு கால்வெட்டு அரைக்கால் வெட்டுகளாக வெட்டித் திருகி, முருக்கிவகிர்ந்து எண்ணெயிட்டு சீவி பாதிநெற்றிபரியந்தம் தொங்கி விழும்

படி சிகை விட்டிருக்கிறார்கள். அந்தக்குதிரையின் மயிரைப்போன்று சிகை தொங்கிவிழும்படியான நெற்றியிலே சிவச்சின்னமாகிய விபூதியையோ அல்லது திருமண்ணையோ தரித்தால் அதற்கு பங்கம்வந்துவிடுமென்று நினைக்கிறார்கள். பிரசாதங் கொடுக்கும்படியான விபூதியை யப்படியே திலதமிட்டு மற்றமிகுதியை மார்பிலணிய வேண்டுமென்றாலோ அது சட்டைகளாகிற நாகரீகவுறையால் நன்றாய் மூடப்பட்டிருக்கின்றது. என்செய்வார். கீழேதூவி விடுகின்றார்கள். இவர்கள் கதியென்ன.

வாங்கிய திருவெண்ணீற்றை மண்ணின்மேற் பாதிபோட்டே
யாங்கதைத் தூவித்தூவி யணிகின்ற மூடர்க்கெல்லாம்
பூங்குழற் கமலைசேராள் புலையரிற் புலையராகித்
தீங்குள்ள நரகந்தன்னிற் சேர்வது திண்ணந்தானே

என்றார் ஓர் பெரியார். இக் கதிக்கான கூடாவொழுக்கத்தைவிட்டு கடவுளுண்டென்கின்ற பயபக்தி யுடையவர்களாய் புராதனகாலத்து பெரியார் நடந்துகொண்ட விதிகளை அறிவாளிகளுன்றிப் பார்ப்பார்களாக. இவ்விதமின்றி அந்யாய ஆடம்பர வழிபாடெல்லாம் ஒருகாலுந் தெய்வப்பிரீதியாகவேயாகாது, இன்றிருந்து நாளையிறக்குந் தொழிலுடைய மாக்கள் புரியும் ஆடம்பர அந்யாய அநாகரீக வழிபாடானவை குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதை யொக்கும். இவையெல்லாம் அறிவாளிகளுக்குத் தெரியாதவையல்ல. எம்பெருமானின் ஆலயத்திலும் அந்நிய நாட்டு ஆசாரவழக்கங்கள் வந்து தாண்டவமாடுகின்றனவே. இதுவு மீசனினுறக்கமோ, காலநிர்ணயவழக்கமோ, கலிகாலத்தி னொழுக்கமோ என்பதை என் மனம் உன்னி யுன்னி, அக்கினியிற்பட்ட மெழுகுபோல வல்லற்படுகின்றது. இக்குறைக ளெல்லாவற்றையும் போறிவில்லாத வெம்போன்றவர்களால் பத்திரிகைகள் மூலமாவது பிரசங்கமூலமாவது நிவிர்த்திசெய்ய நினைப்பது கடலிற் காயத்தையுறைப்பதை யொக்கும். இக்குறைகளை யருக்கனொளி போன்ற அபார சக்தியுடைய அய்யனுமீச னருள் புரிந்தகற்றுவாராக.

வை. பெ. பெருமாள்ரெட்டி.

## விவசாயப்பகுதி.

### நெல் சாகுபடியும், அதற்குவேண்டிய எருவும்.

பண்டை நாட்களிலிருந்தே நமதுதேசம் விவசாயத்தில் சிறந்து விளங்கி வருகின்றதென்பதை எவரும் மறுத்துக் கூற முடியாது. மற்ற தான்யங்களைக் காட்டிலும் நெல்லையே நமது முன்னோர்கள் அதிகமாகச் சாகுபடி செய்து வந்தார்கள். நமது நாடு இயற்கையிலே நெல் சாகுபடிக்குத் தகுந்ததாக அமைந்திருக்கின்றது. நெல் சாகுபடிக்கு வேண்டிய ஜலத்திற்கு நமது



நாட்டில் பஞ்சமென்பதேயில்லை. ஏனெனில் நமது நாட்டில் ஆறுகளும் நதிகளும் ஏராளமாக இருக்கின்றன. நமது சென்னை மாகாணத்தில் நெல் சாகுபடிக்கு இயற்கையாக இருக்கின்ற வசதிகள் மற்ற மாகாணங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் நமது மாகாணத்திலிருப்பவர்கள் தங்களது முன்னோர்களைப்போல் விவசாயவிஷயத்தில் தங்களது கவனத்தைச் செலுத்தி உழைக்காமல் அரிய காலத்தை வேறு பல உபயோகமற்ற வழிகளில் வீணே கழித்து வருகின்றனர். நமது மாகாணத்தில் 10943700 ஏகரா பூமிகளில் நெல் சாகுபடி நடைபெற்று வருகின்றது. நெல் சாகுபடி ஏராளமாக நடைபெற்றபோதிலும், அதற்குத்தகுந்த பலன் கிடைக்கின்றதா என்பதே நமது கேள்வி. நமது மாகாணத்திலுள்ள கிராமங்களில் வசித்துவந்த பலர் தங்களது விவசாயத்தொழிலை விட்டுவிட்டுத் தங்கள் நிலங்களை மற்றவர்களிடம் குத்தகைக்கு ஒப்படைத்துவிட்டு, நகரங்களில் சென்று அங்கே தமது காலத்தை வீணாகக் கழித்து வருகின்றனர். பண்டைநாட்களில் நமது நாட்டில் விவசாயம் இப்பொழுது நடைபெறுவதைப் போல் அதிகமாக நடைபெறவில்லை. ஆனால் நமது முன்னோர்கள் ஒவ்வொருவரும் விவசாயத்தில் அக்கரை யுடையவர்களாய் தங்களது நிலங்களுக்கு வேண்டிய எருக்களையும், உரங்களையும் காலத்தில் போட்டு, தங்களது நிலத்தைப்பற்றிய சாகுபடி விஷயங்களை நேரில் கவனித்து வந்தனர். அப்படி அவர்கள் கவனம் செலுத்த வேண்டிய காரியங்களைச் செய்துவந்ததனால் அக்காலத்தில் விளைவு மிகவும் அதிகமாயிருந்தது. மற்ற நாட்டவர்களைப்போல் நமக்குக் கஷ்டமென்பதேயில்லை. விவசாயத்தை மட்டும் கவனித்து நம் நாட்டு மக்கள் அதற்குவேண்டிய காரியங்களைச் செய்துவந்தால் நமது நாட்டில் பஞ்சம் தலைகாட்டுமா? நமது நாட்டிலுள்ளவர்கள் வறுமை என்ற கொடிய நோய்க்கு ஆளாகி வருந்துவார்களா? நமது நாட்டிலுள்ள எளியவர்கள் தங்களது வயிற்றுப்பிழைப்பின் நிமித்தம் ஆயிரக்கணக்காக வெளிநாடுகளிலுள்ள தோட்டங்களுக்குச் சென்று அங்கு கூலிகளாகப் பலவித கஷ்டங்களுக் குள்ளாவார்களா? நமது நாட்டு விவசாயம் தற்காலம் நம் நாட்டிலுள்ளவர்களால் அறவே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. விவசாயத்தொழில் செய்வதையே தற்காலம் நமது நாட்டிலுள்ளவர்களில் பலர் இழிதொழிலாகக் கருதிவருகின்றனர். அடிமைத் தொழில் செய்து மிகுந்த கஷ்டத்துடன் வயிறு வளர்ப்பது இழிவா? உழுது பயிர்செய்து சுகஜீவனம் செய்வது இழிவா? மேல்நாட்டு நாகரிகம் நம் நாட்டு மக்களைப் பல வழிகளிலும் கெடுத்து விட்டது என்றே சொல்லலாம். அதன்பயனாகவே நம் நாட்டவர் பலவித கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

பண்டை நாட்களில் நமது நாட்டை ஆண்டுவந்த மன்னர்கள் நம் நாட்டு விவசாயத் தொழிலில் மிகுந்த கவனம் செலுத்திவந்தனர். விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய பல உதவிகளையும் அவர்கள் விருப்புடன் செய்துவந்தார்கள். கவிச்சக்ரவர்த்தியான கம்பரும் தாம் எழுதியுள்ள ஏர் எழுபது என்ற நூலில்,

"வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும், ஓதுவாரெல்லாரும் உழுவார் தம் தலைக்கடைக்கே, கோதைவேன் மன்னவர் தம் குடைவளமும் கொழுவளவே, ஆதலால் இவர் பெருமை யார் உரைக்கவல்லாரே?" என்று புகழ்ந்து கூறியிருக்கின்றார். விவசாயத் தொழிலை நம் நாட்டு மன்னர்களும் பெரியோர்களும் விருப்புடன் செய்து வந்தார்களென்றால், அத்தொழிலின்மேன்மையும், சிறப்பும் தான் என்னே! அப்படிப்பட்ட தொழிலைச் செய்துவந்த நம் பெரியோர்கள் மிகவும் சிறந்தவழியில் தங்களது வாழ்க்கையை நடத்திவரவில்லையா?

தற்காலம் நமது நாட்டின் விவசாயத் தொழிலுக்கு அரசாங்கத்தார் வேண்டிய உதவிகளைச்செய்ய முன்வருகின்றார்களில்லை. நமது மாகாணவிவசாய விஷயத்தில் அரசாங்கத்தார் கவனிக்கவேண்டிய விஷயங்கள்பல இருக்கின்றன. நிலங்களின் சாரத்தை அதிகப்படும்படி செய்து நாட்டின் விளைவை அதிகமாகும்படி செய்வது அரசாங்கத்தாரின் முக்கிய கடமையாகும். ஆனால் தற்காலம் அரசாங்க விவசாய இலாக்கா இவ்விஷயத்தில் போதிய கவலை எடுத்துக்கொண் டிருப்பதாகத் தெரியவில்லை. நிலங்களின் சொந்தக்காரர்களும் விவசாயத்தில் கவனம்செலுத்தித் தங்களது நிலங்களுக்கு வேண்டிய எருக்களையும், ஊரங்களையும் போடுகின்றார்க ளில்லை. அதன் பயனாகவே நமது நாட்டில் விளைவு நாளுக்கு நாள் குறைவுபட்டு வருகின்றது. இனி நமது மாகாணத்தி லுள்ளவர்கள் விவசாய விஷயத்தில் அசிரத்தையாக இருந்துவந்தால் பெருங்கஷ்ட மேற்பட்டுவிடும். எனவே இனியாவது நகரங்களிலுள்ள கிராமவாசிகள் தங்களது கிராமங்களுக்குத் திரும்பிவந்து நிலங்களைச் சரியான முறையில் சாகுபடிசெய்ய முன்வருவார்களாக.

### நிலங்களின் எரு.

கிராமங்களிலுள்ள விவசாயிகள் தழைகளையும் தொழு எருக்களையும் நிலங்களுக்கு எருவாக உபயோகித்து வருகின்றனர். தற்காலம் நிலங்களின் எருவுக்குவேண்டிய அளவு அந்தத் தழைகள் கிராமங்களில் அகப்படுவது கஷ்டமாகிவிட்டது. எனவே கிராமங்களிலுள்ள விவசாயிகள் எருப்போடாமலே தங்களது விவசாயத்தொழிலைச் செய்துவருகின்றனர். வயிற்றுக்குச் சோறுபோடாமல் ஒருவனை வேலைசெய் என்றால் அவன் வேலை செய்வானா? நிலங்களுக்குக் காலாகாலங்களில் வேண்டிய எருக்களைப் போட்டாலன்றோ அவைகள் நல்லபலனைக் கொடுக்கும்! நாட்டில் நமது விவசாயத்திற்கு மிகவும் அவசியமாக இருக்கின்ற கால்நடைகள் இப்பொழுது ஏராளமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. அதன்பயனாக நமது நாட்டில் இதுபோழ்து உழவுக்கு வேண்டிய கால் நடைகளின் தொகையும் மிகவும் குறைந்து விட்டது. நிலத்தை நன்றாக உழுது உரமிட்டாலன்றோ அது நல்லபலனைக் கொடுக்கும்! சரியான எருவும், உழவுமின்றி நிலங்கள் எப்படி நன்குவிளையும்? சாஸ்திரீகமுறையில் தயார்செய்யப்பட்ட எரு என்று கம்பெனிகளில் தயார்செய்யப்பட்டு விற்கப்படுகின்ற எருவை நம் நாட்டி



லுள்ள எளிய விவசாயிகள்வாங்கி உபயோகிக்க முடியவில்லை. ஏனென்றால் கம்பெனியார் அந்த எருவைக் குறைத்தவிலைக்கு விற்காமல் அதிகமான விலைக்கு விற்றுவருகின்றனர். நமது மாகாணத்தில் ஆண்டவனருளால் நிலங்களுக்குச் சிறந்த எருவாக உபயோகிக்கப் படக்கூடிய "பாஸ்பேட்" என்ற உலோக எரு ஏராளமாகத் திருச்சி ஜில்லாவில் கிடைத்திருக்கின்றது. அந்த எருவை எடுத்து ஜனங்களுக்குக் கொடுத்து விவசாயத்தை விருத்திசெய்வதற்கும் நமது காருண்ய அரசாங்கத்தார் முன்வந்தார்களில்லை. அதனால் தான் அந்த எருவும் நம்மாகாணத்திலுள்ள ஜனங்களுக்குக் கிடைக்கவில்லை. முப்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்பு சென்னை சென்ட்ரல் மியூஸியத்திற்கு சூப்ரின்டெண்டாக இருந்த மிஸ்டர் ராத் என்பவர் திருச்சிஜில்லாவில் பூமிக்குள் சுமார் 80 லக்ஷம்டன் "பாஸ்பேட்" எடுக்கத்தக்க இடம் ஒன்று இருக்கின்றதென்றும், அதைவெட்டியெடுக்க அரசாங்கத்தார் முன்வருவார்களானால் அது ஏழை விவசாயிகளின் சாகுபடிக்குத் தகுந்த எருவாக உபயோகப்படும் என்றும் அரசாங்கத்தாருக்கு அறிவித்திருக்கின்றார். அரசாங்கத்தாரும் அந்த இடத்தைப் பரிசீலனைசெய்து பார்த்தனர். டாக்டர், டபிளியூ. எச். ஹாரிஸன் என்ற உலோகப் பொருளாராய்ச்சி நிபுணரும் அந்தப் பிரதேசத்தைப் பரிசீலனை செய்துபார்த்தார். பல ஆங்கிலக் கம்பெனியார் அந்த இடத்தைக் குத்தகைக்கு எடுத்து ஏராளமான பணம்சம்பாதிக்கலாமென்ற நோக்கத்துடன் போட்டிபோட்டுக் கொண்டு முன்வந்தனர். ஆனால் அந்த இடத்தில் சுத்தமான "பாஸ்பேட்" அகப்படாததினால் அவர்கள் தங்களுடைய முயற்சியை விட்டுவிட்டனர். தஞ்சைஜில்லாவில் காவேரிப்பாய்ச்சலிலுள்ள நிலங்களுக்கு இந்தப் "பாஸ்பேட்" ஏற்ற எருவென்று தெரியவருகிறது. இந்த எருவை வெட்டியெடுத்து அரசாங்கத்தார் அதை அரைத்து மாவாக விவசாயிகளுக்குச் சொற்பவிலைக்குக் கொடுத்து உதவிசெய்ய முன்வருவார்களாகில் தென் இந்திய விவசாயிகள் அனைவரும் இதனால் அதிகமான நன்மையையும் பயனையும் அடையக்கூடும். (தொடரும்)

பாலசுப்ரமண்ய சர்மா.

## சுயமொழிப்பகுதி.

### தமிழ் இலக்கண நூல்கள்.

இலக்கண மென்பது தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகைப்படும். இதில் எழுத்து மொழிக்குக் காரணமாயுள்ளது. அது எண், பெயர் முதலிய பத்துவகை பிரிவினை யுடையது. இவைகளைப் பற்றி விவரிக்கும் நூல்களுக்கு இலக்கண நூல்கள் என்று பெயர். எல்லா பாஷைகளிலுமுள்ள இலக்கண நூல்களைக் காட்டிலும், செந்தமிழ் மொழியாகிய நம் தாய்ப் பாஷையில் உள்ளவைகள் அதிக சிறப்புடையனவாயும்,

சுவையுடையனவாயும் விளங்குகின்றன. அகஸ்தியராதி பெரியோர்களால் இயற்றப்பட்ட இந்நூல்கள் தமிழில் பல உள. இவ்விலக்கணங்கள் சில பகுதியை எனும் முழுப்பகுதியையேனும் சுருக்கியும், விரித்தும் உரைக்கும். அந்நூல்களில் முக்கியமானவை சில கீழ்வருமாறு:—

(1) **அகத்தியம்** இதை இயற்றினவர் சிவபெருமானிடத்தில், இத்தென்மொழியைக்கேட்ட முனிக்கரசராகிய அகஸ்தியர். தமிழிற்கு இந்நூலே ஆதி இலக்கணம். இது எழுத்து, சொல், யாப்பு, அணி, பொருள் முதலிய அடங்கிய நூல். இதுபோகத்தியம், சிற்றகத்தியம் என இருவகைப்படும் என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

தற்போது இது வழக்காறற்றது. ஆயினும் போகத்தியத்திரட்டு என அச்சிடப்பட்டு வழங்கி வருகின்ற நூலிலுள்ள சூத்திரங்கள் இதிலுள்ளவைகளே.

(2) **தொல்காப்பியம்**:—தொல்காப்பிய ரிதை இயற்றினவர். இவர் அகஸ்தியர் மாணவரில் ஒருவர். இவ்வாசிரியருக்கு "திரண தூமாக்கினி" எனப் பெயருண்டு. இந்நூலில் பஞ்ச இலக்கணங்களும் நிரம்பி இருக்கின்றன. இது 1612-சூத்திரங்கள் கொண்டது. இத் தொல் காப்பியம் அருமையிலும், பழமையிலும், சூத்திரப் பொருட் செறிவிலும், நயத்திலும் சிறந்து விளங்குகிறது. இதற்கு உரை கூறினவர், சேனாவரையர், கல்லாடர், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியவர்களாம். இடைச்சங்கத்தாராலும் கடைச்சங்கத்தாராலும் இது நன்று புகழப்பட்ட நூல். உரைகளுள், சொல்லதிகாரத்திற்கு மாத்திரம், சேனாவரையர் உரையே சிறப்பாய் வழங்குகின்றது. கல்லாடர் செய்த உரையானது இன்னும் அச்சிற்கு வரவில்லை. ஏட்டில் தவழ்ந்து கிடக்கின்றது. பொருளதிகாரத்தின், இறுதிப் பகுப்பிற்குமாத்திரம் பேராசிரியருடைய உரை அச்சிடப்பட்டிருக்கிறது.

தவிரவும் திருவாவடுதுறை ஆதீனம் வேலப்ப தேசிகரின் சிஷ்யராய், காஞ்சி புராணம், கம்பராந்தாதி, சோமேச வெண்பா முதலிய நூற்களைச் செய்து சமாதியடைந்த சிவஞான முனிவரென்பவர் இந்நூலின் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்கும், அருமையாகவும் விரிவாகவும், தெளிவாகவும் ஒரு உரைசெய்துள்ளார்.

(3) **இறையனாரகப் பொருள்**:—கடைச்சங்கப் புலவருள் ஒருவரான இறையனார் என்பவர் இதன் ஆசிரியர். மதுரையில் எழுந்தருளி இருக்கும் சொக்கலிங்க மூர்த்தியே இவரென்பர். இந்நூலுக்கு உரை, மூங்கைப்பிள்ளையார் என்று சொல்லப்படும் உப்பூரிகுடிகிழார்மகனார் உருத்திரசன்மனார் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டது; அறுபது சூத்திரங்கள் கொண்டது; கடைச்சங்கத்து தலைமைபூண்டு விளங்கின சோமசுந்தரக் கடவுளின் செய்யுளுக்குக் குற்றம் கூறின நக்கீரனார் இதற்கு உரைசெய்துள்ளார். அது ஒப்புயர் வற்ற பொலிவும், நுட்பமும், தெளிவும் உடையது. இது இறையனாரகப் பொருளுரை எனவழங்கும்.



(4) **நன்னூல்**:—இது சனகாபுரம் பவணந்தி என்னும் சைநமுனிவராற் செய்யப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலிய ஐந்திலக்கணங்களும் நிறைந்த நூலென்பர் இதை. ஆனால் பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் மூன்றும் தற்காலம் கிடையா தொழிந்தன. இது நம்மனோர் செய்த தவப்பயனே. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்கிற இரண்டு அதிகாரங்களும் செவ்வனே சுருங்கக்கூறி விளக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பிய முதலிய நூற்கள், கற்று வல்லுநராயுள்ளோர்க்கேயன்றி ஏனையோர்க்கு எளிதில் அறியப்படுவன வல்ல. இந்நன்னூலோ அவ்வாறன்று. மாணவரும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய தன்மையில் இருக்கிறது. இது நிற்க, பவணந்தி முனிவர் பிற்கூறிய மூன்று இலக்கணங்களையும் இயற்றிலர் என்பது அநேகருடைய துணிவு. இதன் உண்மையை வல்லார்வாய்க் கேட்டுத்தெளிக. சைன அரசனை மயிலைநாதனும், ஆசிரிய நிகண்டு இயற்றிய பாவாடை வாத்தியார் என்கிற ஆண்டிப் புலவரும், இலக்கணக்கொத்துக் காரராகிய சங்கர நமச்சிவாயரும், சிவஞான சுவாமிகள் முதலியவரும் இந்நூற்கு உரை இயற்றியுள்ளார். தற்காலத்தில் இந்நூலாகிய நன்னூல் நன்கு மதிக்கப்பட்டு வருகின்றது. இதன் பெருமையைச் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்கு முன்னிருந்த சாமிநாத தேசிகர் என்னும் சிறந்த தமிழ்ப்புலவர் தாமியற்றிய இலக்கணத்தில்,

> " முன்னோ ரொழியப் பின்னோர் பலரினுள்
> நன்னூலார் தமக்கு எந்நூலாரும்
> இணையோ வென்னும் துணிவே மன்னுக "

எனக்கூறி இருப்பது இங்கு கவனிக்கற் பாலது.

(6) **வீர சோழியம்**:—பொன்பற்றியூர் புத்தமித்திரனார் இயற்றியது. இது பஞ்ச இலக்கணங்களையும் சுருக்கிக்கூறும் ஒருநூல். அக்காலத்தில் அரசாண்ட வீரசோழன் என்னும் மன்னன் பெயரால் இது செய்யப்பட்டதாதலால் இப்பெயர் பெற்றது.

இதன் பெருமையைக் கீழே காட்டியுள்ள ஒரு மேற்கோளால் தெரிந்து கொள்க.

திகழ் தசக்கரம் = திகடசக்கரம் என்று புணர்ந்தமைக்குப் புலவர்கள் மறுக்க, அப்பொழுது கச்சியப்ப சிவாசாரியருக்கு முன்பாக குமாரக்கடவுள் அப்புலவர்களுக்குச் சமாதானம் கூறுமாறு இவ்விலக்கண நூலைக் கொண்டு வந்து " நான்கொடு மூன்றுன்பதா முயிரின்பின் நவ்வருமேல் " என்றசூத்திரத்தைக் காட்டினரென்பர். இது பெருந்தேவனார் செய்த உரையோடு கூடியது.

(7) **நேமிநாதம்**:—இது களத்தூர்—குணவீரபண்டிதர் இயற்றியது. நேமிநாத தீர்த்தங்கார் பெயரால் அவர் இயற்றினபடியால், இதற்கு " நேமிநாதம் " எனப்பெயர் வந்தது. நன்னூல் போல, எழுத்தும், சொல்லும் அமைந்த இலக்கணநூல் இது. ஆனால் வெண்பாவினால் சமைந்தது. இந்த

வெண்பாக்கள் சுருங்கச்சொல்லல் முதலிய பத்து அழகோடுங்கூடி விளங்குகின்றன. இந்நூலை "சின்னூல்" என்றும் கூறுவர்.

இதைச் "சின்னூலுரைத்த குணவீரபண்டிதன் சேர்பதியும்" என்னும் தொண்டைமண்டல சதகச் செய்யுளாலறிந்து கொள்க.

(8) **புறப்பொருள் வெண்பாமாலை:**—ஆசிரியர் ஐயனாரிதனார். அகஸ்தியர் மாணவராகிய தொல்காப்பிய முனிவர், அதங் கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய் முதலிய பன்னிருவராலும் கூறப்பட்ட புறப்பொருணூலுக்கு, இதுவழிநூலாகும். பொருள் இலக்கணத்தில் ஓர்பகுதியைக் கூறுவது இது. மாகலூர் கிழார் செய்த உரையொன்று இதற்குளது.

(9) **தண்டி அலங்காரம்:** — இயற்றினவர் தண்டி ஆசிரியர். இவரை அம்பிகாபதியின் புத்திரரென்றும் சிலர் சொல்லுவர். அணி என்னும் தென்மொழியானது, வடமொழியில் அலங்காரம் என்று கூறப்படும். இது தண்டி அலங்காரம் என்னும் வடமொழியிலுள்ள நூலைப் பின்பற்றியது. இது அணி இலக்கணத்தை விரிவாகத் தெரிவிக்கும் ஒருநூல். இந்திரவிமான மாலையாசிரியராகிய சுப்ரமண்யதேசிகர் இதற்கு உரையெழுதியுள்ளார். இதற்குத் தற்கால உரைகள் அநேகம் உண்டு.

(10) இவையேயன்றி யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, மாறனலங்காரம், பிரயோக விவேகம் முதலிய நூற்களும் உலகவழக்காறற்றதான வீரமாமுனிவர் (Father Beschi) இயற்றியதொன்னூலும், முத்துவீர உபாத்தியாயர் இயற்றிய ஐந்திலக்கணங்களையும் கூறும் முத்து வீரியமும், திருப்புகழ் சுவாமி என்கிற முருகதாசசுவாமிகள் இயற்றிய புலமை இலக்கணத்தோடுகூடிய அறுவகை இலக்கணமும் உள்ளன.

இவ்வகை நூல்கள் நிறைந்த நம் தமிழ்ப்பாஷையின் பெருமையை அறிந்து அவைகளைக்கண்டு, நம் ஆனந்தபோதினியின் சகோதர, சகோதரிகள் அப்பயனை யடையுமாறு கடவுளைப் பிரார்த்திக் கின்றனன். சுபம்.

M. S. சுந்தரேஸய்யர், திண்டிவனம்.

## மாணவர் பகுதி.

### நன்னடக்கைக்குரிய விதிகள்.

1. ஈசுவரன் உண்மைக்கு உறைவிடமாயிருக்கிறார்; ஆதலின் எப்போதும் உண்மையே பேசு; உண்மையே தைரியத்தைத் தரும்; நீ பேசும் வார்த்தைகளில் சந்தேகம் உண்டாகும்படி பேசாதே; பொய்யன் என்று தெரிந்துவிட்டால் நீ எவ்வளவு உண்மையான வார்த்தைகளைப் பேசினபோதிலும் பிறர் உன்னை நம்பமாட்டார்கள். 2. வீண் சத்தியங்கள் செய்து உன் நாவைப் பாழாக்காதே; பொல்லாத வார்த்தைகளைப் புகலாதே; கெட்டவர்களிடம் சவகாசமும் செய்யாதே; பள்ளியிலும், வீதியிலும், வீட்டிலும் அமைதியாகவே



யிரு. 3. அன்னியர்களிடம் மரியாதையாகப் பேசு. உன்னுடைய உபாத்தியாயர், பெற்றோர், பந்துமித்திரர் ஆகிய இவர்களிடம் மிகவும் கீழ்ப்படிந்தவனாய் அன்புடனே யிரு. 4. ஏதாவது தப்பான காரியம் செய்துவிட்டால், தெரியாமல் செய்துவிட்டேன் என்னை மன்னியுங்கள் என்று கூறு. அதைவிட்டுவிட்டு "நான் செய்தது சரி" என்று எல்லோரையும் மறுத்து, எதிர்த்துப் பிடிவாதம் செய்யாதே. 5. உனக்கு யாராவது உதவிசெய்தால் மலர்ந்த முகத்துடன் உன் அன்பார்ந்த வந்தனத்தை அவர்களுக்குச் செலுத்து. 6. உன்னுடைய மூத்தோர்களையும் உபாத்தியாயர்களையும் வழியில் கண்டால் பணிவுடன் வணங்கு. 7. திக்கற்றவர்களையும் உன்னைவிட ஏழையா யிருப்பவர்களையும் அவமதிக்காதே. செல்வமானது சூரியனைப்போல் தோன்றி மறைந்துவிடும். எனவே நீயும் இந்நிமிஷமே ஏழையாகிவிட்டாலும் விடக்கூடும் என்பதை நினைத்துக்கொள். 8. வழியில் வருபவர்கட்கு அதிலும் பெரியோர்கட்கு வழிவிட்டு நட. அவர்களின்மேல் மோதிக்கொண்டு போகாதே. 9. உன்னால் பணத்தைக்கொண்டு தருமம் செய்யமுடியாவிட்டாலும் கூடிய வரையில் (மனம் வாக்கு காயங்களால் ஆகிய உதவியாவது பிறருக்குச் செய். 10. ஒருவருடைய மனதையும் புண்படும்படி செய்யாதே. உன்னுடைய சுகதுக்கங்களைப் போலவே ஏனையோருடையதும் உண்டு என்பது நினதுஞாபகத்திலிருக்கட்டும். 11. உனக்குப் பிறர் எம்மாதிரியான நன்மைகளைச் செய்யவேண்டுமென்று நீ கருதுகிறாயோ அவற்றை நீயே முதலில் அவர்களுக்குச் செய்துகாட்டு. 12. உன்னால் ஒருவர் கேட்கும் உதவி செய்ய முடியாவிட்டால், நன்முகத்துடனே அவர்க்கு உனதுகாரணத்தைக்கூறு; கோபமுகத்தை யாரிடத்தும் காட்டாதே. 13. கோபத்தைச் சாந்தத்தினாலும் தீமையை நன்மையாலும், லோபித்தனத்தை ஈகையாலும் வெல்வதற்கு முயற்சிசெய். 14. பிறர் ஒருவிஷயம் பேசும்போது நடுவில் குறுக்கிட்டுப்பேசாதே. அவர்கள் பேசிமுடியும் வரையில் பொறுத்திருந்து பிறகு உன் அபிப்பிராயத்தைத் தாழ்மையுடன் தெரிவி. 15. எந்தெந்தக் காலங்களில் எந்தெந்தத் தொழில்களைச் செய்யவேண்டுமோ அவற்றை அந்தந்தக் காலங்களிலேயே குறைவறச் செய். 16. அற்பமானகாரியம் என்று ஒன்றையும் அலக்ஷியம் செய்யாதே; நீ செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் செவ்வனே அறிந்துசெய். 17. ஒருவர் ஏதாவது எழுதும்போது அதை மறைவாகவிருந்து வாசிக்காதே. அன்னியருடைய விஷயத்தில் நீ அனாவசியமாகத் தலையிடாதே. 18. உன்னுடைய உடைகள் மட்டமானதாக இருந்தாலும் அவைகளை அழுக்கில்லாமல் வைத்துக்கொள்; உடைகளிலிருந்து ஒருவனுக்கு கௌரவம் கிடைக்காது; தாழ்ந்த உடைதரிப்பவன் யோக்கியனாகவும் உயர்ந்த உடைதரிப்பவன் அயோக்கியனாகவும் இருக்கக்கூடும். 19. உன் நிலைமைக்குத் தக்கபடி ஒழுங்கான உடைகளை அணிந்துகொள். அதிகவிலையுள்ள உடைகளை தரிக்கவேண்டுமெனு மவசியமில்லை. 20. தினந்தோறும் குளித்து சுத்தமாயிரு; சுத்தமான தேகத்துடனிருந்தால் நல்லகுணமும் தானே அமையும்; சுத்தமாக இருப்பவரை வியாதியும் கிட்டாது. 21. எப்போதும் மலர்ந்த முகத்துடனேயிரு.

இருப்பதைக்கொண்டு திருப்தியடையும் குணத்தைப் பெறு. 22. களவு, கபடு, சூது ஆகிய இவற்றைக் கனவிலும் கருதாதே. உன்சொத்தின்மீது உனக்கெவ்வளவு பிரியமோ அப்படியே அன்னியருடையதையும் கருது. 23. எது நல்லதென்று அறிவாளிகள் கூறுகிறார்களோ அதையேசெய்; நீ செய்யும் உதவிக்காக மற்றவர்களிடத்திலிருந்து யாதொரு பிரதிபயனாவது இனாமாவது எதிர்பாராதே. 24. பகட்டுடைய வாழ்வைவிட்டுத் தேசபக்தியுள்ளவனாய் மறதியின்றி உன் கடமைகளைச் சரிவரச்செய். 25. எல்லா உலகங்களையும் ஆக்கி, அளித்து, அழிக்கின்ற சர்வேசுவரனாகிய கடவுளை என்றும் மறவாதே. அவர் உருவுள்ளவராகவும் உருவில்லாதவராகவு மிருக்கிறார். ஆகவே தினம் கோவிலுக்குப்போய் நீ சித்தசுத்தியுடன் உன் குற்றங்களை மன்னிக்கும்படிக்கும் நல்ல அறிவைக் கொடுக்கும்படிக்கும், அவரை அதிக அன்புடன் பிரார்த்தித்துக்கொள். உன்னுடைய எல்லா நலங்களுக்கும் அவரே காரணகர்த்தர் என்பதை என்றும் மறவாதே.

தி. நித்தியானந்தம், உபாத்தியாயர்,
Board Girls' School, Rayakota.

# ஞானப் பகுதி.

## பகவத்கீதை வசனம்.

(83-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏ! பார்த்த! இவ்விதம் ரகசியங்களுக்கெல்லாம் அதிரகசியமான, ஞானமதுவான சாஸ்திரம் என்னாலே யுனக்குச் சொல்லப்பட்டது. இந்த அரிய கீதாசாஸ்திரத்தைப் பூர்த்தியாய் ஆராய்ந்து பின் எவ்வாறு விரும்புகிறாயோ அவ்வாறுசெய்.

ஏ! பாரத! எனக்கு நீ நெருங்கிய இஷ்டனாயிருக்கின்றாய். இந்த நிமித்தத்தாலே உனக்கு மீண்டும் சில சொல்லப்போகின்றேன். சகல ரகசியங்களிலும் மகா ரகசியமான அந்த எனது உத்தமமான வாக்கியத்தைக் கேள்.

ஏ! கௌந்தேய! என்னிடத்தில் மனமுடையவனாகவும், என்னிடத்தில் பக்தியுடையவனாகவும், என்னை விருப்புடன் ஆராதிக்கின்றவனாகவும் நீ ஆகக்கடவாய். என்னையே நமஸ்காரஞ்செய். என்னையே அடைவாய். நீ எனக்குப் பிரியனா யிருக்கின்றாய். உனக்கு உண்மையாக உறுதி கூறுகின்றேன்.

ஏ! அருச்சுன! நீ சகல கருமங்களையும்விட்டு என்னையே சரணமாக அடைவாயாக. நான் உன்னைச் சகலபாபங்களினின்றும் நீக்கிக் காப்பாற்றுவேன். விசனப்படாமலிரு.

இந்த சுலோகத்திற்கு சகல கருமயோக நிஷ்டையைக்காட்டிலும் பரம ரகசியமாகிய ஈசுவரசரணாகதியைப்பற்றி முன்னரே முடிவாக உனக்கு விளக்



இக் கூறியாய்விட்டது. இப்போது கருமயோக நிஷ்டையின் பலமாயுஞ் சகல வேதாந்த சாரமாயு மிருக்கின்ற பூரணஞானம் இதனால் விளக்கப்பட்டிருக்கின்றது என்று பகவான் பார்த்தனுக் குரைத்ததாக சங்கரர் கூறுகின்றார்.

**பகவான் கூறுதல்:**—ஏ! விஜய! இந்தக் கீதார்த்ததத்துவம் தவமில்லாதவனுக்கு ஒருபொழுதும் சொல்லத்தக்கதன்று. பகவதாசாரிய பக்தி இல்லாதவனுக்கும் சொல்லக்கூடியதன்று. பகவதாசாரிய கைங்கரியஞ் செய்யாதவனுக்கும் அல்லது கீதாதத்துவத்தைக் கேட்க இஷ்டமில்லாதவனுக்குஞ் சொல்லத்தக்கதன்று; எவன் என்னைத் தூஷிக்கின்றானோ அவனுக்குஞ் சொல்லத்தக்கதன்று.

ஏ! கிரீடி! எவன் பரமரகசியமாக விளங்கும் இந்தக் கீதாசாஸ்திரத்தை எனது பக்தர்களுக்கு விளக்கிச் சொல்லுவானோ அல்லது உபதேசிப்பானோ அவன் என்னிடத்தில் சிரேஷ்டமான பக்தியைச் செய்து சகல சந்தேகமுமற்றவனாய், கட்டாயம் என்னையே அடைவான்.

இதற்குச் சங்கரர் கீதையிலுள்ள சுலோகங்களையாவது அவைகளின் அர்த்தங்களையாவது மனத்திற் பதியும்படி சொல்லுகிறவன் என்னிடத்தில் சிரேஷ்டமான பக்திகொண்டு அதாவது வாசுதேவனாகிய பகவானது சேவையை (கைங்கரியத்தை) இவ்விதமாக நான் செய்கின்றேன் என்ற உறுதியான எண்ணத்தைக்கொண்டு உபதேசிக்கவேண்டும் என்பதே தாற்பரியம் என்று கூறுகின்றார்.

ஏ! காண்டீப! மனிதர்களில் என் பக்தர்களுக்கு கீதையை யுபதேசிப்பவனைக்காட்டிலும் எனக்கு மிகவும் பிரியமுள்ளவன் வேறு ஒருவனுமில்லை. எனக்கு அவனைக்காட்டிலும் ஒருவன் மிகவும் பிரியமுள்ளவனாகப் பூமியில் உண்டாகப் போவதுமில்லை.

ஏ! தனஞ்சய! தர்மமார்க்கத்தைவிட்டு விலகாததாகிய நம் இருவருடைய இந்தச் சம்வாதத்தை எவன் படிக்கின்றானோ அவனால் ஞானமும் உத்தமமுமாகிய யக்ஞத்தாலே நான் ஆராதிக்கப்பட்டவனாவேனென்பது எனது நிச்சயம்.

இந்த அரிய கீதாசாஸ்திரத்தை ஞானயக்ஞத்திற்குச் சமானமானதென்றாவது தேவாதி விஷயமான யக்ஞாதிகள் போலப் பலனைக் கொடுக்கத்தக்கதென்றாவது கொள்ளவேண்டும். ஏனெனில் யக்ஞமானது நான்குவிதப்படும். (க) விதியக்ஞம்,—சரீரத்தாற் செய்யத்தக்க பிர்மயக்ஞாதிகள் (உ) ஜபயக்ஞம்,—பாராயணாதிகளாகிய வாயாலுச்சரிப்பது. (ங) உபாம்சுயக்ஞம்,—பிறர்க்குக் கேளாமலிருக்கும்படி வாய்க்குள்ளாகவே உச்சரிப்பது. (ச) மானஸயக்ஞம்,—மனத்தால் தியானிப்பது. நான்காவதாகக் கூறப்பட்டுள்ள இந்த மானஸயக்ஞந்தான் ஞானயக்ஞமாகச் சொல்லப்பட்டது என்று ஸ்ரீ சங்கரர் கூறுகின்றார்.

**பகவான் கூறுதல்:**—ஏ! விஜய! எந்த மனிதன் சிரத்தையுடையவனாகவும் அசூயை யற்றவனாகவு மிருந்து இக்கீதையைக் கேட்பானோ அவனும் சகல பாபங்களினின்றும் நீங்கினவனாய்ப் புண்ணிய கருமங்களைச் செய்தவர்கள் அடையும் நல்லலோகங்களை அடைவான்.

ஏ! பார்த்த! இதுவரையில் நான் சொல்லிவந்த விஷயங்களையெல்லாம் நீ ஒரே நிலையான மனத்துடன் கேட்டு வந்தனையா? ஏ! தனஞ்சய! உனது அக்ஞானத்தாலுண்டான மோகம் உன்னைவிட்டு நீங்கிவிட்டதா?

**அருச்சுனன் சொல்லுதல்:**—ஏ! அச்சுத! உமது அநுக்கிரகத்தாலே நான் மெய்யுணர் வடைந்தேன்; மோகம் நீங்கிவிட்டது; சந்தேகநிவர்த்தி யடைந்த

வனாயிருக்கின்றேன். ஆதலால் கட்டாயம் உமது வாக்யத்தை நிறைவேற்றுவேன்.

அவிவேகம் போய்விட்டதா என்னும் வினாவுக்கு அக்ஞானம் போய்விட்டதென்று உத்தரஞ் சொல்லப்பட்டது. இந்த உத்தரத்தாற் சாஸ்திர விசாரத்திற்கு அக்ஞானநிவர்த்தியும் ஆத்மசொரூபாநு சந்தானமுமே பலனென்று வெளியிட்டதாகின்றது. (மோகம்—அக்ஞானம்). "உமது வாக்யத்தை நிறைவேற்றுவேன்" என்றமையாலே எனக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. உமது உத்தரவை நிறைவேற்றுவதே எனது கடமையென்று நினைக்கின்றேன் என்னுந் தாத்பரியங் கிடைத்தது என்று சங்கரர் கூறுகின்றார்.

**சஞ்சயன் திருதராட்டிரனைப் பார்த்துச் சொல்லுதல்:**—நான் இவ்விதமாக மகாத்மாவான வாசுதேவன் அருச்சுனன் என்னு மிருவரது ஆச்சரியமானதும் புளக முண்டாகத்தக்கதுமான இந்தச் சம்வாதத்தைக் கேட்டேன்.

ரகசியமானதும், உத்தமமானதும், யோகசாஸ்திரமாக விளங்குவதுமாகிய இந்தக் கீதையைத் தாமாகவே அருச்சுனனுக்கு உபதேசித்தவரும், சகலவிதமான யோகங்களுக்கும் ஈசனாக விளங்குகின்றவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்திலிருந்து வியாசமுனிவரது அநுக்கிரகத்தாலே நான் நேராகவே கேட்டேன்.

ஏ! அரசனே! ஆச்சரியமானதும், புண்ணியமானதுமான இந்தக் கிருஷ்ணார்ச்சுனர்களின் சம்வாதத்தை நினைத்து நினைத்து நான் அடிக்கடி மிகுந்த சந்தோஷ மடைகின்றேன்.

ஏ! மன்ன! சாக்ஷாத் ஹரியாக விளங்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானது அதிக ஆச்சர்யமான அந்த விசுவரூபத்தையும் நினைக்க நினைக்க எனக்கு மிகுந்த வியப்புண்டாகின்றது. நான் அதனால் மேலும் மேலுஞ் சந்தோஷ மடைகின்றேன்.

எந்தப் பக்ஷத்தில் யோகங்களுக்கு ஈசனாக விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானும், எந்தப்பக்ஷத்தில் காண்டீபமென்னுஞ் சிறந்த வில்லைத்தரித்த அருச்சுனனு மிருக்கின்றார்களோ அந்தப் பக்ஷத்தில் ராஜ்ஜிய லக்ஷ்மியும், ஜயமும் அபிவிருத்தியும், நியாயமும் நிச்சயமாக இருக்கின்றனவென்பது எனது அபிப்பிராயம்.

சீடன்.

பகவத்கீதை வசனம் முற்றிற்று.

# கைத்தொழிற்பகுதி.

## நெசவுத் தொழில்.

நமக்குக் கிடைக்கும்படியான பொருள்களைக் கொண்டே தொழில்களை விருத்திசெய்யலாம். நமது பொருள்களில் பருத்தி, அவுரி ஆகிய இவைகள் முக்கியமானவை. பருத்தி இந்தியாவில் எல்லா இடங்களிலும் விஸ்தாரமாக விளைகின்றது. பஞ்சை வஸ்திரங்களுக்காக உபயோகிக்கும் விதம் வெகு காலத்திற்கு முன்னமே கண்டுபிடிக்கப்பட் டிருக்கவேண்டும். ஏனென்றால் "இரண்டு நெசவுக்காரர்களைப்போல இரவும் பகலும்" என்னும் வாக்கியம் நெசவைப்பற்றி வேதத்தில் வரைந்திருக்கிறதாகப் பெரியோர்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம். தேசசரித்திரங்களில்கூட நெசவைப்பற்றி அநேகர்



படித்திருக்கலாம். உதாரணமாக அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்தபோது அவருடன்வந்த கிரேக்கர்கள் இந்தியர்களின் ஆடைகளைப் பற்றி விபரமாகக் கூறி யிருக்கின்றனர் என்பதை நம்மவர் அறிவர். ஒரு பெண்பிள்ளை அணிந்துகொள்ளக்கூடிய பதினேழு பதினெட்டுமுழ நீளமுள்ள சேலை ஒன்று சிறிய ஒரு டப்பியில் அடக்கம் செய்யப்பட்டதாம். ஔரங்கசீப் என்னும் மகம்மதிய சக்ரவர்த்தியின் குமாரத்தி ஏழு வஸ்திரங்களை ஒன்றின்மேலொன்றாக அணிந்து கொள்வாளாம். அப்போதும் அவளுடைய தேகம் வெளிக்குத் தெரியுமாம். இதை நோக்குமிடத்து நெசவுத்தொழிலின் நுட்பம் இனிது விளங்கும். நாகரீகம் முதிர்ந்த இக்காலத்தில் அப்படிப்பட்ட நெசவு பெரும்பான்மையும் கிடையாது; சகல வேலைகளையும் செய்கின்ற யந்திரங்களினால்கூட முடியக்காணோம். நூல் நூற்பதும் நெசவுசெய்வதும் எந்தக்காலத்திலும் நமது ஸ்திரீ ஜாதியார் செய்துவந்த வேலைகளே என்பதற்குத் திருஷ்டாந்தம் அநேகம் உள. "ஆடைநெய்யும் ஸ்திரீயைப்போல் பூமியை இரவுபகல் மூடிக்கொண்டிருக்கின்றன" என்னும் வாக்கியத்தினாலும் உணரலாம். ஆதிகாலத்தில் ஸ்திரீகள் நூல் நூற்கும் தொழிலில் அதிக தேர்ச்சியுள்ளவர்களா யிருந்தார்கள். ஒரு பவுண்டு எடையுள்ள பஞ்சை சுமார் (1000) ஆயிரம் மைல் நீளமுள்ள நூலாகக் கைராட்டினத்தில் நூற்றிருக்கிறார்கள் என்றால் அது எவ்வளவு சன்னமா யிருந்திருக்கவேண்டும் என்பதை யூகித்தறியலாம்.

தற்சமயம் எல்லாவித தொழில்களும் உறங்கிக் கிடக்கின்றன என்பது வெளிப்படை. அவற்றைத் தூண்டும்பொருட்டு அறிவாளிகள் பெரு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். உத்தரவேதத்தைத் தமிழ்ப்படுத்திய தெய்வப்புலவராகிய திருவள்ளுவநாயனாரே "நெய்தற்றொழிலே எத்தொழிலையும்விடக் குற்றமற்ற தொழிலெனக்கொண்டு" செய்தனர் என்றால் நாம் எம்மாத்திரம் என்பதை உணர்க.

இன்னும் இத்தொழில் மனிதர்களுக்கு முக்கியமானதும் அதிக பிரயோஜன முள்ளதுமான ஓர் சிறந்த கைவினை. இதை விவசாயத்திற்கு இரண்டாவதாகக் கூறலாம். உலகின்கண் பொதுவாக அநேக தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றாலும் இது பண்டையகாலத்ததும் மதிப்புள்ளதுமான தொழிலாய் இருந்து உலகத்தில் ஏறக்குறைய ஐந்தில் ஒருபங்கு ஜனங்களின் ஜீவனோபாயத்திற்குத் தகுதியுள்ளதாகிறது.

இதுவுமல்லாமல் இது எவ்விஷயத்திலும் சிக்கனமா யிருக்கவேண்டும் என்னும் விசாலமான சூழ்ச்சியையும், நுணுக்கமான விவேகங்களையும், அதிக அன்பையும், பொறுமையையும், இயந்திரவிருத்தியையும் உண்டுபண்ணுகிறது. ஒருவரைச் சிறுமையினின்றும் நாளுக்குநாள் மேன்மையடையச் செய்வதோடு பல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு வருவதும் நெசவுத் தொழிலேயாம்.

அளவற்ற பெருமைவாய்ந்த இந்நெசவுத்தொழிலை இகழ்ச்சிசெய்யும் சிலரின் கொள்கை போற்றத்தக்கதன்று.

நிற்க, இந்தியாவில் சீர் குலைந்திருக்கிற நெசவுத்தொழிலை விருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் நூலின் விலை குறைந்திருக்கிற இந்த சமயத்தில் ஒவ்வொரு ஊரிலும் பொதுவாக 'நெசவுத் தொழிற்சாலை' ஸ்தாபித்து, இத்தொழிலில் நிபுணத்துவம் அடைந்தவர்களைக்கொண்டு ஜனங்களுக்கு ஊக்கம் உண்டாகுமாறு லாபத்தையும், வேலைப்பாடுகளையும் காண்பித்து, அதனைக் கற்பிக்கவேண்டும். இத்துடனே நெசவுத்தொழிலாளிகள் அனைவரும் ஒற்றுமையாய் (Weavers' Co-operative Societies) கூட்டுறவு சங்கங்களை ஏற்

படுத்தி அதினின்றும் பண உதவிபெற்றுத் தொழிலை முன்னுக்கு கொண்டு வருவார்களேயானால் நம் மிந்தியா க்ஷேம மடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நெசவுசெய்யும் கூலிக்காரர்களை அமர்த்தி நெய்யச் செய்வதில் சகல செலவும் போக தறி ஒன்றுக்கு வாரத்தில் ஏறக்குறைய ரூ. 6—1—0 கிடைக்கும். முழுதொகையும் இலாபத்தைச் சேர்ந்ததே. ஆனால் இந்த வருமானம் இரண்டரைமுழ அகலத்தில் சாதா (Plain Cloth) நெசவைக் குறித்ததே. நான்கு (Four Treadles) மிதி; ஐந்து (Five Treadles) மிதி இவைகளில் குழிதுவாலை, முள்துவாலை, மேட்டி டுவில்,செக் முதலிய பல டிசைன் அல்லது ஆர்னமெண்டில் வேலைகள் செய்வதினால் அந்தத் தொகையைக் காட்டிலும் சுமார் 2-மடங்கு அதிகம் அகப்படுகின்றது. இது விஷயத்தை அநுபவத்தில் அறியலாம். கைத்தறிகளில் செய்யக்கூடாத நெசவுவேலை ஒன்றுமேயில்லை என்று துணிந்து உரைக்கலாம். எப்பேர்ப்பட்ட நூதன வேலைகளும் செய்து சரியான லாபத்தை அடையலாம் என்பது திண்ணம்.

ஆகையால் ஒவ்வொரு முதலாளியையும் இதுவிஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றனன். கடவுள் ரக்ஷிப்பாராக.

கலிவ. தி. ர. கோபால கிருஷ்ணன்,
கைத்தொழில் ஆசிரியர், திண்டிவனம்.

# விரதப் பகுதி.

## நவராத்திரி விரதம்.

வசந்தருதுவிலும் சரத்ருதுவிலும் மனிதர்களுக்குப் பலவித நோய்களும் வியாதிகளும் ஏற்படுகின்றன. இந்த இரண்டு ருதுக்களும், யமனுடைய இரண்டு கோரைப் பற்களுக்குச் சமமானவை என்பர். அந்த தீமைகளிலிருந்து தப்புவதற்காக இவ் விரதத்திற்கு வேண்டியவைகளை அமாவாசை தினத்தன்றே சேகரித்துக்கொண்டு அன்று ஒருவேளை யுண்டு உபவாசமிருந்து அடுத்தநாள் பிரதமை முதல் தேவியைப் பூஜைசெய்ய ஆரம்பிக்க வேண்டும். நான்குமுழ நீளமும் ஒருமுழ உயரமும் உள்ள பீடத்துடன் கூடிய ஓர் அழகிய மண்டபத்தில் ஒரு சிம்மாஸனம் அமைத்துத் தேவியைப் பூஜை செய்ய விரும்புகின்றவர், வேதம் உணர்ந்த அர்தணர் ஒன்பதின்மர் அல்லது ஐவர், மூவர், ஒருவருடன் அந்த மண்டபத்திற் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள சிம்மாதனத்தில் சங்கு, சக்ர, கதா பத்மத்தோடு கூடி சதுர்ப்புஜங்களுடனாவது, அல்லது பதினெண்கரங்களுடனாவது தேவியின் திரு உருவத்தை ஸ்தாபித்து, அதைப் பலவித ஆடையாபரணங்களினால் அலங்கரித்துக் கும்ப பூஜையின் நிமித்தம் கலசம் ஸ்தாபித்து அதில் கங்கை, யமுனை, காவேரி, கோதாவரி முதலிய நதிகளின் புண்யதீர்த்தங்களில் ஏதாவதொன்றை நிரப்பி மாவிலை முதலிய ஐந்துவகைத் தளிர்களை அந்தக் கலசத்தின்மேலே வைத்துப் பூஜைசெய்தல் வேண்டும். பின்னர் சங்கற்பஞ் செய்துகொண்டு நல்ல வாசனைத் திரவியங்களினாலும் புஷ்பங்களினாலும் அம்பிகையை அலங்கரித்துத் தூப தீபங்களால் மந்திர பூர்வமாய் விதிப்படி பூஜித்து நவாவரண பூஜையுஞ்செய்து அர்க்கியங் கொடுத்துப் பலவிதமான நிவேதனங்களைச்செய்தல் வேண்டும். பின்னர் ஹோமம் செய்வதற்காக குண்டம் அமைத்துத் தண்டிலம் இட்டுப் பூர்த்திசெய்தல் வேண்டும். நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்துப் பராசக்தியைப் பூஜிப்பவர்கள் சயன சுகாதிகளை யெல்லாம் அறவே ஒழித்துவிட்டு அக்காலங்களில் தரையில்படுத்து நித்திரை செய்ய வேண்டும். பிரதமை தினத்தில் அஸ்த நக்ஷத்திரங் கூடினால் அது மிகவும் விசேஷமானதென்றும், அத் தினத்தில் அம்பிகையைப் பூஜித்தால் தேவி சகலாபீஷ்டங்களையுந் தருவள் என்றும் பெரியோர் கூறுகின்றார்கள்.



கும்பபூஜை முதல் ஹோமம் முடியும் வரையில் தேவிபூஜை செய்வோர்கள் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் விடாமல் செய்து முடித்துப் பின்னர் கன்னிகைகளைப் பூஜிக்கவேண்டும். நவராத்திரியில் பூஜிக்கத்தகுந்த கன்னிகைகள் இரண்டு வயது முதல் பத்துவயதுக் குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். பத்து வயதிற்கு மேற்பட்டவர் கன்னிகைகள் பூஜிப்பதற்குத் தகுந்தவர்களல்லர். இக் கன்னிகைகளை வேதமந்திரங்களால் தினம் ஒவ்வொருவராகவாவது அல்லது முதல்நாள் முதல் ஒவ்வொருவர் அதிகமாகவாவது சேர்த்துப் பூஜைசெய்தல் வேண்டும். பூஜிக்க அசக்தியுள்ளவர்கள் அஷ்டமிதினத்திலாவது அவசியம் பூஜிக்கவேண்டும். அஷ்டமிதினத்தில்தான் முன்னர் தக்ஷயாகத்தை அழித்த பத்திரகாளி தோன்றினாள் என்று சொல்லப்படுகின்றது. ஒன்பது இராத்திரிகளிலும் பரா சக்தியைப் பூஜிக்கமுடியாதவர்கள் சப்தமி, அஷ்டமி, நவமி இம்மூன்று நாட்களிலும் பூஜிப்பார்களானால் அவர்கள் ஒன்பது தினத்திலும் பூஜித்த பலனை அடைவர். இதனை அனுஷ்டிப்பவர்கள் இவ்வுலகில் எல்லாச் செல்வங்களையும் அடைந்து சந்தோஷமாக வாழ்வதுமன்றி இறுதியில் உயர்பதவியையும் பெறுவர். இவ் விரதத்தை சுசீலன், சுகேது முதலியவர்கள் அனுஷ்டித்துப் பல நன்மைகளையும் அடைந்தனர்.

இது புரட்டாசி மாதம் பூர்வபக்ஷப் பிரதமைமுதல் தசமி வரையில் அனுஷ்டிக்கப்படவேண்டிய ஒரு சிறந்த விரதமாகும்.

விதிப்படி பிரதமைமுதல் திரிதியை வரையில் உருத்திரி தேவியையும், சதுர்த்தி முதல் சஷ்டிவரையில் இலக்குமிதேவியையும், சப்தமி முதல் நவமி வரையில் சரஸ்வதிதேவியையும் பூஜித்து பின்பு இந்த விரதத்தைத் தசமியன்று பூர்த்திசெய்தல் வேண்டும். அரசாட்சியை இழந்து வருந்திக்கொண்டிருந்த சுகேது என்னும் அரசனின் மனைவி துவேதியை ஆங்கிரசமுனிவரது உபதேசப்படி இதனை அனுஷ்டித்தார். அதனால் அந்த அன்னைக்குப் பின்னர் சூரியப் பிரதாபன் என்னும் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தை வயதடைந்ததும் தனது தந்தை இழந்த நாட்டைப் பகைவரிடத்திலிருந்து ஜெயித்து தாய் தந்தையருடன் பலவித செல்வங்களையும் அடைந்து சந்தோஷமாக வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டுப் பெண்மணிகள் அனைவரும் பக்தியுடன் இவ்விரதத்தைத் தவறாமல் அனுஷ்டித்து தேவியின் அருளால் எல்லாச் செல்வங்களையும் அடைந்து தங்களது வாழ்க்கையை மேன்மைப்படுத்துவார்களாக.

வ. ச. சூரிய நாராயண மூர்த்தி, வாலாஜா.

# பெண்மக்கள் பகுதி.

## பெண்கள் செய்யத்தகாத காரியங்கள்.

1. உரலில் உட்காருதல் கூடாது.
2. உலக்கையை மிதித்தலும் தாண்டலும் கூடாது.
3. முறத்தைக் கவிழ்த்தலும் அதன்மீதில் உட்காருதலும் கூடாது.

4. வாசற்படியில் உட்காருதல் கூடாது.

5. தீபத்தைக் கையினாலும் வாயினாலும் ஊதி அமர்த்தலாகாது. ஆனால் புஷ்பத்தைக்கொண்டு அமர்த்தல்வேண்டும்.

6. பூமி அதிரும்படி நடத்தல் கூடாது.

ஷை விஷயங்களைச் செய்பவர்கள் எவ்வளவு தனவந்தராக இருந்தாலும் சீக்கிரம் தரித்திர திசையை அடைவார்கள் என்பர்.

நா. வே. சங்கரநாராயண அய்யர்.

## நாவல் பகுதி.

### அம்பாலிகை அல்லது அதிசயமரணம்.

(94-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதை யனுப்பி விட்டுப் படுத்துக்கொண்டிருந்து, ஆனந்தலிங்கும், அம்பாலிகையும் திரும்பி வந்தபின், தான் ஒன்றுமே யறியாதவள் போலும் அப்போதுதான் படுக்கை யறையிலிருந்து வெளி வருபவள் போலும் அபிநயித்தாள். மூவரும் காலைப்போஜனம் அருந்தியபின் அமிர்தம்மாள் ஆனந்தலிங்கைத் தனியே சந்தித்து சம்பாஷிக்கத் தகுந்த சமயத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனந்தலிங்கும் அவளோடு தனியே சம்பாஷிக்க வேண்டு மென்றே சமயத்தை யெதிர்பார்த்திருந்தான்.

சற்று நேரங்கழித்து ஆனந்தலிங்கும் அமிர்தம்மாளும் கூடத்தில் தனியே சந்தித்தார்கள். அம்மாது அவனை நோக்கி, "கடைசியில் நீ சூதுக்காரன் என்று வெளியாய் விட்டது'' என்றாள்.

**ஆனந்:**—ஓகோ.

**அமிர்தம்மாள்:**—உன் சங்கதி வெளியாய் விட்டது. நீ யெவ்வளவு தைரியமாய் இம்மாதிரி மாறுவேடத்தோடு சூதாய் என் வீட்டிற்குள் பிரவேசித்திருக்கிறாய்!

**ஆன:**—நானே வலிய உன் வீட்டிற்குள் வரவில்லை. நீயே யென்னை வந்து தங்கும்படி கட்டாயப் படுத்தினாய்.

**அமிர்:**—ஆனால் நீ சூது செய்தாய்.

**ஆன:**—நல்லது அதற்காக இப்போது என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

**அமிர்:**—நீ கட்டாயம் இவ்வீட்டைவிட்டு வெளிப்பட வேண்டும்.

**ஆன:**—அது முடியாது. நான் இங்கேதா னிருப்பேன்.

**அமிர்:**—நான் என்வீட்டை விட்டுப் போ வென்று கண்டிப்பாய்க் கூறும்போது போமாட்டேனென்று கூற உனக்கு அவ்வளவு தைரியமா?

**ஆன:**—எல்லாவற்றிற்கும் எனக்குத் தைரியமுண்டு.

**அமிர்:**—நீ மிக்க தைரிய புருடனே ஆயினும் உன் மர்மம் வெளியாய்விட்டது. நீ யாரென்று நான் கண்டுகொண்டேன்.

**ஆன:**—ஆ! அப்படியா சங்கதி! அப்படியாயின் நீ யாரென்று எனக்கும் தெரியும்.

அம்மாது கோபத்தோடு "என்ன கூறினாய்! என்னையா நீயறிவாய்?" என்று கோபத்தோடு கேட்டாள்.

(தொடரும்) **ஆரணி-குப்புசாமி முதலியார்.**

## நேயர்களுக்கோர் அறிக்கை.

இப்பொழுது நமது "ஆனந்தபோதினி" யின் ஏஜண்டுகளாக S. இராமானுஜாச்சாரியார் சிலோனுக்கும் R. நரஸிம்மய்யங்கார் தென்னிந்தியாவிற்கும் நியமிக்கப்பட்டு சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். வேண்டியவர்கள் அவர்களிடத்தில் சந்தாசெலுத்தி "ஆனந்தபோதினி" க்குச் சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளலாம். நமது காரியாலயத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள புஸ்தகங்களுக்கும் ஆர்டர் கொடுக்கலாம்.

## வர்த்தமானக் குறிப்பு.

**மகாத்மாகாந்தி ஆசிரியர்:**—ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்
பொழுது இவர் ஆமதாபாத் நகரில் ஏற்படுத்திய தேசீயக் கல்லூரியில் அங்
குள்ள மாணவர் சனிக்கிழமை தோறும் கிறிஸ்தவ வேதமான புதிய ஏற்
பாட்டைத் தங்களுக்குப் போதிக்கும்படி இவரைக் கேட்டுக்கொண்டனர். அடி
களும் இணங்கி அவர்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போதித்து வருகின்றார்.

**காங்கிரஸ் தலைமைப் பதவி:**—இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மாகாணங்கள் ஸ்ரீமான். எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்களையே அஸ்ஸாம் காங்கிரஸ் தலைமைப்பதவிக்கு சிபார்சுசெய் திருக்கின்றன. சமீபத்தில் கூடிய அஸ்ஸாம் காங்கிரஸ் உபசாரணைக் கமிட்டியார் அதற்கிணங்க அவரையே அஸ்ஸாம் காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத் திருக்கின்றார்கள். அஸ்ஸாம் காங்கிரஸ் தலைமைப்பதவி தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்ததைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷிக்கின்றோம்.

**ஒரு துணிகரமான தியாகம்:**—திருவாங்கூர் சமஸ்தானத்தி லுள்ள தாரூரில் ஒரு யானைக்கு மதம்பிடித்து விட்டது. அந்த யானையின் பாகன் அதை அடக்கப் பலவிதத்திலும் முயன்று பார்த்தான். அவன் முயற்சிகள் பலிக்கவில்லை. யானை தனது பாகனைக் கீழேதள்ளி அவனுக்கு காயமேற்படும்படி செய்தது.

பாகனின் பெயர் நாராயணநாயர். படுகாயப்பட்ட அவனை ஷொர்ட்டாலி என்ற இடத்திலுள்ள ஓர் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள். காயத்திலிருந்து ரத்தம் பீரிட்டடித்தது. டாக்டர் அவனுடைய காயத்தைப் பரிசோதித்து வேறுமனிதனின் சதையை அறுத்து அந்தக்காயத்தில் வைத்துத் தைத்தால்தான் அவன் பிழைப்பானென்று சொல்லிவிட்டார். அந்த சமாச்சாரம் ஊர்முழுவதும் பரவியது. பனவல்லி என்ற ஊரைச் சேர்ந்த கன்னட்கிருஷ்ண ஐயர் இந்தச் சங்கதியைக்கேட்டு நேராக ஆஸ்பத்திரிக்குச்சென்று தமது சதையைக் கொடுப்பதாகக் கூறினர். [illegible]ருடைய சதையை அறுத்து நாராயணநாயரின் காயத்தில்வைத்துத்தைத்தார். அதனால் நாராயணநாயரின் உயிர்காப்பாற்றப் பட்டது. சதையை அறுத்துக் கொடுத்த ஐயர் ஒருமாதத்திற்குமேல் ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்தார். அவருடைய வீரமான தியாகம் பாராட்டத்தக்கதே.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

அக்ஷயஹு ஐப்பசிமீ—கலியுகாதி 5028, சாலிவாகனம் 1849,
பசலி 1336—கொல்லமாண்டு 1102—ஹிஜரி 1345
இங்கிலீஷ் 1926ஹு அக்டோபர்மீ—நவம்பர்மீ

| ஐப்பசி | அக்டோபர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | ஞா | ஏகா45-18 | அவி19-40 | ம19-40சி | சர்வமத்வ ஏகாதசி [தசி |
| 2 | 18 | திங் | து37-22 | சதை13-58 | சி13-58ம | பிரதோஷம், பத்நாபதுவா |
| 3 | 19 | செவ் | திர28-50 | பூரட்7-33 | ம7-33அ | வியாதியஸ்தர் குளிக்க |
| 4 | 20 | புத | ச○20-8 | உத்0-50<br>ரேவ54-10 | சித்0-50ம | அவமாகம், பௌர்ணமி, அன்னுபிஷேகம் |
| 5 | 21 | வியா | பவு11-43 | அஸ்48-10 | அ48-10சி | கோஜாகரி விரதம் |
| 6 | 22 | வெ | பிர4-18<br>துதி57-53 | பர43-13 | சித்60 | அசூன்யசயன விரதம் [கை 30-35 |
| 7 | 23 | சனி | திரி55-35 | ※39-48 | அமி60 | கிருத்திகை, சுவாதி கார்த் |
| 8 | 24 | ஞா | சது50-10 | ரோ38-5 | சித்60 | விருச்சிகாயனம் 9-20 |
| 9 | 25 | திங் | பஞ்49-23 | மிரு38-30 | அ38-30சி | சீமந்தம், சர்வமுகூர்த்தம் |
| 10 | 26 | செவ் | சஷ்50-33 | திரு40-55 | ம40-55-சி | மரணயோகம் |
| 11 | 27 | புத | சப்53-48 | புன-45-20 | சித்60 | காதுகுத்த, வித்தியாரம் பம் செய்ய |
| 12 | 28 | வியா | அ58-38 | பூச51-20 | அ51-20சி | அசோகாஷ்டமி |
| 13 | 29 | வெ | நவ60 | ஆயி58-20 | மர60 | திருதினஸ்பிருக் |
| 14 | 30 | சனி | நவ4-30 | மக-60 | அமி60 | திருதினஸ்பிருக் [எழுத |
| 15 | 31 | ஞா | தச10-53 | மக5-45 | ம5-45சி | ஆயுதம்பயிற்ற, சித்திரம் |
| 16 | நவம்பர் 1 | திங் | ஏ17-10 | பூர13-23 | சித்60 | சர்வமத்வ ஏகாதசி |
| 17 | 2 | செவ் | து23-0 | உத்20-28 | அ20-28சி | [திரி |
| 18 | 3 | புத | திர28-0 | அஸ்26-40 | ம26-40சி | பிரதோஷம், மாசசிவராத் |
| 19 | 4 | வியா | சது31-58 | சித்31-38 | சி31-58அ | தீபாவளிபண்டிகை |
| 20 | 5 | வெ | ●34-52 | சுவா36-10 | சித்60 | கரிநாள், சர்வத்ர அமாவாசை, கேதாரகவுரிவிரதம் |
| 21 | 6 | சனி | பிர36-38 | விசா39-23 | சித்60 | |
| 22 | 7 | ஞா | து37-30 | அனு41-43 | மர60 | |
| 23 | 8 | திங் | திரி37-27 | கேட்43-3 | சித்60 | |
| 24 | 9 | செ | சது36-28 | மூல43-33 | அ43-33சி | |
| 25 | 10 | புத | பஞ்34-40 | பூரா43-10 | அமி60 | |
| 26 | 11 | வியா | சஷ்31-45 | உத்41-50 | சித்60 | |
| 27 | 12 | வெ | சப்28-5 | திரு39-38 | ம39-38சி | |
| 28 | 13 | சனி | அ23-23 | அவி36-28 | ம36-28அ | |
| 29 | 14 | ஞா | [illegible]7-50 | [illegible]தை32-35 | சித்60 | |
| 30 | 15 | திங் | தச11-40 | [illegible]28-0 | ம28-0சித் | விருச்சிகாவி-48-3 |

| | | | |
|---|---|---|---|
| | செ | | ராகு |
| குரு | 8உ துலா-சுக்<br>9 ,, விரு-புத | | |
| கே | சனி | சூரிய புதன் | சுக் |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.

169842
600



# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம் (மூன்றும் பதிப்பு)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் ஷை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.



☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றும் பதிப்பு இப்போது வெளி வந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீக்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

## மலையை விழுங்கிய மகாதேவன் கதை

படிக்கப் படிக்கச் சிரிப்பையுண்டாக்குவது. அளவற்ற ஆனந்தந் தருவது. அறிவை வளர்ப்பது. சகலரும் வாசிக்கத்தகுந்தது. விலை அணு 6.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

மர்மங்கள் வெளியாய்விட்டன!

# எதன் மர்மங்கள்?

# மணவாழ்க்கையின் மர்மங்கள்

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர்வேத, யூனானி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக்கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியமாகும்; கையி லெடுப்பதே யோக்கிய மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் நேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலையாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்தினவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் எம்மால் வெளியிடப்பட்ட **"கோக்கோகக்கோலம்"** என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மணவாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—4—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 | 0 | மதனாதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | 0 | ரதிமதன சிருங்கார ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 8 | 0 | | | | |

## வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 ரூ | 7 | 8 | சௌந்தர கோகிலம் ரூ. | 1 | 8 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கயர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

## தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| கமலாக்ஷி | 1 | 12 | ஞானசம்பந்தம் | 1 | 4 |
| ஞானபிரகாசம் | 1 | 8 | சிவஞானம் | 1 | 4 |
| ஞானம்பிகை | 1 | 8 | விஜயசுந்தரம் | 2 | 0 |

## ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விஜயராகவன் ரூ. | 1 | 0 | மோஹனசுந்தரம் ரூ. | 0 | 12 |
| இராஜேந்திரன் | 1 | 0 | ஆநந்தகிருஷ்ணன் | 0 | 12 |
| இராஜாம்பாள் | 0 | 12 | வரதராஜன் 2-பாகம் | 2 | 0 |
| சந்திரகாந்தா | 0 | 12 | ஜெயரங்கன் அச்சில் | | |

விலாசம்:—**ஆரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை,**

மஞ்சள் அறையின் மர்மம்

இதுகாறும் எழுதிய பல துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனையும் வாசித்தால் இத்தகைய ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றன வாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்ந்திருக்கின்றன. விலை ரூ. 1—8—0

## கமலசேகரன்

ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைபோல் அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாக விருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரியமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

## பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.

## நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0

**தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்,**

**Now Ready!** **Book Your Order Early !!**

## MAHABARATHA BY S. T. IYENGAR M.A., L.T.

Being a Concise yet beautiful narration of the Subject-matter commencing from the Boyhood of the Pandavas to the very end *viz.* the re-establishment of peace, contentment and everything that is virtuous. Every incident is portrayed suitably with half tone pictures that tell their own tale. A Book that *must* be read by every one. A splendid piece of literature.—*As. 12 per copy.*

# G. W. M. REYNOLDS'

## BOLD TYPE EDITIONS.

| | | | Rs. | As. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. ... | 17 | 0 |
| 2. | Joseph Wilmot ... | 8 vols. ... | 5 | 0 |
| 3. | Ellen Percy ... | 8 vols. ... | 5 | 0 |
| 4. | Mary Price ... | 8 vols. ... | 5 | 0 |
| 5. | Rye House Plot ... | 4 vols. ... | 3 | 0 |
| 6. | The Young Duchess ... | 4 vols. ... | 3 | 0 |
| 7. | Rosa Lambert ... | 4 vols. ... | 3 | 0 |
| 8. | Loves of the Harem ... | 4 vols. ... | 3 | 0 |
| 9. | Margaret ... | 4 vols. ... | 3 | 0 |
| 10. | The Massacre of Glencoe | 4 vols. ... | 3 | 0 |
| 11. | The Virgin's Kiss ... | 4 vols. ... | 3 | 0 |
| 12. | Canonbury House ... | 3 vols. ... | 2 | 4 |
| 13. | The Mysteries of Old London | 3 vols. ... | 2 | 4 |
| 14. | Pope Joan ... | 3 vols. ... | 1 | 12 |
| 15. | The Soldier's Wife ... | 2 vols. ... | 1 | 8 |
| 16. | May Middleton ... | 2 vols. ... | 1 | 8 |
| 17. | Faust ... | 2 vols. ... | 1 | 8 |
| 18. | Leila or the Star of Mingrelia | 2 vols. ... | 1 | 8 |
| 19. | Robert Macaire ... | 2 vols. ... | 1 | 4 |
| 20. | Mary Stuart ... | 2 vols. ... | 1 | 4 |
| 21. | Seamstress ... | (Complete) | 1 | 0 |
| 22. | Grace Darling ... | " ... | 0 | 12 |
| 23. | The Young Fisherman | " ... | 0 | 10 |
| 24. | Agnes ... | 9 vols. ... | 6 | 0 |
| 25. | Kenneth ... | 4 vols. ... | 3 | 0 |
| 26. | Omar ... | 4 vols. ... | 3 | 0 |
| 27. | Coral Island ... | 4 vols. ... | 3 | 0 |
| 28. | The Wagner ... | 3 vols. ... | 1 | 12 |
| 29. | Master Timothy's Book Case | 3 vols. ... | 1 | 12 |
| 30. | Parricide ... | (Complete) | 1 | 12 |
| 31. | Stories Told by a Gendarme | (Complete) | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | ... | 1 | 0 |

## ALFRED or Adventures of a French Gentleman.

This novel, written by G.W.M. Reynolds, during his exile in the French Shores is indeed the most eloquent presentation of a lively French plot, in which play several Ladies & Gentlemen in various rolls of love, fashion and adventure peculiar to the French Shores. The comprehensiveness of the plot, the development of the Story proper, the nnmerous eloquent descriptions and appealing dialogues of characters in love and adventurous scenes and the sure methods of the clever French detective in bringing to book the very clever and very unscrupulous gang of dacoits will be very interesting throughout. Numerous intrigues of a highly absorbing nature interleave the pages with the charm that is its own.

**In One Vol. Re. 1 0 0.**

*Apply to:*—**SUPERIOR WATCH Co.,**

***P. B. No. 167, Madras.***

# பவளத்தீவு 2-பாகம்.

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும். விலை ரூபா 3.

# கனகபூஷணம்

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுது வாராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்துகொள்ளக்கூடியது.

2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0

| | |
|---|---|
| மெடீரியா மெடிகா ஒரு அருமையான வைத்திய நூல் ... | 3—0—0 |
| ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1–12—0 |
| கைவல்ய நவநீத வசனம் ... ... ... | 1—8—0 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

**அணா 4-தான்**

இதுவே சமயம். சொல்ப செலவினால் உண்மையைக் கற்றுத் திரவியத்தை அடையலாம். இதர சாஸ்திரங்களைப் போன்று அல்ல. தாவரத்திலிருந்து, இங்கி, சோப், திரி வகைகள், சீல் அரக்கு, கார்பன் பேப்பர், சிமெண்ட், பவுடர்கள், பேஸ்ட், சாயம், பாகு கிளஸரைன், மருந்து தினுசுகள், பல்பொடி முதலிய அருமையான தொழில்களைச்செய்து மணி 1-க்கு அணா 8-முதல் ரூ. 2-வரையில் சம்பாதிக்கக்கூடிய முறைகளடங்கிய "ஆர். ஜி. பால்ஸ் முறைகள்" எனும் அழகிய சுவடியே. வியாபாரிகளுக்கு ஏராள கமிஷன். ஷை சுவடி ஒன்று வாங்குவோர்க்கு நூலாசிரியர் படம் இனாம். (5-சுவடிகள் 1-ரூபாய்.)

இஃது மதுரை ம-ா-ா-ஸ்ரீ வைத்திய பூபதி டாக்டர் ஆர். எஸ். பதி. அவர்களின் இனிய முகவுரையைக் கொண்டது.

விலாசம்:—கலிவ. தீ. ர. கோபாலகிருஷ்ணன், கைத்தொழில் ஆசிரியர்;

திண்டிவனம் (தென்னாற்காடு ஜில்லா)

---

படிக்கப் படிக்கச் சிரிப்பு ! அடிக்கடி உண்டாகும் ஆநந்த சிரிப்பு !!

அவுட்டுச் சிரிப்பு ! ஆர்பாட்டச் சிரிப்பு ! அடங்காச் சிரிப்பு !

எது ? எங்கே ? எது ?

அதுதான் வாசிப்போர் மனதை மகிழச்செய்து,

மடையர்களை மாண்புமிக்கோராக்கி, கடையரைக் கடைத்தேற்றும்

கண்ணியமிக்க **கலியுக புளுகன்** என்னும் நூல்

விலை சொற்பம்! விஷயமோ அற்புதம்! காப்பிகள் கொஞ்சந்தான். உடனே பெற்றுக் கொள்ளுங்கள். தாமதம் வேண்டாம்! விலை அணா 8.

6½-அணா. தபால் தலைகளை அனுப்புவோர்க்கு உடனே தபால் செலவின்றித் தன் வீடுதேடி ஓடிவரும் இந்நூல். எந்ததேசத்து தபால் தலை வேண்டுமானாலும் அனுப்பலாம். **ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,**

434 நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் (P.O), (ஆ) சென்னை.